# வயல் 5

கலை இலக்கிய சமூக அறிவியற் காலாண்டிதழ்

ஆண்டு: 5 அறுவடை: 5 1993 ஜனவரி - மார்ச்



## கவிஞர் சுபத்திரன்

## நினைவு மலர்

ஒரு கோடிக் கவிதைகளால்
உலகம் போற்றும்
பெருங் கவிஞன் என நாமம்
பெற்றாலும் அஃது
ஒரு சொட்டு இரத்தத்தை
உரிமைப் போரில்
தருபவன் புகழ் முன்னே
தூசு! தூசு!! — சுபத்திரன்

15/-

இலக்கியம் இல்லாச் சமூகம் இயக்கம் இல்லாச் சமூகம்

*With Best Complimnts From:*

# DELANI STORES

DEALERS IN
GROCERIES, STATINERY AND
FROZEN FOODS

**22, BAR ROAD**
**BATTICALOA.**

'தமிழ் எங்கள் இளமைக்குத் தாய் இன்பத்
தமிழ் எங்கள் புலவர்க்கு எறிகின்ற வேல்

# வயல்

ஆசிரியர்: சாருமதி 1993 ஜனவரி — மார்ச்

## ஆசிரியர் தலையங்கம்

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் 'வயல்' வெளிவருகின்றது

'வயல்' இப்பொழுது தனிமனித முயற்சியாகவே வெளி வருகின்றது.

சிறு சஞ்சிகை நடாத்தல் இலாபகரமான முயற்சியன்று. அதிலும் மட்டக்களப்பில் இருந்து நடாத்துதல் முதலுக்கும் மீட்சி இல்லாத முயற்சி. இதை தெரிந்து கொண்டே முயற்சியில் இறங்கி உள்ளோம். நஷ்டங்களை ஏற்றுக் கொண்டு வயல் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வெளிவரும்.

பணம் மிஞ்சிப் போய் செய்யும் வேலை இது அல்ல. மிகுந்த பொருளாதார நெருக்கடிகளுக்குள் மத்தியில்தான் நாம் வயலை வெளியிடுகின்றோம். சும்மா இருப்பதை விட நாம் வாழும் சமுதாயத்திற்கு எதையாவது செய்தல் வேண்டும் என்று எண்ணியதாலேயே மீண்டும் வயல் வெளிவருகின்றது.

இம்முறை வயல் சுபத்திரன் நினைவு மலராக வெளிவருகின்றது. கவிஞர் சுபத்திரன் மட்டக்களப்பு பிரதேசத்தின் முற்போக்கு கவிஞர் ஆவார். மட்டக்களப்பில் முற்போக்கு சிந்தனையாளர்களை உருவாக்குவதில் அத்திவாரமாக நின்று உழைத்தவர் கவிஞர் சுபத்திரன் ஆவார்.

சுபத்திரன் 1976-10-30 அன்று அகால மரணம் அடைந்ததில் இருந்து இன்று வரை அவர் பொருட்டு அவர் நினைவுகளைப்பேணும் வகையில் எதுவுமே செய்யப்படவில்லை. 14 வருடங்கள் சென்று விட்

டன. இப்பொழுதுதான் இப்படி ஒரு மலரை வெளியிடவாவது சந்தர்ப்பம் கிட்டிற்று. வெகு விரைவில் சுபத்திரன் கவிதைகளின் தொகுதி வயல் வெளியீடாக வெளிவரவுள்ளது.

இறுதியாக வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள். வயலைப் பணம் கொடுத்து வாங்கி அதன் வளர்ச்சிக்கு உதவுங்கள்.

---

## படைப்பாளிகளுக்கு ! !

உங்கள் ஆக்கங்களை 'வயல்' எதிர்பார்க்கின்றது.
நீங்கள் யாராகவும் இருக்கலாம். படைப்புக்கள்
தரமானவையாக இருப்பின் வயலின் வரப்புக்கள்
அதைத்தாங்கிக் கொள்ள தயாராக இருக்கின்றது.

தொடர்பு:


க. யோகநாதன்
இல 37, 2ம் குறுக்குத்தெரு,
வேலூர் - கல்லடி,
மட்டக்களப்பு.
இலங்கை.

MR. K. YOGANATHAN
No 37, 2 ND CROSS STREET
VELOOR - KALLADY,
BATTICALOA.
REP: OF: SRI LANKA.

# கம்யூனிசம் காலாவதி ஆகி விட்டதா?

க. கனகசுந்தரம்

அண்மைக் காலங்களில் இரஷ்யாவிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் நிகழ்ந்த அரசியல் மாற்றங்கள் இன்று உலகில் ஒரு முக்கிய கேள்வியை எழுப்பி உள்ளது. அது தான் கம்யூனிசம் காலாவதி ஆகி விட்டதா? என்ற கேள்வி.

இக்கேள்விக்கு சாதக, பாதக மான விவாதங்கள் இன்று நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. ஏகாதிபத்திய, முதலாளித்துவ சக்திகள் கம்யூனிசம் காலாவதி ஆகிவிட்டது மார்க்சிசம் தோற்றுவிட்டது என்று கடுமையான பிரச்சாரங்கள் செய்கின்றனர். இப்பிரச்சாரங்களை அவர்கள் பல் வேறு ரூபங்களில் செய்கின்றனர்.

இக் கட்டுரையில் நான் கிழக்கு ஐரோப்பாவிலும் இரஷ்யாவிலும் உண்மையில் என்ன நடந்தது என்பது தொடர்பான எனது அவதானங்களைச் சுருக்கமாகத் தர முயல்கின்றேன்.

இக்கட்டுரையாளனாகிய நான் மார்க்சிசத்தில் ஆழ அகலம் கண்ட கம்யூனிசச் செயல் வீரனோ அறிஞனோ அல்ல. ஓர் சராசரி மனிதன் ஒரு சராசரி மனிதனின் அவதானமாகவே இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

இரஷ்யாவினதும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளினதும் இன்றய நிலையை சரியாகப் புரிந்து கொள்ள அவற்றின் முன் வரலாற்று அறிவு அவசியம்.

1917 இல் அக்டோபரில் லெனினது தலைமையில் இரஷ்யாவில் சோசலிசப் புரட்சி வெற்றி கொள்கின்றது. இந்த வெற்றியைத்தான் பாரதியும் 'ஆகா என்று எழுந்தது பார் யுகப் புரட்சி' என்று பாடினான்.

இரஷ்யர்கள் மன்னர்களை ஜார் என்று அழைப்பார்கள். 1917 இல் லெனின் தலைமையில் நிகழ்ந்த புரட்சி 'ஜார்' மன்னனின் கொடுங்கோன்மை ஆட்சிக்கு எதிரான போராட்டத்தின் முடிபு எனலாம்.

இராஷ்யாவில் 'ஜார்' மன்னன் நடாத்திய கொடுங்கோன்மை சொல்லும் தரம் அன்று. ஜாராட்சியின் இக்கொடுமை வரலாற்றில் மூடிமறைக்கப்பட முடியாத ஒன்று லெனினின் சகோதரர்கூட அந்த ஜார் ஆட்சியின் கொடுமைக்குப் பலியானவர்களில் ஒருவரே ஆவார்.

இவ்வாறான கொடுங்கோன்மை மிக்க ஜாரின் ஆட்சியை எதிர்த்தே இரஷ்ய மக்கள் போராடினர். அப்போராட்டத்திற்கு மார்க்சிச வழி நின்று தலைமை கொடுத்த 'போல்ஷ் விக்' கட்சியின் தலைவரே லெனின்.

லெனினிற்கு முன்பு மார்க்சிசம் கூறிய பாட்டாளிகளின் ஆட்சியாகிய சோசலிசத்தை ஆட்சிபீடம் ஏற்ற பல முயற்சிகள் நடந்தது உண்டு. ஆயின் அவை வெற்றி அளிக்கவில்லை. 1871 ஆம் ஆண்டு பிரான்சிய நாட்டில் தொழிலாளர் வர்க்கம் முதன் முதலில் அரசாட்சியைக் கைப்பற்றியது. ஆயின் அவ்வாட்சி ஒரு சில நாட்கள் மட்டுமே உயிர்நிலைத்தது. பிற்போக்கு சக்திகள் இவ்வாட்சியை முறியடித்தனர். இந்த அநுபவங்களையெல்லாம் தொகுத்து அதன் அறிவு கொண்டே லெனினால் பாட்டாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றும் ஒரு வெற்றிகரமான புரட்சிக்குத் தலைமை தாங்க முடிந்தது.

புரட்சியில் இரஷ்யப் பாட்டாளிவர்க்கம் வெற்றி பெற்ற நிகழ்ச்சி முழு உலகையுகமே ஓர் குலுக்கு குலுக்கிய நிகழ்ச்சியாகும். மனித வரலாற்றிலேயே நிகழாத ஓர் சம்பவமாக அது அமைந்தது. அதுவரை மனித குலத்தில் காணப்பட்ட அரசுகள் யாவும் சொத்துடமை வர்க்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அரசுகளே ஆகும். ஆனால் 1917ஆம் ஆண்டின் அக்டோபர் புரட்சி இதனை மாற்றி அமைத்தது. சொத்துடமை அற்ற இழப்பதற்கு உயிரையும், அடிமை விலங்கையும் தவிர வேறு எதுவும் அற்ற ஜனக்கூட்டத்தின் பிரதிநிதிகளுடைய ஆட்சியாக அது அமைந்தது.

உலகம் பரந்து வாழ்ந்த பாட்டாளிகள், முற்போக்கு சிந்தனை கொண்ட அறிவாளிகள், அனைவரும் இரஷ்யாவின் அக்டோபர் புரட்சியை வரவேற்றனர். ஆயின் வீழ்த்தப்பட்ட இரஷ்யப் பிற்போக்கு சக்திகளும், உலகின் ஏகாதிபத்திய, முதலாளித்துவ சக்திகளும் இரஷ்யாவில் ஏற்பட்ட சோசலிசப் புரட்சியை முளையிலேயே நசுக்கி அழித்து விட முயன்றனர். அவர்கள் லெனினைக் கொல்லவும் சதிசெய்தனர். லெனின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகினார். ஆயின் உடன் இறந்து விட வில்லை ஆனால்துப்பாக்கிச் சூடு அவரை நோயாளி ஆக்கியது. சில மாதங்களில் லெனின் மரணமானார். லெனினை அடுத்து ஜோசப்ஸ்டாலின் இரஷ்யாவின் தலைவர் ஆனார்.

கலகங்களைத் தூண்டி விடுவதின் மூலம், உள்ளூரில் சதிகளை மேற்கொள்வதின் மூலம் சோசலிச ஆட்சியை வீழ்த்த முடியாத சர்வதேச பிற்போக்கு சக்திகள் ஜெர்மனியை கருவியாகப் பாவித்து இரஷ்யாவின் சோசலிச ஆட்சியை வீழ்த்த திட்டம் தீட்டினார். இதன் காரணமாய் ஜெர்மனியில் பிற்போக்கு சக்திகள் (குறிப்பாக அமெரிக்க பிரித்தானிய முதலாளி வர்க்கம்)ஹிட்லரை வளர்த்தார்கள் ஹிட்லர் மூலம் இரஷ்யாவிற்கு வர இருந்த ஆபத்தை உணர்ந்தார் ஸ்டாலின். ஆபத்தை தள்ளிப் போட்டு அந்தக் காலத்திற்குள் ஹிட்லரிடம் இருந்து வரக் கூடிய ஆபத்திற்கு எதிராக இரஷ்யாவைத் தயார் செய்யும் பொருட்டு ஸ்டாலின் ஹிட்லரோடு ஆக்கிரமிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார். ஆயின் அமெரிக்க. பிரித்தானிய பிற்போக்கு சக்திகள் இரஷ்யா ஹிட்லரிடம் வீழ்ச்சி

அடையப் போகும் நாட்களை எண்ணிக் கொண்டு இருந்தனர். ஆயின் ஏகாதிபத்திய சக்திகள் எதிர்பார்க்காத நேர் எதிர் நிகழ்ச்சியும் நடந்தது. வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது போல் ஹிட்லர் மேற்குலகின் மீதும் போரைத் கொடுத்தான். இரஷ்யாவின் 'ஸ்டாலின் கிராட்டை' ஹிட்லரின் படைகள் முற்றுகை இட்டன. இரஷ்யா மட்டும் தோல்வியை சந்தித்து இருந்தால் முழு உலகமே ஹிட்லரின் பாசிசத்திற்கு பலியாகி இருக்கும். நடந்ததோ வேறு. இரஷ்யாவின் செம்படைகள் ஜெர்மனியின் முற்றுகையை முறியடித்தன. செம்படைகள் ஜெர்மனிக்குள்ளும் முன்னேறிச் சென்றன.

இரஷ்யப் படைகள் முன்னேறிச் சென்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இரஷ்ய செம்படையின் தீரத்தால் ஆகர்சிக்கப்பட்டன. போலந்து, ஹங்கேரி, பல்கேரியா, செக்கஸ்லோவாக்கியா, கிழக்கு ஜெர்மனி போன்ற கிழக்கு ஐரோப்பிய பிரதேசங்களில் இருந்த கம்யூனிச ஆதரவு சக்திகள் இரஷ்யாவின் துணையோடு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டன. இரண்டாம் உலகமகா யுத்தத்தினால் முதலாளித்துவ சக்திகளுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாட்டையும், அவற்றின் பலவீனங்களையும் சரியாக மதிப்பீடு செய்த தலைவர் மாசேதுங் அவர்களின் தலைமையிலான சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அமெரிக்காவையும் அமெரிக்காவின் அடிவருடியாகிய சியாங்கை ஷேக் கும்பலையும் தோற்கடித்தது. சோசலிசம் ஆசியாவிற்கும் அறிமுகம் ஆகியது. இறுதியாக சோசலிச நாடாகிய இரஷ்யாவை அழிக்க உலக ஏகாதிபத்தியம் செய்த சதி பல நாடுகள் சோசலிசப் பாதையில் அடியெடுத்து வைக்கும் நிலையில் வந்து முடிந்தது.

ஜாரின் ஆட்சியில் நலிந்து கிடந்த இரஷ்யா ஸ்டாலினின் தலைமையில் முன்னேற்றம் கண்டது. உலகின் வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளை பொருளாதாரத்தில் தொழில் நுட்பத் துறையில், விஞ்சும் வகையில் இரஷ்யா வளர்ச்சி கண்டது. சோசலிசத்தை நோக்கி இயல்பான வகையில் வந்து சேராத கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோசலிச நிர்மாணத்தை உத்தரவாதம் செய்யும் தலையாய பொறுப்பும் இரஷ்யா மீது சுமத்தப்பட்டது. இப்பொறுப்பை ஸ்டாலின் மிகப் பொறுப்புணர்வுடன் செய்தே வந்தார். ஸ்டாலின் மரணம் அடைந்ததும் பிற்போக்கு சக்திகள் இரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரத்தை கைப்பற்ற முனைந்தனர். குருஷ்சேவ் அதிகாரத்திற்கு வந்தான். இரஷ்யாவை முதலாளித்துவ திசையில் நோக்கித் திருப்பினான்.

அறுபதுகளின் முன்பகுதி இரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் 20 வது தேசிய மகாநாடு. அந்த மகாநாட்டில் குருஷேவ் ஸ்டாலினை கண்டனம் செய்தான். இரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியினுள் முதலாளித்துவ மார்க்கத்தை முன்மொழிந்தான். ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளுடன் கூடிக்

குலாவும் கொள்கையுடன் ''சமாதான சகஜீவனம்'' என்ற கோட்பாட்டை முன்வைத்தான். அடிமைப்பட்ட நாடுகளின் சோசலிச புரட்சி ஆயுதப் போராட்டம் இன்றி சாத்தியம் என்று கூறினான். இரஷ்யாவின் பாட்டாளி வர்க்க அரசை ''எல்லா மக்களுக்கும் ஆன அரசு'' என்றான். இவை போன்ற திரிபுவாத மார்க்கங்களை குருஷேவ் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது தேசிய மகாநாட்டில் முன்மொழிந்தான். இதனை அப்பட்டமான முதலாளித்துவப் பாதை என்பதை சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் செய்தது உலகின் புரட்சிகர சக்திகள் கண்டனம் செய்தன.

இந்த இடத்தில் ஓர் கேள்வி எழுவதற்கு இடம் உண்டு. பாட்டாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றிய நாட்டில் அதுவும் பட்டாளி வர்க்கக் கட்சியின் தலைமையை எவ்வாறு முதலாளித்துவ சக்திகள் கைப்பற்ற முடிந்தது? இது பற்றியும் பாட்டாளி வர்க்க ஆசான்கள் கருத்துக்களை கூறியே உள்ளனர்.

'பாட்டாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுவது என்பது ஓர் நிலைமாற்றமே. வீழ்த்தப்பட்ட சொத்துடமை வர்க்கங்கள் தமது தோல்வியை ஒப்புக் கொண்டு அமைதி அடைந்து விடாது. அவர்கள் சர்வதேச பிற்போக்கு சக்திகளின் துணையோடு மீண்டும் அதிகாரத்தைப் பெற முயல்வர். ஆகவே சோசலிச புரட்சியின் பின்னரும் வர்க்கப் போரட்டம் தொடரும். குறிப்பாக பாட்டாளி வர்க்க கட்சி புரட்சி செய்து நாட்டின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின் வீழ்த்தப்பட்ட ஆளும் வர்க்கத்தின் இலக்காக பாட்டாளி வர்க்கக்கட்சியே அமையும். எனவே புரட்சியின் பின் வர்க்கப்போராட்டத்தின் மையமாக பாட்டாளி வர்க்கக்கட்சியே இருக்கும்'' என்ற உண்மையை தோழர் மா ஓ சே துங் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்.

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றி மீண்டும் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றும் முதலாளித்துவ சக்திகளின் தந்திரோபாயத்தை முறியடிக்க கட்சி அங்கத்தவர்கள், மக்கள், அரசியல் விழிப்புடனும், வர்க்க போராட்ட உணர்வுடனும் எப்பொழுதும் வைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். சோசலிச சமுதாயத்திலும் தொடர்ச்சியான வர்க்கப் போராட்டம் என்ற இந்தத் தேவையைக் கருத்திற் கொண்டே மா ஓசேதுங் சீனாவில் கலாச்சாரப் புரட்சியை அறிமுகம் செய்தார்.

குருஷேவ், பின் பிரஷ்னேவ் கொசிஜின் போன்ற முதலாளித்துவப் பாதையாளர்கள் இரஷ்யாவை படிப்படியாக முதலாளித்துவத்தை நோக்கி வழிநடாத்திச் சென்றனர். இவர்கள் யாவரும் ஸ்டாலினைக் கண்டனம் செய்தனர். சரியான சோசலிச மார்க்கத்தை உதாசீனம் செய்தனர். தமது நாட்டின் பொருளாதார அரசியல் இலாபங்களுக்காக ஏனைய நாடுகள் மீது தமது அதிகாரக் கரங்களை வலுப்படுத்தினர். இரஷ்யாவின் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட 'பெரும் ருஷ்ய தேசிய இனத்தை,

சேர்ந்த முதலாளித்துவப் பாதை யாளர்கள் சோவியத் ஒன்றியத்துள் இணைந்து இருந்த சிறுபான்மைத் தேசிய இனங்களின் குடியரசுகளைச் சுரண்டினர்.

ஸ்டாலின் காலத்தில் சோசலிசப் பாதையில் காலடி எடுத்து வைத்து இரஷ்யாவின் தயவில் வாழ்ந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளை சோசலிசத்தின் பெயரால் சுரண்டுவதற்குப் புதிய இரஷ்ய ஆட்சியாளர்களுக்கு வாய்ப்பாயிற்று. ''சோசலிசக் குடும்பம்'' என்ற கோட்பாடு முன்வைக்கப் பட்டது. குடும்பத் தலைவன் பாத்திரத்தை புதிய இரஷ்ய ஆட்சியாளர்கள் தாமே எடுத்துக் கொண்டனர். இதன் மூலம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வளங்களை இவர்கள் கொள்ளையிட்டனர். இவ்வாறு சென்று கொண்டு இருந்த இரஷ்யாவை சீனா சோசலிச நாடு என்று ஏற்க மறுத்தது. இரஷ்யா ஓர் 'சமூக ஏகாதிபத்திய நாடு' என அன்று சீனக் தலைவர்கள் கூறினார்கள். இரஷ்யாவும் அதற்குத் தகவே நடந்து கொண்டது. 1968 ஆம் ஆண்டு இரஷ்ய ஆட்சியாளர்கள் செக்கஸ்சிலோவாக்கியா மீது படையெடுத்தனர். அங்கு அதிகாரத்தில் இருந்த 'டூப் செக்' தலைமையிலான அரசாங்கத்தை மாற்றி அமைத்தனர். தமது தயவில் தங்கி இருந்த வியட்நாமைக் கொண்டு கம்பூச்சிய அரசாங்கத்தைக் கவிழ்த்தனர். ஆப்கானிஸ்தான் மீது படை எடுத்தனர் இரஷ்யாவின் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இரஷ்யா ஒரு சோசலிச நாடு அல்ல என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டியது. இவ்வாறு சோசலிசப் பாதையை விட்டு 1960களில் இருந்து விலகிச் சென்ற இரஷ்யாவில்தான் இன்றய அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தேறி உள்ளன. மீண்டும் இரஷ்யாவில் ஜார் ஆட்சிக்கால பதாகைகள். ஜார் ஆட்சிக் காலப் பெயர்கள், கொடுங்கோன்மையாளன் ஜார் மன்னனின் எலும்புகள் பற்றிய தேடல்கள்.

இன்று 'சோவியத் யூனியன்' என்ற கட்டமைப்புக்குள் இருந்த இரஷ்யாவின் சுயாட்சிக் குடியரசுகள் பிரிந்து செல்லும் நிலை இரஷ்யாவின் தயவில் வாழ்ந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இரஷ்யாவிற்கு எதிராக திரும்பி உள்ளன. இரஷ்யாவிற்கு எதிரான கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் இந்த எதிர்ப்பை உலக ஏகாதிபத்திய சக்திகள் கம்யூனிச எதிர்ப்பாக மாற்ற முயன்றனர். அதில் சிறிது வெற்றியும் பெற்றுள்ளனர்.

இதுவே அண்மைக் கால இரஷ்யாவிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் சுருக்கமான வரலாற்றுப் பின்னனியாகும். இந்த வரலாற்றுப் பின்னனியை வைத்துக் கொண்டே இரஷ்யாவிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களை மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**இரஷ்யாவினதும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளினதும் அரசியல் மாற்றங்கள் பற்றி:**

ஸ்டாலினுக்குப் பின்னர் இரஷ்யாவில் மார்க்சிச அநுகுமுறையற்ற ஆட்சியாளர்களுக்கு ஏற்

பட்ட தோல்வியே இரஷ்யாவிற்கும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் இன்று ஏற்பட்டுள்ள நிலை. எனவே இது மார்க்சிசத்தின் தோல்வியல்ல. மார்க்சிசப் பாதையில் இருந்து விலகிச் சென்றவர்களின் தோல்வியே இது.

குருஷேவ் இரஷ்யாவின் அதிகாரத்திற்கு வந்ததையும் அவருடைய ஸ்டாலின் கண்டனத்தையும் மேற்குலகு வரவேற்றது. இரஷ்யாவின் இரும்புத்திரை விலகுகின்றது எனக்கூறப்பட்டது. இறுதியாககொர்பச் சேவ் சோவியத் யூனியனில் கொண்டு வந்த ''கிளாஸ்நாஸ்ட்'' 'பெரஸ்திரோய்கா'' போன்ற தனியார் மயமாகும் பொருளாதாரத் திட்டங்களையும் மேற்குலகு அரசியல் வாதிகள் வரவேற்றுப் பாராட்டினர். இந்த குருஷ்ஷேவ் முதல் கொர்பச்சேவ் வரையிலான இரஷ்யாவின் ஆட்சி பீடம் ஏறியவர்கள் ஸ்டாலினைக் கண்டனம் செய்தவர்களே ஆவார். கம்யூனிசப் பாதையை விட்டு விலகி நடந்தவர்களே ஆவார். இவர்களை உண்மையான மார்க்சிச வாதிகள் அன்று தொட்டு இன்று வரை கண்டித்தே வந்துள்ளனர். இவர்களுக்கு எதிராய் போராடி வந்துள்ளனர். எனவே இவர்களின் வீழ்ச்சி மார்க்சிசத்தின் வீழ்ச்சி அல்ல. கம்யூனிசத்தின் வீழ்ச்சியும் அல்ல. பதிலாக இரஷ்யாவிலும், ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்டுள்ள அண்மைக் கால மாற்றங்கள் மார்க்சிசத்தை விட்டு விலகிச் சென்றவர்களுக்கு ஏற்பட்ட வீழ்ச்சி. மீண்டும் மார்க்சிச நெறியே சரி என்பதை இவர்களின் வீழ்ச்சி எடுத்துக்காட்டியுள்ளது.

ஜார் மன்னனின் ஆட்சிக் காலத்தில் இரஷ்யா சிறுபான்மைத் தேசிய இனங்களின் சிறைக்கூடம் என வர்ணிக்கப்பட்டது. ஜார் மன்னனின் ஆட்சியில் இருந்து விலகிச் செல்லவே அன்றைய இரஷ்யாவின் ஆட்சிக்குள் இருந்த சிறுபான்மை தேசிய இனங்கள் விரும்பின. ஆயின் 1917ம் ஆண்டில் ஏற்பட்ட அக்டோபர் புரட்சியின் பின் பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையை தேசிய சிறுபான்மை இனங்களுக்கு லெனின் வழங்கினார். இதனால் தனித் தனிக்குடியரசுகளாய் தமது சுய விருப்பின் பேரில் இரஷ்யாவின் சிறுபான்மைத் தேசிய இனங்கள் சோவியத் சம்மேளனத்தில் இணைந்து கொண்டன. லெனினுக்குப்பின் இரஷ்யாவின் சிறுபான்மை இனங்களில் ஒன்றான ஜோர்ஜிய இனத்தைச் சோந்த ஸ்டாலின் முழு இரஷ்யாவிற்குமே தலைவராக முடிந்தது. இன்று என்ன நடக்கிறது? ஜோர்ஜியா உட்பட இரஷ்யாவின் தேசிய சிறுபான்மை இனங்கள் இரஷ்யாவில் இருந்து பிய்த்துக் கொண்டு ஓட முயல்கின்றன. குருஷேவ் காலம் முதல்சோவியத் யூனியனின் அதிகாரத்திற்கு வந்த 'பெரும் ருசிய தேசிய இனத்தின்' அதிகாரத்துவ வாதிகளின் தேசிய இன ஒடுக்கு முறையே இதற்குக்காரணமாகும். ஆகவே மார்க்சிசமும் கம்யூனிசமும் காலாவதி ஆகிவிட்ட விடயங்கள் என்று எவ்வாறு கூற முடியும்?

ஆக ஸ்டாலினுக்குப் பின்னர்

மார்க்சிச, கம்யூனிஸ நெறி நின்ற தலைமைத்துவம் இரஷ்யாவிற்கு கிட்டியிருந்தால் இரஷ்யாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இன்றைய நிலை ஏற்பட்டு இருக்காது என்று கூற முடியும்.

## சோசலிசம் என்பது என்ன?

முதலாளித்துவத்தில் இருந்து கம்யூனிசத்திற்கு மாறிச்செல்வதற்கான ஓர் இடைக்கட்டமே சோசலிசம். ஆகவே ஓர் முதலாளித்துவ நாட்டில் பாட்டாளி வர்க்கம் எப்படி முதலாளிவர்க்கத்திற்கு எதிராகப் போராட வேண்டுமோ அப்படியே சோசலிச நாட்டிலும் பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்திற்கு எதிராகப் போராடுதல் வேண்டும். முதலாளித்துவ நாட்டில் பாட்டாளி வர்க்கம் ஆளப்படும் நிலையில் நின்று போராடும் சோசலிச நாட்டில் பாட்டாளி வர்க்கம் ஆளும் நிலையில் நின்று போராடும். ஆக இரு சமுதாயங்களிலும் வர்க்கப் போராட்டம் இருந்தே திரும். உலகம் முழுமையும் சோசலிசமாகமாறி பின்உலக நாடுகள் கம்யூனிசத்தை நோக்கிச் சென்ற பின்னரே வர்க்கப்போராட்டம் இல்லாமல் போகும். தானாக உதிர்ந்து போகும். காரணம் கம்யூனிச சமுதாயத்தில் வர்க்கங்கள் ஒழிந்போகவர்க்கப் போராட்டமும் ஒழிந்து போகும்.அதுவரை உலகில் வர்க்கப் போராட்டம் இருந்தே தீரும்.

இந்த உண்மையை ஸ்டாலினுக்குப் பின் வந்த இரஷ்யாவின் தலமைகள் மறுத்தன. பாட்டாளி வர்க்கம் சோசலிச நாட்டிலும் முதலாளித்துவத்திற்கு எதிராக தொடர்ச்சியாக போராடிக் கொண்டு இருக்க வேண்டும் என்ற உண்மையை எதிர்த்தனர். இதன் மூலம் வீழ்த்தப்பட்ட முதலாளி வர்க்கம் மீண்டும் அதிகாரத்திற்கு வரச் செய்யும் முயற்சியை தடுக்கும் வழியை அடைத்தனர். குருஷேவ் தொட்டு இரஷ்யாவின் அதிகாரத்திற்கு வந்த தலமைகள் இரஷ்யாவின் அரசை பாட்டாளிகளின் அரசு என்று கூறாமல்' எல்லா மக்களுக்குமான அரசு' என்றனர். இந்த 'எல்லா மக்களுக்குமான அரசு' என்ற கோட்பாட்டுக்கு ஊடாக முதலாளித்துவத்திற்கு எதிரான பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தை மழுங்கடித்தனர். இந்த 'எல்லா மக்களுக்குமான அரசு' என்ற கோட்பாட்டின் மூலம் பாட்டாளி வர்க்க அரசிற்குள் முதலாளி வர்க்கம் ஊடுருவி மீண்டும் முதலாளித்துவம் ஆட்சியைக்கைப்பற்ற வழிசமைத்துக் கொடுத்தனர்.

எனவே சோசலிச நாட்டில் கூட வர்க்கப் போராட்டம் உயிர் நிலையில் வைக்கப்பட்டு இருத்தல் வேண்டும். மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கும் முதலாளித்துவ சக்திகளின் முயற்சிகளை பாட்டாளி வர்க்கப் போராட்ட உணர்வை உயிர் நிலையில் வைத்து இருப்பதின் மூலமே முறியடிக்க முடியும். இந்த உண்மையை விளங்கியதினாலேயே சீனாவில் மறைந்த தலைவர் மாசே துங் அவர்கள் 1968 ஆம் ஆண்டு வாக்கில் கலாச்சாரப்புரட்சியை ஆரம்பித்தார். 'தலைமத்துவத்தை தகர்த்து எறியுங்கள்' என நாட்டு மக்களுக்கு, பாட்டாளிகளுக்கு அவர் அறை

கூவல் விடுத்தார். ஆயின் இன்றய சீனத்தலைமை கலாச்சாரப் புரட்சியை கை கழுவி விட்டுள்ளது. இந்நிலை தொடருமானால் எதிர்காலத்தில் சீனாவும் முற்று முழுதான முதலாளித்துவ நாடாகி விடுவதை யாரும் தடுக்க முடியாது.

## மனித குலவரலாற்றில் சோசலிசத்திற்கான போராட்டம்

எப்பொழுதும் சமுதாயப் போராட்டங்கள் ஒரே நேர் கோட்டில் செல்வது கிடையாது. தளம்பல்கள், முன்னேற்றங்கள், பின்னடைவுகள் என்பன போராட்டத்தில் சகஜம். ஒரு டனிதனின் வரலாற்றில் ஒரு 50 அல்லது 100வருடங்கள் பெரும் காலப்பகுதியாகும். ஆயின் மனித சமூக வரலாற்றிற்கு நூறு வருடங்கள் என்பது ஒரு வினாடிக்குக்கூட சமனாக மாட்டாது. பல்லாயிரக்கணக்கான வருடங்களாக உலகை சொத்துடமை வர்க்கங்கள் ஆட்சி புரிந்து வருகின்றன. மனித சமூகத்தின் இந்தப்பழைய மரபு ஒரு நூறு வருடங்களுக்குள் மாறி விடும் என்று எதிர்பாாப்பது மடமைத்தனம். சொத்துடமை அற்ற வர்க்கம் உலகில் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற சிந்தனை ஒரு நூற்றைம்பது வருடங்களுக்குள் ஏற்பட்ட சிந்தனை. இது ஓர் புதிய அநுபவம். இப்பொழுதுதான் தோன்றி வளர்ந்து வரும் வாழ்க்கை ஒன்றின் அநுபவம். எனவே பல்லாயிரக் கணக்கான வருடங்கள் இருந்து வரும் பழமையான மரபை இப்புதிய அநுபவம் ஓர் இரவிற்குள் வெற்றி கொண்டு விட முடியாது. முயற்சி தோல்வி மீண்டும் முயற்சிதோல்வி. இவ்வாறு புதியது தனது அநுபவத்தை விசாலம் ஆக்கிக் கொள்வதின் மூலம் தான் பழையதை வெல்ல முடியும். பழையன கழிதலும் புதியன புகுதலும்தான் மனித குல வரலாறு. ஆயினும் புதியன எடுத்த எடுப்பில் எங்கும் வென்று விடுவதில்லை. அதே பொழுதில் புதியனவற்றின் முயற்சிகள் தோல்வி காண்பதுஎன்பதுபுதியன தகுதி அற்றவைஎன்றும் ஆகிவிடாது. எப்பொழுதும், எதிலும் புதியன முதலில் சந்திப்பது தோல்வியைத்தான். இது கம்யூனிசத்திற்கும் விதிவிலக்கு அன்று. மார்க்சும் ஏங்கல்கம் தமது கம்யூனிஸ்ட் அறிக்கையை வெளியிட்டது 1848ஆம் ஆண்டிலேயே ஆகும். கம்யூனிஸ்ட் அறிக்கை வெளிவந்து இன்னும் 150 வருடங்கள் ஆகவில்லை மார்க்கிசம் என்ற வாழ்க்கை அநுபவத்திற்கு வயது 150 வருடங்கள் மட்டுமே. ஆயின் அது எதிர்த்துப் போராடும் சொத்துடமை சமுதாயத்திற்கு வயது பல்லாயிரம் வருடங்களாகும். என்றாலும் இந்த 150 வருடத்திற்குள் கம்யூனிசம் ஒரு பெரும் சக்தியாய் வளர்ந்து விட்டது இன்றைய உலக அரசியல் நடவடிக்கைகள் அந்தக் கம்யூனிசத்தைச் சுற்றியே எதிராகவோ அல்லது ஆதரவாகவோ நடந்து கொண்டு இருக்கின்றன. இன்றைய ஏகாதிபத்திய முதலாளித்துவ உலகு. கம்யூனிசம் செத்து விட்டது என்று போடும் ஓலம் கம்யூனிசத்தின் உயிர்ப்பையும், அதன் பலத்தையுமே எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

கம்னியூசம் சில நாடுகளைக் கைப்பற்றியது. மீண்டும் அந்நாடுகள் எதிரிகளிடம் வீழ்ந்துள்ளது

இது போராட்டம். முடிபு அல்ல. இன்னும் கம்யூனிசம் வேறு நாடுகளைக் கைப்பற்ற போராடிக் கொண்டுதான்இருக்கின்றது பெரு, பிலிப்பைன்ஸ், கம்பூச்சியா எனப் பட்டியலை நீட்டலாம். நமது அண்டை நாடான இந்தியாவில் 'நக்ஸலைட்டுகள்' என்று அழைக்கப்படும் சம்யூனிசப் போராளிகளின் வளர்ச்சி கம்யூனிசம் சாக முடியாது என்பதையே எடுத்துக் காட்டுகின்றது எனலாம். இரஷ்யாவிலும் இன்று ஸ்டாலினிஸ்டுக்களின் (கம்யூனிஸ்டுக்கள்) செல்வாக்குப் பெருகி வருகின்றது.

காரல் மாாக்ஸ் என்ற மனிதன் பிறந்து வாழ்ந்ததின்பின் உலக முதலாளித்துவ சக்திகள் மார்க்சும் மார்க்சிசமும் கல்லறைக்குச்சென்று விட்டதாக பல தடைவைகள் கூக் குரல் போட்டுள்ளார்கள். ஆனால் இந்தக் கூக்குரல்களுக்கு எல்லாம் மார்க்ஸ் தனது இலேசான புன் சிரிப்பாலேயே பதில் சொல்லிக் கொண்டு இருக்கின்றான். உலகம் இன்னும் இன்னும் சிவந்துகொண்டே உள்ளது. உலகில் உண்மை உள்ளங்கள் உள்ளவரை அந்தத்தாடிக்கார யூதன மார்க்சிற்கு புன் சிரிப்பும் சிம்மாசனமும்தான். அவனை யாரால் சாகடிக்கமுடியும்?முடிபாக

உலகில் ஒடுக்கு முறைகள் உள்ள வரை!

உலகில் ஏகாதிபத்திய முதலாளித்துவ சுரண்டல்கள் உள்ளவரை!

பட்டினியால் மக்கள் செத்துக் கொண்டு இருக்கும் வரை!

ஆயுத முதலாளிகள் உலகில் அழிவுதரும் யுத்தங்களை மக்கள் மத்தியில் திணித்துக் கொண்டு இருக்கும் வரை!

சின்னஞ் சிறார்கள் கோவணாண்டிகளாய் தெருக்களில் கையேந்தி நிற்கும் வரை!

பெண்கள் வீட்டு மாடுகளாய் சாகடிக்கப்பட்டுக் கொண்டு இருக்கும் வரை!

வயிற்றுச் சோற்றுக்காய்பெண்கள் தங்கள் ஆடைகளை அவிழ்த்துக் கொண்டு இருக்கும் வரை!

எவன் சொன்னான் கம்யூனிசம் தோற்றதென்று?
நாய்கள் குரைக்கின்றன சூரியனை நோக்கி அவ்வளவுதான்.

## மனிதன்

ஊன் வடியும் உடம்போடும் உடைந்த கலத்தோடும்
பேன் சிதம்பிப் புழுத்த தலையோடும் - தான் விழுந்து
சேடம் இழுத்துச் செத்தவனின் சொந்த இடம்
பாடம் எழுதுகிறேன் மீட்டு.

— சுபத்திரன்

# அன்புத் தோழன்

# கவிஞர் சுபத்திரன்

— கவிஞர்: செ. சிவானந்ததேவன் —

—★—

எனது நெஞ்சில் என்றும் நிறைந்துள
இனிய நண்பன் சுபத்திரனாவான்!
தனது எனவும் தனக்கு எனவும்
தரணியில் வாழாத் தனிப்பெரும் மகனிவன்
உனது செயல்களே உன்றன் நிலைக்கு
உரிய காரணம் என்றே கூறும்
மனது இவனது மற்றவர் வாழ்வின்
வளர்ச்சியில் மலர்வதே இவனது மகிழ்ச்சி

—★—

கரிய மேனி கொண்டவன் ஆயினும்
கருத்தில் கருமை கவிந்தவன் அல்லன்
பெரிய விழிகள் பெற்றவன் ஆனால்
பெரிய தனங்கள் இவனிடம் இல்லை.
உரிய வேளையில் உரியதைச் செய்து
உலகினில் வாழ்ந்த உத்தமன் இவனது
அரிய குணங்களை அறிந்தவர் ஒரு சிலர்
அவர்கள் தம்முள் அடியேன் ஒருவன்

—★—

மெத்தையில் அமர்ந்து மின்விளக் கேற்றி
மோனையும் எதுகையும் தேடிப் பிடித்து
சத்தை இழந்த தம்மினம் பிழைக்க
பத்துநூறாயிரம் பாடல் புனைவதில்
உத்தமம் ஒருவன் உரிமைப் போரில்
ஒரு சொட்டு இரத்தம் சிந்துதல் என்னும்
தத்துவம் இவனது தாரக மந்திரம்
தரணியில் இவனேர் தனித்துவச் சித்திரம்

உயர்ந்தவர் தாழ்ந்தவர் குலங்களை வகுத்து
உண்மையைப் பொய்யால் மூடியே மறைத்து
அயர்ந்தும் நல்லன ஆற்றிட முனையா
அறிவிலார் தங்கள் அறியாமைகளையப்
பயந்து அறிஞர்கள் பதுங்கிட; ஊத்தை
பரிவுடன் சுமந்திடும் தோழனைப் பாடி
உயர்ந்த வர்ணத்து ஊத்தையும் நாற்றம்
உள்ளது என்பதை உணர்த்திய கவிஇவன்!

—★—

மரமேறி மரமேறி மரத்துப் போன
மனிதர்களின் நிலைபாடி வறுமை நோயாம்
சுரமேறி தொழிலாளர் வர்க்கம் மாழ
சுகமாக வாழ்கின்ற சுரண்டல் வர்க்கம்
உரமேறி உடல் வளர்க்கும் காட்சி பாடி
உளம் நொந்து இனிமேலும் உழைப்போர் தங்கள்
சிரமேறி முதலாளி வர்க்கம் வாழ்தல்
சிரமமென கவிவாளை உயர்த்தி நின்றோன்!

—★—

காசு பெரிதெனக் கருத்தினில் உன்னிக்
கவிதை பாடிடும் கவிஞனாய் இருந்தால்...
நேசம் மிகுந்த நெஞ்சினன் இவனும்
நிறைந்த பணத்தை சேகரித் திருப்பான்
ஆசிக் கவிதையால் அரசியலாளர்தம்
அடிகளை வருட இவன்துணிந் திருந்தால்
தேசம் புகழும் மிகப்பெரும் மனிதனாய்த்
தேசியக் கவியெனும் விருது பெற்றிருப்பான்

—★—

பாவம் இவேனா பாமரர் கவிஞன்
பணத்தின் பொருளின் பதவியின் கிளைகளில்
தாவும் கவியாய்த் தரனியில் வாழத்
தயங்கிய மனிதன்! தனித்துவப் பாதையில்
யாவும் செய்தவன்! பாவும் செய்தான்
ஆகையால் கைப்பொருள் யாவும் இழந்தான்
மேவும் வறுமையால் மெலிந்தான் ஈற்றில்
மேதினி வாழ்வையே முடித்துக் கொண்டான்

# சார்க்: டாக்காவில் இருந்து கொழும்பு வரை ஒரு பொது ஆய்வு

வே. குணரத்தினம்
(விரிவுரையாளர், கி. ப. க.)

மிகத் தெளிவான வேறுபாடுகளைக் கொண்ட இந்தியா, இலங்கை, பாகிஸ்த்தான், பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மாலைதீவு ஆகிய ஏழு நாடுகளும் அவற்றிற்கிடையே காணப்படும் பொதுப்படையான விடயங்களின் மீது தமது கட்டமைப்பினை ஏற்படுத்துவதற்கு முனைந்தன. இந்நாடுகள் வரலாறு, கலாச்சாரம் என்பவற்றால் பிணைக்கப்பட்டிருப்பினும் ஆட்சிமுறையாலும் இராணுவ பொருளாதார சக்திகள் என்பவற்றாலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவ்வாறான வேறுபாடுகள் மத்தியில் தமக்கிடையே சகோதரப்பண்பு புரிந்துணர்வு என்பவற்றின் மூலம் ஒத்துழைத்துச் செயற்படுவதற்கு இந்நாடுகள் உறுதி பூண்டன. இந்த உறுதியின் வெளிப்பாடே சார்க் அமைப்பாகும். இங்கு சார்க் அமைப்பின் தோற்றமும் அதன் பின்னணியும், சாக்கின் நோக்கங்கள் அதன் வளர்ச்சி போன்ற விடயங்களை இறுக்கமாக அதே வேளை ஆழமாக ஆராயப்படுகின்றன.

## தோற்றமும் பின்னனியும்

1985ம் ஆண்டு சார்க் அமைப்பு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது ஆனால் இவ்வமைப்பு உருவாவதற்குப் பல பின்னணிக் காரணிகள் செல்வாக்குச் செலுத்தின. சார்க் அமைப்பைக் கட்டியெழுப்புவதில் பாண்டித்தியம் பெற்ற குழுக்கள் அரசாங்கத்தைச் சாராத அமைப்புக்கள் அரசாங்கத்தைச் சார்ந்த குழுக்கள் ஆகியன 1985ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் முக்கிய பங்கெடுத்தன. 1970ம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் 1980ம்ஆண்டு ஆரம்பத்திலும் தென் ஆசியாவின் பின்னணியை நோக்கும் போது இப்பிரதேசத்தில் சமாதானம் ஸ்திரம், ஒற்றுமை முன்னேற்றம் என்பவற்றை விருத்தி செய்யும் நோக்கோடு ஓர் அமைப்மை நிருவதீர்மானிப்பதற்கான முன்நோக்கு விருப்பு என்பவற்றைக் கொண்டிருந்த போதிலும் அவை உறுதியானதாகக் காணப்படவில்லை. இதனால் பீற்றர் லயன் (Peter lyon) என்பவர் தென்னாசியாவை 'பிராந்திய வாதமில்லாத பிராந்தியம்' எனக்குறிப்பிட்டார். அரசியல் நெருக்கடியில் ஆழமாக சிக்கி சாலனித்துவத்தை நீக்கும் செய்முறையில் இனங்களுக்கிடையிலான சச்சரவுகளில் ஈடுபட்டு சுதந்திரத்

துக்கு பிற்பட்ட தென்னாசியா நம்பிக்கை அற்ற பிரதேசமாக இருந்தது, 'கௌடில்யா (Kautilya) கருதியது போல' உன்னுடைய அயலவன் உன் இயற்கையான எதிரி உன்னுடைய அயலவனின் அயலவன் கட்டாயமாக உனது நண்பனாக இருக்க வேண்டியது இல்லை' என்ற கருத்தின் அடிப்படையில் தென்னாசிய நாடுகளுக்கிடையே உறவு அமைந்திருந்தது.

இந்தியா பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் முரண்பட்ட அரசியலைக் கொண்ட எதிரிகளாக இருந்து வருகின்றன. முன்னர் மத அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்த இந்திய உபகண்டம் பின்னர் பாகிஸ்தான் வங்காளதேசம் என எதிரணிகளாகி இன அடிப்படையில் மேலும் பிரிக்கப்பட்டது. இவ்வாறான பெரிய சிறிய சக்திகள் தோற்றுவிக்கின்ற நிலமை இந்த பிராந்திய சிக்கலுடன் இணைந்தவாறு காணப்பட்ட தேசிய பொருளாதாரத்தின் சமநிலையின்மை சமூகங்களின் தோற்றங்களினால் பிறந்த உளவியல் ரீதியான தடைகள், வேறுபட்ட மதங்களைப் பின்பற்றல், வேறுபட்ட அரசியல் முறைகளை கையாளுதல், ஆகிய பிரச்சனைகள் தனிந்து செல்லும் அறிகுறியைக் கொண்டு இருக்கவில்லை.

1954ம் ஆண்டு நடைபெற்ற கொழும்புச் சக்திகளின் மகாநாட்டில் தெற்காசியாவைப் பாதிக்கின்ற அரசியல் சித்தாந்த நோக்கு, பாதுகாப்பு என்பவற்றில் முரண்பாடான கருத்துக்கள் காணப்பட்டன. இதனால் இவ்வமைப்பு குழப்பமானதாக அமைந்தது. இதனை முனி (S. D. muni) என்பவர் "இந்தச் சூழ்நிலையில் ஏதாவது ஒத்துழைப்பு இயந்திரம் இருப்பதை விட இல்லாமல் இருப்பது வரவேற்கத்தக்கது" என்றார். இவ்வாறான நிலையில் 1980ம் ஆண்டே பிராந்திய ஒத்துழைப்பு என்ற விதை முளைப்பதற்கு வளமான நிலத்தைக் கண்டது. பொருளாதார கலாசாரத்துறைகளில் கூட்டுறவைத் தோற்றுவிப்பதற்கான அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு ஓர் மகாநாட்டை கூட்ட வேண்டுமென காலஞ்சென்ற பங்களாதேஷ் ஜனாதிபதி சியாவுர் ரஹ்மான் தெரிவித்த யோசனையே சார்க் அமைப்புக்கான அத்திவாரத்தை இட்டது. இவ்வமைப்பு உதயமாவதற்கு அரசியல் தூண்டுகோல் அவசியம் என்றும், அரசியல் தொடர்பற்றதாக இவ்வமைப்பு இருக்க வேண்டும் என்றும் ரஹ்மான் கருதினார். இந்நாடுகள் ஒன்றுகூடுவதற்கு இருந்த அரசியல் முரண்பாடுகளையும், இழுபறி நிலையும் நன்கு அறிந்து இருந்தமையால் கூட்டுறவுக்கான விடயங்களில் இருந்து அரசியல் தவிர்க்கப்பட வேண்டும் என காரணகாரியத் தொடர்புகளைச் சிந்தித்துக் கருத்து வெளியிட்டார். ரஹ்மான் சார்க் என்னும் எண்ணக்கருவை முன்வைத்த போது இலங்கை, நேபாளம், பூட்டான் ஆகிய சிறிய நாடுகள் இந்தப் பிராந்திய அமைப்புக்கு சாதகமான பதிலை அளித்தது. மாலைதீவு தொடக்கத்தில் ஆதரவு தரவில்லை. இந்தியா பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் வெவ்வேறு காரணங்களுக்காக இது தொடர்

பாக மௌனம் சாதித்தன. மேற்குச் சார்பான உத்தேச ஏற்பாடுகள் தன்னைத் தழுவி விடுமென்று இந்தியா பயந்த வேளையில், இப்படியான ஒருகுழு அமெரிக்காவின் உடனான தமது உறவைப் பாதிக்கும் என பாகிஸ்த்தான் எண்ணியது. ஆயினும் மேற்குறிப்பிட்ட நாடுகள் சார்க்கமைப்பிற்கு ஒத்துழைப்பதாக பின்னர் அறிவித்தது. மேலும் 1981ம் ஆண்டு 7 நாடுகளின் வெளிநாட்டுச் செயலாளர்களின் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. இதனையடுத்து இரண்டு ஆண்டுகளில் தொழினுட்பத்தில் விரைவான செயற்பாடுகள் நடைபெற்றன.

பின்னர் காத்மண்ட், இஸ்லாமாபாத் டாக்கா ஆகிய நகரங்களில் வெளிநாட்டுச் செயலாளர்களின் கூட்டமும் நடந்தேறியது. 1983ம் ஆண்டு வெளிநாட்டு அமைச்சர்களின் முதலாவது மாநாடு புதுடில்லியில் நடைபெற்றது. 1984ம் ஆண்டு மாலேயில் இரண்டாவது வெளிநாட்டு அமைச்சர்களின் மாநாட்டில் 1985ம் ஆண்டின் இறுதி காலாண்டுக்குள் சார்க்கின் முதலாவது மாநாடு நடத்துவதாக முடிவு காணப்பட்டது 1985ம் ஆண்டில் திம்புவில் நடைபெற்ற மூன்றாவது வெளிநாட்டு அமைச்சர்கள் கூட்டத்தை குழப்புவதற்கு இலங்கை, இந்திய விரிசல் அமைந்த உறவுகள் பயமுறுத்தின. இதனை பரன் கோபுறா (Pran Chopra) 'சார்க் என்னும் அமைப்பு சூரியன் மறைவதைவிட வேகமாக மறைந்து கொண்டு இருக்கிறது' என்றார். இருந்தபோதும் இந்த அமைச்சர்களின் கூட்டத்தில் முதலாவது மாநாட்டுக்கான ஏற்பாடுகள் நிறைவேறின. இவ்வாறு படிமுறை ரீதியான அணுகுமுறையின் அல்லது செய்முறையின் பின்னரே சார்க் அமைப்பு தென்னாசியப் பிராந்தியத்தில் உதயமாகியது எனலாம்.

### சார்க்கின் நோக்கங்கள்

சார்க் சாசனத்தின் முதலாம் உறுப்புரை அதன் நோக்கங்கள் பற்றி எடுத்துரைக்கின்றது. அவற்றின் நோக்கங்களை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

அவையாவன:-

1. பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் கலாச்சார அபிவிருத்தி என்பவற்றை மேம்படுத்தல் சகல மக்களும் கௌரவத்துடன் வாழ சந்தர்ப்பம் அளித்தல் அவர்களின் முழுச்சக்தியை உணர்தல்.
2. தெற்காசிய மக்களின் நலனை மேம்படுத்தலும் அவர்களின் வாழ்க்கைத் தன்மையைச் சீர்படுத்தலும்.
3. தெற்காசிய நாடுகளுக்கிடையே கூட்டுத்தன்னம்பிக்கையை பலப்படுத்தலும், மேம்படுத்தலும்.
4. பரஸ்பர நம்பிக்கை, புரிந்துணர்வு என்பவற்றை வழங்கலும் மற்றவர்களுடைய பிரச்சனைகளில் அக்கறை கொள்ளலும்.
5. பொருளாதாரச் சமூக கலாச்சார தொழினுட்ப அறிவியல் துறைகளிலே பரஸ்பர உதவியையும், தீவிர இணைப்பை மேம்படுத்தலும்.

6. மற்றைய அபிவிருத்தி நாடுகளுடன் கூட்டுறவை வலுப்படுத்தல்.

7. பொதுவான அக்கறையுள்ள விடயங்களில் தங்கள் தங்களுக்கிடையேயுள்ள கூட்டுறவை அனைத்துலக அரங்குகளிலேயே ஏற்படுத்தல்.

8. ஒத்த அலகுகள் கொண்ட அனைத்துலக பிரதேச அமைப்புக்களுடன் ஒத்துழைத்தல், என்பன போன்ற நோக்கங்களை சார்க்கொண்டுள்ளது. ஆகவே சார்க்கமைப்புபன்மை நோக்கங்களைக் கொண்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

## டாக்கா மாநாடு - 1985

சார்க்கின் முதலாவது மாநாடு 1985 டிசம்பரில் டாக்காவில் நடைபெற்றது. இத்தலைவர்கள் முதன் முதலான தெற்காசிய மாநாட்டின வரலாற்று முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்கள். தங்களது பொதுவான பிரச்சனைகளுக்கு நட்புறவு. நபபிக்கை பரஸ்பர விளக்கம் என்பவற்றின் வலிமை கொண்டு தீர்வு காண்பதை நோக்கி ஒன்றாக செயற்படவும், பரஸ்பர கௌரவம் ஒப்புரவு பகிர்வுப் பயன்கள் என்பவற்றின் அடிப்படையில் மரபொழுங்கொன்றை உருவாக்கவும், பிராந்திய ரீதியில் ஒத்துழைப்பதற்கான தமது திடசங்கற்பத்தின் உறுதுணையான வெளிப்படையாகவே இதனை அவர்கள் கருதினர்.

இரு தரப்பு பிரச்சனைகளை மாநாட்டு மேசையில் நுழைவது அன்றில் இருந்து இன்றுவரையும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனை சார்க் சாசனத்தின் 10ம் உறுப்புரை இருதரப்பு சர்ச்சைக்குரிய விடயங்களை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளக்கூடாதென கூறுகின்றது. எனினும் இத்தடை இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா பயங்கரவாதப் பிரச்சினை பற்றி ஆழமாக ஆராயமுயன்றதை தடுக்கவில்லை. ஜே. ஆர் ஜெயவர்த்தனா எமது நாடுகள் அனைத்தும் தாங்கள் பெற்ற சுதந்திரத்தை விருத்தி செய்து பாதுகாப்பதற்கு ஸ்திரப்பாட்டை வேண்டி நிற்கின்றது. எமது நாடுகள் பலவற்றில் பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளது. பல அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டதுடன் பலாத்காரம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அவற்றின் தலைவர்கள் சிறுபான்மை பாரபட்சம் என்னும் குடையினுள் மறைந்து விடுகின்றார்கள்' எனப் பிரச்சினையை முன் வைத்ததார் பயங்கரவாதப் பிரச்சினையை இலங்கை முன் வைக்க எடுத்த விடா முயற்சி மாநாடுகளின் தலைவர்களுக்கு ஒரு சங்கடமான நிலைமையைத் தோற்றுவித்தது. ஏனெனில் இது தெளிவான அரசியல் அர்த்தங்களைக் கொண்டு இருந்ததுடன் பிராந்திய இரு தரப்பு உறவுகளைப் பாதிக்கின்ற விடயமாகவும் இருந்தது. எடுத்துக் காட்டாக இலங்கை இந்தியா, இந்தியா-பாகிஸ்த்தான் ஆகிய நாடுகளின் இருதரப்பு உறவுகளை இவ்விடத்தில் நினைவில் கொள்ளத்தக்கது. சார்க் நிகழ்ச்சி நிரலில் இதைச் சேர்த்துக் கொள்வதா என்ற கேள்வி எழுந்தபோது இறுதியில் போதைவஸ்துக் கடத்தல், அவற்றின் பாவனை, அபிவிருத்தியில் பெண்கள் பங்கு, போன்ற

புதிய ஒத்துழைப்பு துறைகளோடு ஒன்றாகப் பயங்கரவாதப் பிரச்சனையும் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆய்வுக்குழுக்களுக்கு விடப்பட்டது. இம் மாநாட்டின் தலைவர்களின் பேச்சுக்கள் அரசியல் பிரச்சனைகளை மறைமுகமாக சுட்டிக்காட்டின. ஏனெனில் மாலைதீவு பூட்டான் தவிர்ந்த ஏனைய நாடுகள் இருதரப்பு பிரச்சனையைக் கொண்டிருந்தன.

தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்பினை பலப்படுத்த வேண்டுமெனில் தம்நாட்டு மக்களது கூடுதலான ஈடுபாடு அவசியம் என்பதை தலைவர்கள் உணர்ந்தனர். தமது நாடுகளுக்கிடையில் தொடர்புச் செயல்களை அதிகரிக்கவும் மக்களுக்கிடையிலான தொடர்புகளைப் பல்வேறு மட்டங்களில் மேலு ஊக்குவிக்கவும் அவர்கள் உடன்பட்டனர். அதன் நோக்கத்துக்காக பிராந்தியதில் விழிப்புணர்வையும் பொதுசன அபிப்பிராயத்தையும் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இம்மாநாட்டில் இணக்கம் கண்டனர்.

இதன் பின்பு உத்தியோகப்பற்றற்ற முறையில் பல முக்கிய இருதரப்பு பிரச்சினைகளை சேர்ப்பதற்கான போச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை இம் மகாநாடு வழங்கியது. உதாரணமாக இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பல உறவுத் துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்ட அதேவேளையில் ஒருவருடைய அணுசக்தி நிலையத்தை மற்றவர்கள் தாக்குவதில்லை என்ற உடன்பாடும் ஏற்பட்டது. ஆகவே சார்க் வளர்ச்சியில் இம் மாநாடு ஓர் மைல்க்கல் நடவடிக்கையாகும்.

## பெங்களூர் மாநாடு - 1986

சார்க்கின் இரண்டாவது மாநாடு 1986 நவம்பரில் இந்தியாவில் பெங்களூரில் நடைபெற்றது. இந்திய - பாகிஸ்தான், இலங்கை - இந்தியா ஆகிய நாடுகளின் நெருக்கடியான உறவுகளின் மத்தியில் இது கூட்டப்பட்டது. எனினும் அமர்வுகள் நட்புநிலையில் இருந்தமை பலமுக்கியமான தீர்மானங்களை எடுக்கக்கூடியதாக இருந்தது. இம்மாநாட்டில் முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி ''பழைய விடயங்களில் நேரத்தையும் சக்தியையும் விரயம் செய்வதைவிடுத்து புதிய முக்கியமான ஒத்துழைப்புத்துறைகளில் கவனம் செலுத்தும்படி'' தனது பேச்சில் வலியுறுத்தினார். விரிவடையும் ஒத்துழைப்புக்கான புதிய ஐந்து துறைகளை (செவிப்புல கற்புல பரிமாற்றம், சார்க் ஆவண நிலையம் ஒன்றை நிறுவுதல், பிரதேசங்களுக்கிடையில் உல்லாசப் பிரயாணத்தை ஊக்குவித்தல், சார்க் புலமைப் பரிசில்களை உருவாக்குதல், ஒழுங்கமைக்கப்பட்ட தொண்டர் பரிமாற்றத் திட்டம்) கண்டறிவதன் மூலம் அவருடைய வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது.

இம்மாநாட்டில் சார்க்கின் செயலகத்தைக் காத்மண்டுவில் அமைப்பது என தீர்மானிக்கப்பட்டது பிராந்திய ஒத்துழைப்பு என்ற எதிர்பார்க்கை மீது இது

எதிர்காலத்தில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஒரு தீர்மான மாக இருந்தது. இது பெரிய நாடு கள் சிறிய நாடுகளுக்கு தங்களது தாராண்மைத் தன்மையை எடுத் துக்காட்டும் ஓர் நடவடிக்கையாக அமைந்தது எனலாம். இதே போலவே பங்களாதேஷ்த் தூது வர் அபுல் ஹசனை சார்க்கின் முதலாவது செயலாளர் நாயக மாக நியமித்தமை சார்க் என்ற எண்ணக்கருவை முன்வைத்த நாட் டுக்கு ஏனைய நாடுகள் செலுத் தும் நன்றிக் சடனாகவும் அது அமைந்தது.

இலங்கை பயங்கரவாதப் பிரச் சினையை முன்வைப்பதில் அதன் விடா முயற்சிக்கு இம்மகாநாட் டில் வெற்றி கண்டது. பிராந்தி யத்தில் இருந்து பயங்கரவாதம் தடுக்கப்படவும் ஒழிக்கப்படவேண் டுமானால் சார்க் நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்பு அவசியம் என்பதில் இணக்கமும் காணப்பட் டது. பயங்கரவாதச் செயல்கள் யாவற்றையும் குற்றச் செயல்க ளாகக் கண்டித்ததுடன் பயங்கர வாதம் சமூக பொருளாதார அபி விருத்தி, அரசியல் ஸ்திரப்பாடு, பிராந்திய சர்வதேச அமைதி ஒத் துழைப்பு ஆகியவற்றை பாதிக்கும் ஒன்றெனக் கூறி கண்டிக்கப் பட்டது.

இருதரப்பு பிரச்சினை தொடர் பாக ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது பேச்சில் 'இந்த தளத்தின் முன் நாங்கள் சர்ச்சைக்குரிய இரு தரப்பு விடயங்களை முன்வைக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை' என்றார். இம் மாநாட்டுக்கு முந் திய சில மாதங்களில் இலங்கை இந்தியா, இந்தியா - பாகிஸ்தான் உறவுகளில் காணப்பட்ட விரிசல் நிலை இருதரப்பு சச்சரவுகளை கருத்தில் கொள்ளும் போது இம் மாநாட்டில் பயங்கரவாத பிரச் சினை உள்நுழைந்தது என்பது உண்மையில் அதிசயமான ஒன் றல்ல.

## காத்மண்டு மாநாடு - 1987

சார்க்கின் மூன்றாவது மாநாடு காத்மண்டுவில் 1987 நவம்பரில் நடை பெற்றது. நேபாளத்தில் சார்க் செயலகம் அமைக்கப்பட்ட தைத் தொடர்ந்து நேபாளம் மிக வும் ஆர்வத்துடன் மாநாட்டை நடத்தியது. இருந்த போதும் இம் மாநாட்க்கு முன்னர் சில பிரச்சி னைகள் ஏற்பட்டன அதாவது சார்க் என்னும் கப்பல் கொந்த ளிக்கும் கடலில் தனது மூன்றா வது வருடத்தில் இறங்கியது. இந் தியா இலங்கைக்கு கப்பலை அனுப் புவதற்கு எடுத்த முயற்சியும், இலங்கையியின் ஆகாய எல்லைக் குள் இந்தியா அத்து மீறிய நிகழ் ச்சியும் இலங்கையில் பெரும்பான் மை இனமக்களுக்கிடையில் இந்திய எதிர்ப்பை உண்டுபண்ணிது. இதை அவர்கள் இந்திய விரிவாக் கலின் வடிவம் என்று கருதினார் கள்.

இதனால் இலங்கை 1987ம் ஆண்டு யூனில் நடைபெறவிருந்த சார்க் அமைச்சரவைக் கூட்டத்தை பகிஷ்கரிக்கும்படி வேண்டுகோள விடுக்கவும் செய்தது. பின்னர் இலங்கை தனக்கு ஏற்பட்ட காய த்தை மறைத்துக்கொண்டு இக்கூட் டத்தில் கலந்து கொண்டது.

''ஹமீத் அவர்கள் இருதரப்பு விடயங்களின்மீது கலந்துரையாடுவது தடைசெய்யப்பட்டஒன்று. இந்தியாவுக்கும் பாகிஸ்த்தானுக்கும் இடையில்ஏற்படக்கூடியசச்சரவுகளைத்தவிர்ப்பதற்கான ஏற்பாடு இது என்பது வெளிப்படையான விடயமாகும். ஆனால் இலங்கையினுடைய இறைமையை இந்தியா மீறியது சார்க்கின் மிகச் சிறிய நாடுகளைச் சிந்திக்க வைத்தது'' என்றார். இந்த விடயத்தைக் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற இலங்கையின் கருத்து கூட்டத்தை குழப்புவதாக அமைந்தமையால், இலங்கை தனது முயற்சியை கைநழுவவிட்டது. ஆனால் பாகிஸ்த்தான் பங்களாதேஷ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் சார்க் சாசனத்தில் சொல்லப்படுகின்ற தலையிடாமைக் கொள்கையை மிக இலகுவாக சுட்டிக்காட்டுவதற்குஇச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினர். இயற்கை தொடர்பான இந்தியாவின் அணுகுமுறை பூகோள அரசியல் நிலைப்பாடுகள் எப்பொழுதும் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளன. இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கை முக்கியமானது என்றும் இலங்கை இந்தியாவின் வலயத்துக்குள் அமைந்துள்ளது என்று கருதும் கருதுகோள் புதியதொன்றல்ல. அதற்கான ஆதாரங்கள் தற்போது மட்டுமன்றி வரலாறு காலனித்துவ ஆட்சி நடைபெற்ற காலகட்டங்கள் வரையில் பின்னோக்கிச் செல்கின்றன.

இம்மாநாட்டுக்கு முன்னர் இடம்பெற்ற இன்னொரு நிகழ்வு 1987 யூலை 29ம் திகதி இலங்கை இந்திய உடன்படிக்கை ஏற்பட்டதாகும். இது சார்க்களத்தின் நிகழ்வுக்கு ஒரு புதிய வர்ணத்தைக் கொடுத்தது. ஏனெனில் இலங்கை இந்தியாவை ஆக்கிரமிப்பாளராக கருதுவது தனது சொந்த இயலாமையைக் காட்டுவதாக அமையும். இந்தச் சூழ்நிலையில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா இவ்வுடன்படிக்கையை பிராந்திய ஒத்துழைப்பை வளர்க்கும் ஒன்றாகநியாயப்படுத்தினார். ''இந்த உடன்படிக்கை கூடியவரையில் கரைந்துரையாடலில் ஈடுபடும் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. சார்க்கின் நீண்ட எதிர்காலத்துக்கு முறைசாரா மட்டத்திலேயேனும் இருதரப்பு பொதுப் பிரச்சினைகளை கலந்து ஆலோசிபது அங்கீகரிக்கப்பட வேண்டியது. எனினும் நாங்கள் எமது பொதுப் பிரச்சினைகள் யாவற்றுக்கும் தீர்வு காண பிராந்திய அணுகுமுறையை எதிர்பார்க்கமுடியும்'' என ஜெயவர்த்தனா குறிப்பிட்டார். இலங்கையில் நடைபெற்ற ஒரளவு கசப்பான சம்பவம் சார்க் மேடையிலும் எடுபடக் கூடியதாக அமைந்தது மேலும் தெற்காசியாவின் சமாதானம் முன்னேற்றம் பரஸ்பர நம்பிக்கை நல்லெண்ணம் என்பவற்றை மேம்படுத்தலும் இப்பிரதேச கூட்டுறவில் ஒரு புதிய யுகத்தின் ஆரம்பத்தை பதித்த சார்க் மாநாட்டை கூட்டிவைப்பதிலுள்ள மகிழ்ச்சியை வெளியிட்டு அவர்களது மட்டத்தில் வருடாந்த மாநாட்டின் முக்கியத்துவம் கோடிட்டுக் காட்டப்பட்டது. இந்தப் பிரதேசத்தில் சகல சமூக பொருளாதாரகலாசார அபிவிருத்தி முன்னேற்றம் என்பவற்றை வேகப்படுத்தலிலும்வலுப்படுத்துவதி

லும் இங்கு முக்கிய கவனம் எடுக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் பட்டயம், அணிசேராமை என்பவற்றின் கொள்கைகளை உறுதியாகக் கடைப்பிடிப்பதன் மூலம் பிரதேசத்தின் சமாதானம் ஸ்திரணம் நாட்டின் முன்னேற்றம் என்பவற்றை மேம்படுத்துவதிலுள்ள ஆர்வத்தையும் அவற்றுள் குறிப்பாக இறைமைச் சமத்துவம் ஆள்புல மேன்மை, தேசியசுந்திரம்படைப்பலத்தை உபயோகிக்காமை மற்ற அரசுகளின் உள்நாட்டு விடயங்களில் தலையிடாமை, பிரச்சினைகளை இணக்கத் தீர்வுகளின் மூலம் தீர்க்க வேண்டும் என்றும் 2 லட்சம் தொன் உணவுக் களஞ்சியம் ஒன்றை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது. மேற்குறிப்பிப்பிட்ட அபிவிருத்தி பூட்டான் மன்னரினால் பின்வருமாறு விபரிக்கப்பட்டது. 'டாக்காவில் இருந்து காத்மண்டு வரையுள்ள பயணத்தின் போது நாம் பாரிய பிரதேசத்தைக் கடந்திருக்கின்றோம். தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்பு என்பது உறுதியானது மட்டுமல்ல பலமானதும் என்பதை நிரூபித்து இருக்கின்றோம். எமது நாடுகளுக்கிடையில் சமச்சீரற்ற தன்மை காணப்படுகின்ற போதும் எமது மக்களுக்கு அமைதியையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்த நாம் ஓர் உறுதியான பிராந்திய இணைப்பை ஏற்படுத்தியிருக்கின்றோம்' என்றார் அவர்.

## இஸ்லாமாபாத் மாநாடு 1988

காத்மண்டு மாநாட்டின் இறுதியில் அடுத்த மாநாடு இலங்கையில் நடத்த இலங்கை ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கையை சகலரும் நன்றி உணர்வுடன் ஏற்றுக்கொண்டனர். இலங்கை ஜனாதிபதி பிரிவினை வாதப்பிரச்சினை தீர்ந்து 1988ம் ஆண்டுக்கு முன்பே ஐ.பி.கே.எப். இலங்கையை விட்டு வெளியேறும் என எதிர்பார்த்தார். ஆனால் அவரின் எதிர்பார்க்கை நிறைவேறாமையால் அவ்வருட நடுப்பகுதியில் மாநாட்டுக்கான இடம் மாற்ற வேண்டியதாயிற்று. இந்நிலையில் மாநாடு இஸ்லாமாபாத்தில் 1988 டிசம்பரில் நடைபெற்றது.

இம்மாநாட்டுக்கு முன்னர் பல முக்கியமான நிகழ்வுகள் இப்பிராந்தியத்தில் நிகழ்ந்தன. ஜனநாயக ஆட்சியொன்று பாகிஸ்தானில் நிறுவப்படடமை, பெனாஸீர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி அறுதி பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியமை, ரணசிங்க பிரேமதாசா இலங்கையின் ஜனாதிபதியாக தெரிவாகியமை, 1988ம் ஆண்டு நவம்மரில் மாலைதீவு சதிமுயற்சி ஆகியன குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி மலர்ந்தமை இந்திய பாகிஸ்தான் இருதரப்பு உறவுகளின் முன்னேற்றத்துக்கு வழியாக அமைந்தது இலங்கையின் புதிய ஜனாதிபதி இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு எதிரானவர் என்பது யாவரும் அறிந்ததே எனினும் மாநாடு நடந்து இருதினங்களின் பின் அதாவது 1989 ஜனவரி 2ல் அவர் பதவி ஏற்றார். மாலைதீவு சதிமுயற்சியை முறியடிப்பதில் இந்தியா ஆற்றிய பங்கை சார்க் நாடுகள் அனைத்தும் பாராட்டின நீண்டகாலம் மாலைதீவில் தங்கியிருக்கு

என எதிர்பார்க்கப்பட்ட இந்தியப் படை வெகுவேகமாகவே வெளியேறியது.

இம்மாநாடு புதிய சூழ் நிலையில் ஆரம்பமாகியது. பாகிஸ்தான் இந்தியா ஆகிய இரு நாடுகளும் தமது மரபு ரீதியான எதிர்ப்பைக் கைவிட்டு பொருளாதார ஒத்துழைப்புக்கு முன்வந்தன. இஸ்லாமாபாத்தில் இணக்கம் காணப்பட்ட விடயங்களாக கல்வியை ஒத்துழைப்புத்துறையில், சேர்த்துக் கொள்ளல், நாடுகளுக்கிடையில் பயணம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நீதித்துறை நீதியரசர்களுக்கும் விசா தடையை நீக்குதல், 1990ம்ஆண்டைபோதை வஸ்து எதிர்பியக்க ஆண்டாக பிரடகனம் செய்தல் ஆரம்ப சுகாதார கவனிப்பு போன்றவற்றைக்குறிப்பிடலாம்.

இம்மாநாட்டு முடிவில் அடுத்த மாநாட்டை 1989ம் ஆண்டில் கொழும்பில் நடந்த இலங்கை தெரிவித்த விருப்பத்தை எல்லா நாடுகளும் ஏற்றுக் கொண்டன. எனினும் வருட நடுப்பகுதியில் கொழும்பில் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படவில்லை. அதாவது இலங்கையில் தெற்கில் நிலைமை மோசமாகக் காணப்பட்டமை, மாநாட்டுக்கு முன்பு இந்தியா ஐ.பி கே. எப். வாபஸ் பெற வேண்டுமென ரணசிங்க பிரேமதாசா விடுத்த வேண்டுகோளுக்கு இந்தியா இணங்க மறுத்தமை ஆகிய காரணங்களால் இலங்கையில் மாநாடு நடைபெறுவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது. இதனால் 1989ம் ஆண்டு சார்க் மாநாடு நடைபெறாத ஆண்டாகக் காணப்பட்டது. சார்க் சாசனத்தில் 3 பிரிவு அரச தலைவர்கள் அல்லது அரசுகள் வருடம் ஒருமுறை அல்லது இதற்கு மேலாக அங்கத்துவ நாடுகளின் தேவையை நோக்கி ஒன்று கூடும் எனக் கூறுகின்றது. இந்த ஏற்பாடு 1989 வரையும் பிராந்திய அரசியல் பிரச்சினைகளை அரசியல் சச்சரவுகளைப் பற்றிய வளர்ச்சியை கவனத்தை - ஈர்க்கக் கூடிய பிரச்சினையாக இருக்கின்றதா இல்லையா என்பதைப்பற்றி கவனத்திற்கொள்ளாது ஒவ்வொரு வருடமும் மாநாடு நடப்பதை உறுதிப்படுத்தியது ஆனால் சார்க் சாசனத்தின் இந்த ஏற்பாடு தற்போது செயலிழந்து போனமை அதன் வளர்ச்சிக்கு ஏற்பட்ட தடையாக கருத வேண்டும்.

## மாலே மாநாடு - 1990

மாலைதீவின் மாநாட்டை நடத்துவதற்கு செய்யப்பட்ட ஏற்பாடுகள் சகலராலும் பாராட்டப்பட்டபோதும் இம்மாநாடு பற்றிய விமர்சனம் முன் எப்போதும் இல்லாதவாறு இருந்தது. மாநாட்டுக்கானதளமாக மாலைதீவு தெரிவு செய்யப்பட்டதுகூட விமர்சனத்தில் இருந்து தப்பவில்லை. Indian weekly Sunday என்ற பத்திரிகை 'அவர்கள் பிரதிநிதித்துவம் வகித்த பிராந்தியம் பரந்த அளவில் அரசியல் குழப்பத்தை அனுபவித்துக்கொண்டிருந்த வேளையில் அவர்கள் முக்கியத்துவம் அற்ற தீவில் கூடி பொருளாதார கலாச்சர ஒத்துழைப்பு பற்றி பேசுவது விந்தையானதாகும்' என விமர்சனம் செய்தது.

மாநாட்டின் தலைவர்கள் சார்க்கின் செயலாக்கம் பற்றிக் குறிப்

பிடும்போது பிராந்திய மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைக் கையாளும் திறன்பற்றி அதிருப்தி தெரிவித்தார்கள். முன்னாள் இந்தியப் பிரதமர் சந்திரசேகர் 'தீர்மானங்களைத் துரிதமாக எடுப்பதற்கு வசதியாக மாநாட்டின் நடைமுறைகளை மீளமைக்க வேண்டும். வாழ்வின் யதார்த்தத்திற்கு நாடுகள் கவனம் செலுத்த வேண்டும்' என்றும் கூறினார். பங்களாதேஷ் ஜனாதிபதி ஒருபடி மேலே சென்று 'சர்ச்சைக்குரிய இருதரப்பு விடயங்களை கவனத்திற்கு எடுப்பதில் இருக்கும் தடையை நீக்கி சாக்சா சனத்தை மீளமைக்க வேண்டுமெனக்குறிப்பிட்டார். எனினும் கையூம் தனது உரையில் இருதரப்பு விடயங்களை எடுத்துக் கொள்ளக் கூடாது என எச்சரித்தார். மாலைதீவு மாநாடு சார்க்கின் நடவடிக்கைகளை மீளமைத்து பொருளாதார ஒத்துழைப்பு சுற்றாடல், உல்லாசப் பயணத்துறை ஆகியவற்றை விஸ்த்தரிக்க வேண்டும் என்பன போன்ற பல விடயங்களை மையமாகக் கொண்டிருந்தது.

## கொழும்பு மாநாடு - 1991

சார்க்கின் 6வது மாநாடு 1991ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொழும்பில் நடைபெற்றது. ஆனால் இம்மாநாடு இதே ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெறஇருந்த போதிலும் சில கசப்பான சம்பவங்களால் மாநாட்டுக்கான காலம் சற்று பின்தள்ளப்பட்டது. இம்மாநாட்டைக் குழப்புவதில் இந்தியா பெரும் பங்கை எடுத்துக்கொண்டது. இதற்கு இந்தியா எடுத்துரைத்த காரணம் பூட்டான் சார்க்கின் அமர்வில் கலந்துகொள்ளாது என உத்தியோகபூர்வமாக அறிவித்ததன் பின்னரே தான் கலந்து கொள்வதில்லை என்ற தீர்மானம் எடுத்ததாக சுட்டிக்காட்டியது. பூட்டான் அதன் உள்நாட்டு நிலமை சிக்கலானதாக உள்ளமையால் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது என சார்க் தலைவருக்கு அறிவித்தது. உண்மையில் பூட்டானின் மொத்த சனத்தொகை 1.3 மில்லியனாக இருந்தாலும் 48 சதவீதத்தினரே பூட்டானியர், ஏனையவர்கள் அண்டை நாட்டில் இருந்து சட்டபூர்வமற்ற முறையில் குடியேறியவர்கள். இவர்கள் நேபாளபாணியில் ஜனநாயக சுதந்திர உரிமையைக் கோரி அரசியல் புரட்சியில் ஈடுபடக்கூடும் என அரசாங்கத்துக்கு பய உணர்வு ஏற்பட்டது. அவர்களின் எண்ணிக்கைப்பலமும் அதற்கு உரமூட்டியது. அதே வேளை நேபாளமும் இறுதி நேரத்தில் தனது கொழும்பு பயணத்தை ரத்துச்செய்தது. இதுபோன்ற பல காரணங்களினால் சார்க் மாநாடு நவம்பரில் கொழும்பில் நடைபெற முடியாமல் போயிற்று. இது சார்க்கின் வளர்ச்சிக்கு ஏற்பட்ட பின்னடைவாக கருதவேண்டும். ஆனால் பேராசிரியர் வஸ்தியாம்பிள்ளை கருதுவது போன்று ஒரு நிரந்தரமான பின்னடைவாக இது இருக்கவில்லை. ஏனெனில் மாலைதீவு ஜனாதிபதி எடுத்த தீவிர முயற்சியால் சார்க் மாநாடு டிசம்பரில் நடைபெற்றமை இதற்குச் சான்றாகும். கொழும்பு மாநாட்டில் இப்பிராந்திய மக்களை பாதிக்கின்றசமூக பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காண

வேண்டியதன் அவசியத்தையும் இங்கு சுட்டிக்காட்டினார் ''இப்பிரந்தியத்தில் சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் பேணுவதற்கு அரசியல் ஒத்துழைப்பு இன்றியமையாதது'' என தற்போதைய சார்க்கின் தலைவர் ரணசிங்க பிரமதாசா தனது உரையில் சுட்டிக் காட்டினார். இம்மக்களின் நலனை மேம்படுத்துவது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற பல்வேறு தீர்மானங்கள் இங்கு நிறைவேற்றப்பட்டன.

சார்க் நாடுகள் பெருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கியதாக காணப்படுகின்றது. இதனால் அவற்றுக்கு முகப் கொடுத்து முன்னேற வேண்டியுள்ளது. காலனித்துவ காலச் சுரண்டல், சனத்தொகை அழுத்தம் குறை அபிவிருத்தி, வேலையின்மை வெளிநாட்டு வர்த்தகப் பற்றாக்குறை உக்கிரமடையும் வறுமை என்பவை தொடர்பாக சார்க் அக்கறை கொள்ள வேண்டியுள்ளது. மேலும் சார்க் நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகத்துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவுடன் ஒப்பிடும் போது சார்புரீதியாக சிறியதொன்றாகவே காணப்படுகிறது. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்துறை 56% மாகவும் பாகிஸ்தான் 30%மாகவும் பங்களாதேஷ் 22%மாகவும் நேபாளம் 29%மாகவும் மாலைதீவு 18%மாகவும் இந்தியா 15% மாகவும் அமைந்து இருந்தது. ஏனைய சார்க் நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் அதிகரித்து காணப்படுவதற்கு காரணம் திறந்த பொருளாதாரக் கொள்கையை கடைப்பிடிப்தனாலாகும். சார்க் நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 31,700 கோடி அமெரிக்க டொலர்களாக உள்ளன. இது உலக மொத்த உள்நாட்டு உற்பத்யில் 1.8%மாகும். ஆனால் மொத்தக் குடித்தொகை 21%மாகும். ஆகவே மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் குறைவாக காணப்பட மொத்த குடித்தொகை வீதம் அதிகரித்து காணப்படுகிறது. இத்தகைய செய்கை இந்நாடுகளை பல பாதிப்புக்கு இட்டுச் செல்கிறது. இதனால் இவை வறுமைப் பிராந்தியமாக காணப்படுகிறது. இவ்வாறான சார்க்கின் பொதுவான பிரச்சினையை வெற்றி கொள்வதாயின் இப்பிராந்திய நாடுகளுக்கிடையே காணப்படுகின்ற அரசியல் முரண்பாடுகளைத் தீர்க்க வேண்டும். அத்துடன் சார்க் அயல்நாடுகளுக்கிடையில் பொருளாதார தொடர்புகளை வளர்த்தல் இப்பிராந்தியத்தின் வர்த்தகத்தை அதிகரித்து பிராந்தியத்துக்கு வெளியில் உள்ள சந்தையில் தங்கியிருப்பதை குறைக்க உதவும், ஆனால் இன்றைய உலக வர்த்தக அமைப்பையும், பிராந்திய தடைகளையும் நோக்கும் போது இத்துறையில் கணிசமான அளவு முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கு வருடங்கள் அல்ல தசாப்தங்கள் எடுக்ககூடும்

முடிவாக, ஏனைய பிராந்தியக் குழுக்களுடன் ஒப்பிடும்போது பரவலான சமூக அரசியல் கலாசார வேறுபாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள சார்க் அமைப்பு 7 ஆண்டுகளுக்குள்ளே அடைந்துள்ள வெற்றி குறிப்பிடத்தக்கதாகும்.

ஆயினும் அர்த்தமுள்ள பிராந்தியக்கூட்டுறவு இன்னும் உருவாகவில்லை என்றே கூறவேண்டும். ஏனெனில் ஆசியாவைப்போலன்றி பிராந்திய சர்வதேச அரங்குகளில் 7 சார்க் நாடுகளும் ஒரே குரலில் பேசமுடியவில்லை. இன்னும் பல்வேறு சார்க் நடவடிக்கைகளில் இருந்து குறிப்பிடத்தக்க பெறுபேறுகள் இன்னும் அடையவில்லை, என்றும் அவை திட்டவட்டமான பெறுபேறுகளை நோக்கமாகக் கொண்ட திட்டங்களாக உருப்பெறவில்லை. என்றும் பல அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர் இருதரப்பு விடயங்களில் இந்தியா கூடியளவு விட்டுக்கொடுக்கும் நிலையில் இருக்க வேண்டும் என்றும் சார்க் நடவடிக்கைகளில் இந்தியா திட்டவட்டமான ஆனால் முக்கியத்துவத்தில் குறைந்த பங்கினை வகிக்கவேண்டும் என்றும் ஏனைய அங்கத்துவ நாடுகள் விரும்புகின்றன. இன்னொரு வகையில் கூறின் சாக்கின் எதிர்காலம் இந்தியாவில் தங்கியுள்ளது எனக்கூறின் ஓரளவு பொருத்தமாக அமையும், அதாவது சார்க் நடவடிக்கைகளுக்கு வலுவூட்டி உறுதிப்படுத்துவதில் 7 நாடுகள் பொறுப்பாயினும் இவ்விடயத்தில் இந்தியாவுக்குப் பாரிய பங்கொன்று உண்டு. மேலும் கூர்மையான மத அரசியல் பிளவுகள் நாடுகளுக்குள்ளும் நாடுகளுக்கிடையேயும் ஸ்திரமற்ற நிலமையைத் தோற்றுவிக்கின்றன. இனரீதியான தேசியவாதம் ஏற்படுத்தும் உள்நாட்டுச் சவால்கள் தேசிய எல்லையைக் கடந்தும் விடுவதால் சார்க் நாடுகள் மத்தியில் பலவித சந்தேகங்களை கிளப்பி விடுவதனால் சார்க் அமைப்பை வலிமை குன்றவும் செய்கின்றன. ஆகவே சார்க்கின் அங்கத்துவ நாடுகள் தனிநாடுகளாக சாதிப்பதைவிட பிராந்திய குழுவாக இருந்து முன்னேற்றம் அடையக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் உண்டு என்ற உணர்வு ஆணித்தரமாக உருவாகவேண்டும். தப்பெண்ணத்தையும் ஐயப்பாடுகளையும் தவிர்த்து சிநேகபூர்வமான அண்டை நாட்டு உறவுகளை வளர்க்க முயற்சிக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட விடயங்களை சார்க் நாடுகள் கையாளுமாயின் சார்க் அதன் குறிக்கோளை அடையலாம். அல்லாதுவிடின் சார்க் வளர்ச்சி அடைந்தாலும் அதன் குறிக்கோளை அடைவது என்பது சாத்தியமற்றதாகவே காணப்படும்.

---

## விவாகரத்து

அருந்ததியைக் காட்டென ஐயன் சொன்னான்
வான் நோக்கி சுட்டுவிரலை நீட்டினேன்.
அன்று பொய்யில் பூத்த திருமணம்
இன்று உண்மையாய் கருகி விழுந்தது.

சுபத்திரன்

---

✻ சிறுகதை

# அந்தியில் ஓர் உதயம்

✻ கண. மகேஸ்வரன்

ஒவ்வொரு வருஷமாய் இழுத்தடித்த ஐந்து வருஷ 'எக்ஸ்ரென்ஷ'னும் இந்த ஜூன் மாதத்துடன் முடிவடைகிறது.

'கவர்ண்மென்ற் சேவன்ற்' ஆக எங்கெங்கெல்லாமோ சுற்றியலைந்துவிட்டு, பென்சன் எடுக்கும் போதாவது ஊரோடு வேலை செய்வோமேஎன்றஆதங்கத்துடன், ஐம்பது வயது தாண்டியதும் தான் மாற்றலாகி வந்திருந்தார் குருமூர்த்தி.

இந்த அலுவலகத்திற்கு மாற்றலாகி வந்து நேற்றுப் போலிருக்கிறது. அதற்குள் பத்து வருடங்கள் பூர்த்தியாகிறதா? நினைக்கவே மெய்சிலிர்த்தது.

தன் இளமைக்கால முக்கிய நிகழ்வுகளை ஞாபகங்கொண்டார்.

'இன்டர்மீடியற்' படிப்பை முடித்துக்கொண்டு சில வருடங்கள் தந்தையாரோடு தோட்டந்துரவு என்று அலைந்து கொண்டிருந்த போது தான், எதிர்பாராத விதமாக அட்வகேட் அருணாசலத்தின் தொடர்பு ஏற்பட்டது.

மூத்த சகோதரியின் திருமணத்திற்காக சீதன உறுதி எழுத வேண்டி அருணாசலத்தின் வீட்டிற்கு அப்பாவோடு அலைந்த போது தான் இவரது திறமை இவருக்கே வெளிப்படலாயிற்று.

'பெடியன் எப்படி? ஆங்கிலம் எழுதுவானோ?' என்று கேட்டார் அருணாசலம்.

'ஏதோ கொஞ்சம் படிச்சிருக்கிறான். அவனையே கேட்டுத் தெரிஞ்சு கொள்ளுங்கோவன்' என்றார் அப்பா.

'ஏண்டா தம்பி, இங்கிலீசிலை ஒரு கடிதம் எழுதுவியா? ஒரு பொது விசயத்துக்கு அனுமதிகேட்டு டீயாரோவுக்கு ஒரு கடுதாசி எழுது பார்ப்பம்!'

அருணாசலத்தின் வேண்டுகோளுக்கு இவன் தயக்கத்தோடு சம்மதித்தான்.

அவர் பார்த்திருக்க, இவன் ஆறேழு வரி எழுதியிருக்கமாட்டான். அசந்து போனார் அருணாசலம்.

அருணாசலத்தின் ஆங்கிலப் புலமை கொஞ்சநஞ்சமல்ல; என்றாலும் இவ்வளவு அச்சொட்டாக அச்சுக்கோர்த்த மாதிரி அழகாக அவரது கையெழுத்து இருந்ததில்லை.

'ஏன் காணும், வீட்டிலை சும்மா தானே இருக்கிறான். உம்மோடை தோட்டத்துக்குத்தான் வாறதென்றாலும் எவ்வளவுகாலம் வரப்போகிறான்? மகனுக்கு நல்ல எதிர்காலமிருக்குது, அதைப் பாழடிச்சிடாதையும். உமக்குச் சம்மதமென்

றால் நாளைக்கே என்னோட விட்டிடும். மூன்றோ நாலு பவுண் சம்பளம் போட்டுத்தாறன். ஏதோ சந்தோஷமாயும் இடையிடை கவனிச்சுக் கொள்ளுவன். பெடியனும் தொழில் பழகினதாகுது. நாளைக்கு என்னைப்போல ஒரு பிரக்கிராசியாய் வரலாம். என்ன சொல்லுறீர்?' என்று ஆவலைத் தூண்டிவிட்டார் அருணாசலம்.

அப்பாவின் முகத்திலேற்பட்ட மலர்ச்சியை இவன் கவனிக்கத் தவறவில்லை.

நாலு பவுண் என்றால் அப்போது நாற்பது ரூபா நான்கு தங்கப் பவுண் வாங்கக்கூடிய காசு

'ஐயா மனசுக்கு அப்படித் தோன்றினால் நானென்ன மறுப்புச் சொல்லிறது?'

அப்பா பெருமனதோடு சம்மதித்தார்.

'நாளைக்கு வெள்ளிக்கிழமை. கலியாணம் கார்த்திகை அதுவுமிதுவுமாய் நல்ல நாளுங்கூட. காலங்காத்தால நேரத்தோட ஆளை அனுப்பிவிடும்'

- கட்டளை போல் சொன்னார் அருணாசலம்.

தனது பாரிய வேலைப் பளுவைச் சுமக்க முடியாமல், அதற்கு ஏற்ற ஆள் கிடைக்காமல் அவதிப்பட்ட அருணாசலத்திற்கு ஒரு கொழு கொம்பு கிடைத்தமாதிரி மகிழ்ந்திருப்பார் என்ற விசயம் அப்போது இவனுக்குப் புரிந்திராது.

இவனுக்கோ பெருமை பிடிபடவில்லை.

கைகள் காய்க்கக் காய்க்க எத்தனை நாளைக்குத்தான் தோட்டம் கொத்துகிறது? கூலிக்காரன் போல் குப்பை சுமக்கிறது? கை வலிக்காத வேலை. நாலு பேர் மதிக்கிற இடம். அலுக்குமா?

சந்தோஷக் கனவுகளில் மிதந்தான் இவன்.

இப்படித்தான் குருமூர்த்தியின் தொழில்முயற்சி ஆரம்பமானது.

பலத்த எதிர்பார்ப்புக்களுடன் தான் அருணாசலத்தின் அலுவலகத்தில் குருமூர்த்தி தொழிலை ஆரம்பித்தான்.

ஆனால், வேலையில் அமர்ந்த கொஞ்ச நாட்களிலேயே இவனுக்கு அந்தத் தொழிலில் இருந்த நாட்டம் குறையத் தொடங்கிவிட்டது.

காலையில் வந்ததும் வராததுமாக ஆரம்பித்து... இரண்டு மணியளவில் சாப்பிடப்போய் ஒரு மணி நேரத்துக்குள் திரும்பி வந்து, மீண்டும் பொழுது கருகும்வரை வேலை வேலை ஓய்வொழிச்சல், பொழுது போக்கில்லாதகைகடுத்த வேலை... பெரும்பாலும் மூளை விருத்திக்கு இலக்கில்லாத பிரதிசெய்யும்வேலை

அந்த இளம் வயதில் இடையீடில்லாத இயந்திரமயமான வேலையில் மனம் ஊன்றி லயிக்க மறுத்தது.

'சீ' இப்படியும் ஒரு வேலையா' என்று இவன் அலுத்துக் கொண்ட போது தான், இவனது இருபத்தோராவது வயதில் அந்த மகிழ்வூட்டும் செய்தி கிட்டியது.

இவன் சித்தப்பாவின் சிபாரிசில் 'த பைன் ஆர்ட்ஸ்'சில் வேலை கிடைத்தது.

எழிலார்ந்த கலைகளை ரசிக்கவும், அலங்கார வடிவமைப்புகளில் ஓவியத்தில் - தன் கைவண்ணத்தை வெளிப்படுத்தவும், மதிப்பார்ந்த மனிதர்களுடன் பழகும் சந்தர்ப்பத்தை எண்ணியும், இவன் மனமும் கரங்களும் மகிழ்வில் திளைத்த அந்த நாட்கள் நெஞ்சிசில் இனித்தன.

இப்படி .. இப்படியே வாழ்வில் ஏற்பட்ட இன்ப அதிர்ச்சிகளையெல்லாம் கடந்து, அரச ஊழியனாக முப்பத்தொன்பது ஆண்டுகள் கழிந்து விட்டனவா?

* *

குருமூர்த்திக்கு ஆச்சரியமாக இருந்து.

கண நேரத்தில் துளிர்விட்ட நினைவுகளெல்லாம் கரைந்து, இன்னும் இரண்டு வாரங்களில் வீட்டோடு முடங்கப் போகிறோமோ என்று நினைக்கவே மனதுக்கு வேதனையாக இருந்தது.

வயதுதான் ஆகிவிட்டதே தவிர, நடை உடைபாவனைகளிலோ செயற்றிறனிலோ ஒரு வாலிபனுக்குள்ள மிடுக்கும் கம்பீரமும் அவரிடம் இருக்கத்தான் செய்தது.

மூப்பின் சுருக்கங்கள் முகத்தில் தெரிந்தாலும் - தீட்சண்யமான அந்தப் பார்வையும், கிரிக்கட் ஆட்டக்காரனின் சுறுசுறுப்பும் மற்றவர்பால் அவரை வசீகரிக்கவே செய்தன,

அலுவலகத்திலாகட்டும், அங்காடிக்குச் சைக்கிளோட்டும் வேகத்திலாகட்டும் அவர் பம்பரமாய்ச் சுழன்று கொண்டேயிருப்பார்.

அரசாங்க அலுவலகம் என்றாலே, ஏதோ கூலிக்கு மாரடிக்கும் சோம்பேறிகளின் கூடம் என்று கருத்த தோன்றும் இந்தக் காலத்திலும் அவர் உழைப்பு ஊதியத்திற்கதிகமானது என்றால் மிகையில்லை.

'இந்த மனிசனென்ன, இப்பிடி அரசாங்கத்தைச் கட்டிக் கொண்டு அழுதாப் போல கோல்ட், மெட்லா கிடைக்கப் போகுது!' என்று சக ஊழியர்கள் தமக்குள் 'ஹின்ற்' அடிப்பது கூட அவருக்குத் தெரியாமலில்லை; என்றாலும் அதையெல்லாம் மனிதர் பொருட்படுத்துவதே கிடையாது,

தானுண்டு, தன் வேலையுண்டு என்று ஒதுங்கிப்போகவும் தெரியாத சுபாவம் அவருடையது.

'சப்ஜக்ட் கிளார்க்இல்லை' அது இது என்று சாக்குப் போக்குச் சொல்லும் நவ உலகில் அவர் ஒரு அப்பாவிப் புராதன ஜீவன்.

எல்லாவற்றையும் தனது தலையில் இழுத்துப் போட்டுக் கொண்டு இயந்திரமாய் உழைப்பதில் மனிதருக்கு ஒரு மனநிறைவு,

இப்படிப்பட்ட மனிதர்கள் நாலுபேர் கவண்மென்றில் இருந்தால் அரசாங்கத்திற்கும் லாபம் அபரிமிதமாயிருக்கும்; மக்களுக்கும் சேவை ஒழுங்காய்க் கிடைக்கும்

அலுவலகங்களில் வேலைகள் தாமதமாவதற்கு அடிப்படைக் காரணம், ஊழியர்களுக்குப்போதிய மொழித்தேர்ச்சி இல்லை என்பதே அவரது கணிப்பு.

வெள்ளைக்காரன் காலத்தில இங்கிலீசை என்னமாதிரிக் கையாண்டான்... நிர்வாகத்தை எப்படி

யெல்லாம் நடத்தினான்... நேரம், உடை, வேலை ஒழுங்கு என்று ஒவ்வொரு அம்சத்திலும் எவ்வளவு கவனமாகவும் கண்டிப்பாகவும் இருந்தான்... இந்தக் காலத்தில அதெல்லாம் தேய்ந்து குட்டிச் சுவரானதற்கு மூலகாரணமே ஐம்பத்தாறில் அமுல் படுத்தப்பட்ட மொழிக் கொள்கைதான் என்பது, அவர் மனதில் பெரும் வருத்தத்தையே உண்டாக்கியிருந்தது.

சாலியோ, கம்பளையோ, காங்கேசன்துறையோ எங்கே வேலை செய்தாலும் அந்தக் காலத்தில கஸ்டம் இல்லாமல் இருந்ததே, எல்லா உத்தியோகத்தர்களுக்கும் ஆங்கிலம் தண்ணிபட்டபாடாய் இருந்ததுதான் என்பது அவர் கணிப்பு.

பல்லின மக்களும் தத்தம் உணர்வுகளைப் புரிந்து கொள்ள ஓர் ஊடகமாய் இருந்ததே ஆங்கிலம் தானென்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை.

எந்த இனத்தவனாக இருந்தாலும், ஓர் உத்தியோகத்துக்கு அவசியம் வேண்டியது ஆங்கில அறிவு தானென்பது அவரது சித்தாந்தம்.

அதனைக் கண்கூடாகவே அவர் தம் வாழ்நாளில் உணர்ந்திருந்தார்

கொழும்பில்இருந்தபோது அத்தகைய ஏகப்பட்ட அனுபவங்கள் அவரை எதிர்கொண்டன.

தாய்மொழி மூலம் வேலை வாய்ப்புப்பெற்று புதிதாகத்தொழிலில் அமர்ந்த தமிழ்-சிங்கள இளைஞர்கள் பட்ட அவஸ்தையை அவர் நிதர்சனமாக உணரத் தலைப்பட்டார்.

'ஆக இருப்பதே இங்கு மூன்று மொழிகள். அவற்றை ஒவ்வொரு மனிதனும் கற்றுத் தேர்ந்தாலென்ன, குறைந்தா போவான்?' என்பது குருமூர்த்தியின் உள்ளத்தை உறுத்தும் விஷயம்.

தமது உள்ளக் கிடக்கையைப் பற்றி, அவர் தமிழ்-சிங்கள இளம் நண்பர்களுக்கு அறிவுறுத்தவும் தவறினாரில்லை.

தானொரு கிழம் சொல்ல வேண்டியதுதான். இளசுகள் தம் போக்கில் செல்ல வேண்டியதுதான் என்று அலுத்துக்கொள்வார்.

வெறும் இன உணர்வுகளோடு அமைதியாய் இருக்கவேண்டிய சமுதாயம், இனவெறி கொண்டு அலைந்து அவதியுறும் பரிதாப நிலை கண்டு கலங்கலானார்.

ஒவ்வொருவனும் தத்தம் தாய் மொழியில் பயின்று தேர்வில் தேறி தொழிலில் அமர்வதில் அவருக்கு உடன்பாடு இருந்தபோதும், தொழில், அமர்விற்கு முன்னதாக உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆறேழு மாதங்களுக்காவது தொழிற்பயிற்சி கொடுக்க வேண்டியது அவசியமென்பது அவர் ஆழ்மனதை ஊடுருவிக் கிளறும் கேள்வியாகும்.

இப்படியெல்லாம் அவர் சிந்தனைகள் இந்த நேரத்திலும் விரிவடைவதற்குக் காரணங்கள் இல்லாமலில்லை.

ஏதோ சொற்ப ஆங்கிலத் தேர்ச்சியுடன் திண்டாடும் இளைய சமுதாயம், தன்னைப் போன்ற 'சீனியர் ஒவ்பீசர்' எல்லாரும் ரிட்டயராகிப் போனால் என்ன செய்யப்

போகிறார்களோ என்று இயல்பாகத் தோன்றிய ஒருவித அச்சம் கலந்த சந்தேகமே அவர் மனதைக் குடைந்து ஆர்ப்பரிக்கலாயிற்று.

இந்த விதமான மானசீகக் கற்பனைகளில் ஆழ்ந்து போயிருந்த தன் மனதைச் சுயத்துக்குக் கொண்டுவந்து, அலுவலகத்தை ஒரு நோட்டம் விட்டார் குருமூர்த்தி.

சக உத்தியோகத்தர்கள் அனைவருமே, ரிட்டயராகிப் போகும் தன்னை ஒரு நோயாளி போல் அனுதாபத்துடன் நோக்குவதாகவே அவர் நெஞ்சுக்குத் தோன்றியது.

அதை ஆமோதிக்குமாப்போல், அடுத்து ரிடயர்ராகப் போகும் பரமசாமி சக உத்தியோகத்தர்களிடம் குசுகுசுத்தது அவர் காதில்லேசாக வந்து விழுந்தது -

'ஸீஸீக்கு இப்பவே யோசனை தொட்டிட்டுது போல தானும் ஈஸிச்செயரில ஒதுங்கவேணுமென்று...?

அந்த வார்த்தை அவர் நெஞ்சில் லேசாக உறைத்தது; வலித்தது.

சீண்டிவிட்டது ஒரு சின்ன வயதுப் பையனாயிருந்தால் அவர் லேசாக அதற்குப் பதில் சொல்லி விட்டிருப்பார். அடுத்த வருசமே தனது நிலைக்காளாகப் போகும் பரமசாமி அல்லவா சொல்கிறார். பொங்கிவந்த துயரதைக் கட்டுப்படுத்திச் சுதாகரித்துக் கொண்டார்-

சரி, இவருக்குச் சரியான பதில் சொல்ல ஒரு சந்தர்ப்பம் வராமலா போகப்போகிறதென்று தனக்குள்மென்றார்.

அவர் எதிர்பார்த்த சம்பவம் கையோடு வருமென்று அவருக்கு நினைக்கவே தோன்றவில்லை.

இளம் சகா ஒருவன் லேசாக முணுமுணுத்தது அவர் காதிலும் வீழ்ந்தது.

இனிப் பெண்டாட்டி பிள்ளையெல்லாம் ஒரு பொருட்டாய் மதிக்காதுகள் என்றுதான் ஆளுக்கு யோசனை பிடிச்சிட்டுது போல...

குருமூர்த்தி உசாரனார்.

'தம்பி, காவோலை விழ குருத்தோலை சிரிக்குமாம்... அடுத்த வருசம் இன்னொன்று விழும். உமக்கும் ஒரு 'ஸீஸீ' போஸ்ற் கிடைக்க வாய்ப்பிருக்கு...'

-குத்தலாகச் சொன்னதில் குருமூர்த்திக்கு குரூரமான சிரிப்பொன்று இதழ்க் கோடியில் தவழ்ந்தது.

இவருக்கு காது சற்று மந்தமென்று நினைத்து கிசுகிசுத்தது எவ்வளவு தப்பாகப் போய்விட்டதென இளைஞன் மனம் வருந்தியதையும் அவதானித்தார்.

தலையைத் தாழ்த்தி. ஓரக்கண்ணால் பரமசாமியைப் பார்த்தார்.

குருமூர்த்தியின் கிண்டலைக் காதில் வாங்கிக் கொள்ளாதவர் போல், பரமசாமி பாசாங்கில் பைல் கட்டுக்குள் தலை மூழ்கிக் கிடந்தார்.

'நாலு காசு சம்பாதிக்கிறவரையில் தான் மனிசனுக்கு நடப்பும் நாட்டாண்மையும்...நாய் தின்னாக் காசில்லாவிட்டால் எல்லாமே நாறும்...'

- பக்குவப்பட்ட குருமூர்த்தியின் மனதில்கூட விரக்தி வேதாந்தம் வெடித்தது.

'கவண்மென்ற் பென்சனியர் தான்... முப்பது வருடத்துக்கு மேல் சேவிஸ் வேறு... ஃபுல் பென்சன் 90%மும் கிடைக்கத்தான் போகுது... ஆனாலும் நான் இனி செல்லாக்காசுதான்...'

- நினைக்கவே மனது கலங்கியது. கட்புருவத்தில் அரும்பிய நீர்த்திவலைகளை, கண்ணாடியைக் கழற்றித் துடைத்துக் கொண்டார்.

'சீ.. மனிசனுக்கு எழுபது வயதானாலும் சரி, கை கால் முடங்காமல் இருக்கிற வரையில ஒரு வேலை செய்துதானாக வேணும். இல்லாவிட்டால் ஈயெறும்பு கூட கிட்ட நெருங்காது...'

- தனக்குள் அலுத்துக் கொண்டார் குருமூர்த்தி.

இருந்தாற்போல் சக உத்தியோகத்தர் சிவலிங்கம் துள்ளினார்.

'மிஸ்டர் பரமசிவம்! 'சீவ்' புக்கு அடிச்சாலும் அடிக்குது குருச்சந்திர யோகம்...'

புதிர் போட்டுவிட்டு குருமூர்த்தியைப் பார்த்தார் சிவலிங்கம்.

என்ன அப்படி விசேஷம் என்று ஆவல் பரபரக்க, அதை வெளிக்காட்டாமலே காதைக் கூர்மையாக்கினார் குருமூர்த்தி.

சிரித்துக் கொண்டே சிவலிங்கம் உரக்கக் கூவினார்

'மூன்றாம் பக்கத்திலை ஒரு முக்கியமான விளபரம்... மாகாண சபையில் ஒய்வு பெற்ற எழுதுவினைஞர்களுக்குமீள வேலைவாய்ப்பாம்...

குருமூர்த்திக்கு மெய்ம்மயிர் சிலிர்த்தது.

முதன்முதலில் வேலையில் சேர்ந்தபோது ஏற்பட்ட இனந்தெரியாத உணர்வு குதிர மனது புல்லரித்து ஓடிடபோய் சிவலிங்கத்திடம் பேப்பரைப் பறித்து பார்க்க வேண்டும் போல் மனது உறசாகத்தில் குதித்தது.

நெஞ்சில் தேங்கிவந்த உணர் வூற்று மறுகணமே வற்றிப் போன தான கற்பனையில் நெஞ்சு நெகிழ்ந்தார்.

'எனக்கு வெடிகுண்டு போடுகிறான்கள், என்னைச் சோதிக்க, இதுக்கெல்லாம் மசியக் கூடாது'

- அந்தச் செய்திக்கும் தமக்கும் சம்பந்தமே இல்லாததுபோல், தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டார் குருமூர்த்தி,

சிவலிங்கம் எழுந்து, கையில் பிரித்த பத்திரிகைத்தாளுடன் குருமூர்த்தியின் மேசையண்டை நெருங்கி வந்தார்.

'அட, செய்தி உண்மைதானா -?'

- குருமூர்த்தி ஆவலுடன் நோட்டம் விட்டார்.

நெஞ்சில் தேன் பாய்ந்தது -

பத்திரிகையைக் கையில் வாங்கிக்கொண்டு, மூன்று 'ஹப் ஷீற் + இரண்டு காபன்கள சகிதம்'ரைப் ரைட்டரை' நோக்கி உற்சாகத்துடன் நடந்தார்.

# சுபத்திரன் – எனது நினைவுகள்

— துரைரட்ணம் —

சுபத்திரன்! சுபத்திரன் இந் நாட்டின் வாலிபர்களைப் போல் ஒரு காலத்தில், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைக்காண தமிழரசுக கட்சியில் இணைந்து செயல்பட்டவர்தான். இருந்தாலும் பின், அவர் விடயங்களைப் புரிந்து கொண்டு அதாவது, அந்த குறுகிய இனவாத கண்ணோட்டத்திலிரு ந்து விடுபட்டு. இந்நாட்டின் முழு மக்களுக்குமான ஒருசமுதாய மாற் றம்தான் தேவை, அந்த புரட்சிகர மாற்றத்தின் மூலம்தான் எல்லா மக்களினதும் பொருளாதார, சமூ கப் பிரச்சினைகள் தீர்க்கப்பட முடி யும், என்ற அசைக்க முடியாத நம் பிக்கையில், அவ்வப்போது புரட்சி கரமாக இருந்த இயக்கங்களோடு இணைந்து உழைத்தார்.

அவர் இன-மத-சாதி பிரதேச வேறுபாடுகளைக் கடந்த ஒரு சர்வதேசியவாதி அதிகார ஆசை எள்ளளவும் அற்ற ஒரு சிறப் பான மனிதர், ஒரு பாட்டாளி வர் க்க புரட்சிக்காரன்.

சுபத்திரன் ஒரு கவிஞர் மட்டு மல்ல, ஒரு அரசியல் வாதியும்கூட அவர் ஒரு வளுவளுப்பான அரசியல் வாதியாக அல்லாமல் ஒரு தீர்க்க மான அரசியல் வாதியாகவே இருந் தார். உழுத்துப்போன கருத்து முதல் வாதத்திற்கெதிராக, ஒரு இயங்கியல் பொருள் முதல் வாதி யாகவே செயல்பட்டார்.

அவர், பாட்டாளிவர்க்க தத் துவமாகிய மார்க்ஸ்ஸிசத்தை ஏற் றுச் செயல்பட்ட ஒரு பாட்டாளி வர்க்க ஊழியன். அதனால் அவர் பாராளுமன்ற அரசியலில் எள்ளள வும் நம்பிக்கை அற்றவராக இருந் தது மட்டுமல்ல அதை எதிர்த்தும் வந்தார். அவர் அரசியலில் ஈடுபட் டிருந்த காலத்தில் தன் சொந்த வாழ்க்கையை மறந்த நிலையில் இருந்ததினால், தனது தொழிலை ஒரு முறை இழந்து மீண்டும் பெற் றுக் கொண்டார். அவர் தனது குடும்ப வாழ்க்கையை விட, பொ துப் பணியிலேயே கூடிய அக்கறை காட்டி வந்தார்

அவர் தனது தாயாரின் பொரு ள்களைக் கூட, அவரின் அனுமதி யின்றிக் கையாடி, விற்று இயக்கத் திற்காக செலவு செய்திருக்கிறார் அந்த அளவிற்கு இயக்கத்தில் ஆறாப்பற்று வைத்திருந்தார் உண் மையில் கூறுவதானால், அவர் ஒரு அரசியல் வாதியாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் போதே கவிதை கள் படைத்தார். அவர் அரசிய லில் ஈடுபட்ட முழுமையின் ஒரு பகுதியே கவிதை படைத்தது. அவர் ஒரு நடை முறைக் கவிஞன், அத னால் தான் அவரது கவிதைகளில் உத்வேகம் காணப்படுகின்றது. அவ ரின் இன்னுமொரு சிறப்பு என்ன வெனில், அவர் தான் படைத்த கவிதைகளை தானே விமர்சனம் செய்துள்ளார்.

சுபத்திரனின் கவிதைகளில், ஏற்கனவே ஒரு தொகுதியை, 'ரத்தக் கடன்' என்ற வடிவில் வெளியாக்கி உள்ளோம். சுபத்திரன், தீண்டாமையை வன்மையாக சாடி உள்ளார். அவர், பேனா முனையில் மட்டும் முற்போக்கு காட்டி விட்டு, வாழ்வில் எஞ்சிய பகுதிகளில் வாழா விருக்கவில்லை அவர் மட்டக்களப்பு மாநகரசபை நகர சுத்தித் தொழிலாளர்களின் ஒரு தொழிற்சங்கப் போராட்டத்தில் என்னோடு சேர்ந்து நேரடியாக அவர்களுடன் பங்கு கொண்டு இருந்தார். அது மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட்டங்களின் போது,அங்கு இடம் பெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகு ஜன மகாநாடு, தீண்டாமை ஒழிப்புக் கண்காட்சி, போன்ற நிகழ்ச்சிகளுக்கு, என்னையும் அழைத்துச் சென்று அதில் பங்கு கொண்டிருக்கிறார். அவர் தாழ்த்தப்பட்ட மக்களின், அதாவது தாழ்ந்தசாதியென்று கூறப் படுபவர்களின் குடும்ப நண்பராக இருந்து, அவர்களுடன் உண்டு உறங்கி, வாழ்ந்து காட்டிய நடைமுறைக் கவிஞன் இவைகள் யாவும் நான் கேள்விப் பட்ட விடயங்கள் அல்ல, என் கண்களால் கண்டு அனுபவித்த உண்மைகள். அவர் அவர்களுக்காக நிறையக் கவிதைகள் தீட்டியுள்ளார். அவருடைய கவிதைகள் மாமேதை லெனின் கூறியதைப் போல் சமூகப் போராட்டத்திற்கு பல்லும் சில்லுமாக விளங்குகின்றது, உத்வேகத்தை கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

'தும்புத்தடி படாத இடத்திலிருந்து தூசு தானாக அகலாது, அதை துடைத்தே அகற்ற வேண்டும்' என்று, தோழர் மா ஓ சேதுங் கூறிய கருத்தை தோழர் சுபத்திரன் ஏற்று வாழ்ந்தார் தன் கவிதைகள் பற்றிய விமர்சனங்களுக்கு நேர்மையாக முகம் கொடுத்தார். காலஞ்சென்ற கலாநிதிகைலாசபதி அவர்கள் கவிஞர் சுபத்திரனின் கவிதை பற்றி சில இடங்களில் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. உலகில் உள்ள சமூக கவிஞர்களை அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதிலொன்று, கருத்து முதல் வாதக் கவிஞர்கள். மற்றையது இயங்கியல் பொருள் முதல் வாதக் கவிஞர்கள், இன்னுமொரு வகையில்சொல்லுவதானால்,கலை கலைக்காக என்பவர்களும், கலை மக்களுக்காக என்பவர்களுமாவர் முந்தியவர்கள் சமூகப் பிரச்சனைகளை தலைகீழாகப் பார்ப்பவர்கள் பிந்தியவர்கள் சமூகப் பிரச்சனைகளை சரிநேராகப் பார்ப்பவர்கள் கவிஞர் சுபத்திரன் இரண்டாம் பிரிவினைச் சார்ந்தவர். அப்படியாயின் அவர் கவிபாடியது யாருக்கு?யாரை எண்ணிப் பாடினார்? சுரண்டப் படும் வர்க்கத்தை எண்ணியே, அதாவது சமூகத்தில் தாழ் நிலையில் உள்ள அடக்கியொடுக்கப்படுகின்ற மக்களை எண்ணியே சமூகத்தில், அடிமை நிலையில் இருந்து விடுதலையை வேண்டி நிற்பவர்களை எண்ணியே அவர் பாடினார்: அதனால் அவர், அவர்கள் புரியும் படியாகவே கவிதைகள் பாடியுள்ளார். அவர் யாரை எண்ணிப் பாடினரோ அவர்கள் அதை செவிமடுக்கின்றார்கள். வேறு ஒரு நிலைப்பாட்டில் நிற்பவர்கள் அதைப் புரிந்து கொள்ளாமல் இருப்பார்கள் இது சமூக நியதிக்கு விதிவிலக்கா

னதல்ல. சுபத்திரன், தன்னைச் சூழ வுள்ள முற்போக்கு எண்ணங் கொண்டவர்கள், அவரைத்தேடி அடையாளங் கண்டு கொள்ளுமுன் தானே அவர்களை சென்றடைந்து விடும், மிகவும் ஊக்கமுள்ள ஒரு இயங்குநர். என்னையும் அவரே தேடி வந்து அவரோடு இணைத் துக் கொண்டார். நான் முற்போக் குக் கருத்துக்களோடு இருந்திருந் தாலும், விஞ்ஞான அரசியலை முதன் முதலில் காட்டித்தந்து என் னை அரசியலில் இறக்கியவரும் அவரே.

சுபத்திரன் எனக்கு மிகவும் நெருக்கமான தோழர். என் வாழ் நாட்களில் மறக்கவே முடியாத, எள்ளளவும் சுயநலமற்ற என் தோ ழன். சுபத்திரன், அரசியலில் தனக் கிருந்த ஸ்தானங்களிலிருந்து தா னாகவே விட்டு விலகி என்னை அதில் அமர்த்தி, அரசியலில் முன் னோக்கித் தள்ளி, என்னோடு, தோளோடு தோள்பூண்டு அதில் தான் மகிழ்ச்சி கொண்ட ஒரு சிற ப்பு மிக்க மனிதர்.

என் வாழ்நாட்களில், இது வ ரைக்கும் எனக்குக் கிடைத்த ஒரே யொரு, சிறப்புமிக்க தோழன் சுபத் திரன்தான். என் மீதி நாட்களில், அப்படியொரு தோழனை, நான் மீண்டும் அடைவேன் என்பதில் எனக்கு நம்பிக்கை பிறப்பதாகவே யில்லை.

''தனியொருவனுக்கு உணவு
இல்லையெனில் - இந்த
ஜெகத்தினை ஒழித்திடுவோம்'

என்று பாடி, மகாகவி பாரதி யார் சிறப்புப் பெற்றார். சுபத்தி ரனோ

''ஒருகோடிக் கவிதைகளால்
உலகம் போற்றும்
பெரும் கவிஞனென நாமம்
பெற்றாலும் அஃது
ஒரு சொட்டு இரத்தத்தை
உரிமைப் போரில்
தருபவன் புகழ் முன்னே
தூசு! தூசு!!

என்று பாடியே சிறப்புப் பெற்றான். சுபத்திரன், ஒரு கவிஞன் மட்டும ல்ல, மக்களுக்குள் இறங்கி, வெகு ஜன வேலை செய்த ஒரு அரசியல் வாதி என்பதற்கு இதுவே சான் றாகும். மேலும் தத்துவம் மட்டும் பேசுவதை விட தளத்தில் இறங்கி வேலை செய்வதே உயர்ந்தது, சிற ப்புப் பெற்றது, என்று, தானொரு கவிஞனாக இருந்தும், மனம் திறந்து களங்கம் இல்லாமல் கூறு வதை என்னவென்று கூறுவது!

அது தான் சுபத்திரன்!

சுபத்திரன் ஒரு திறமைசாலி. வாழ்நாள் முழுவதும் பொதுப் பணி க்காக உழைக்கக் கூடியவர். கவி ஆற்றல். பேச்சாற்றல். விவாதிக் கும் திறமை நிறையப் பெற்றவர். அவர் நினைத்திருந்தால் தமிழர சுக்கட்சிக் காலத்தில் பாராளுமன்ற அரசியலிலேயே தொடர்ந்து பங்கு கொண்டு தனது திறமையைப் பயன் படுத்தி ஒரு சிறந்த பாராளுமன்ற அரசியல்வாதியாக முன்னேறி தன து வாழ்க்கையை வேறு திசைக்கே திருப்பி வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர் அப்படியெண்ணாமல் ஒரு சுயநல வாதியாக வாழவிரும்பா மல், தனது மனச்சாட்சிக்கு மா றாக வாழாமல் மார்க்சிச விஞ்ஞா னம் காட்டிய, கடினமான ஆனால் சரியான அரசியலையே தேர்ந்தெ

டுத்து அதற்காகவே வாழ்ந்தார். குறைந்தது, அவர் தானுண்டு தனது தொழிலுண்டு என்றுகூட வாழந்திருக்கலாம்.

சுபத்திரன் ஒரு எளிமையான தோற்றமுடையவர். அவர், தன்னைப் பற்றிக் கவலைப் பட்டு, தனக்காக எப்பவுமே சேர்த்து வைத்தவர் அல்லர். சுபத்திரனோடு நான் கழித்த நாட்கள் அநேகம். அந்தப் பசுமையான நாட்கள் என் மனதை விட்டு ஒருபோதும் அகலப் போவதில்லை. சுபத்திரனை நான், உரிமையோடு பலமுறைகள் விமர்சனம் செய்துள்ளேன். அவ்வேளைகளில் நட்பின் காரணமாக எல்லை மீறி பலமுறைகள் ஏசியுள்ளேன். இருந்தும், மறுநாள் அவர் என்னுடன் நிற்பார். சுபத்திரன் என்னோடு சேர்ந்திருக்கும் வேளையில் என்னை விட்டுப் பிரிய மனம் இல்லாமலேயே இருப்பார். பல இரவுகள் நாங்கள் இருவரும் நீண்ட நேரம் அரசியல் விடயங்களைக் கலந்துரையாடி இருக்கிறோம். மணிக்கணக்கில் விவாதிப்போம். எங்கள் விவாதம் முற்றுப் பெறும்வரை நாங்கள் பிரிவதே இல்லை. எடுத்துக் கொண்ட விடயத்திற்கான விவாதம் முற்றுப் பெறாமல் இடை நிறுத்திய நாட்கள் மிக மிக அரிது. முடிவு கண்டே விலகிச் செல்வோம்.

பல இரவுகள் நாங்கள் இருவரும், நகரத்தில் இருந்து அவர் வீட்டிற்கும், அவர் வீட்டில் இருந்து என் வீட்டிற்கும் பின் என் வீட்டில் இருந்து அவர் வீட்டிற்கும் நடந்து நடந்து முடிவில்லாமல் கலந்துரையாடிய, விவாதித்த பசுமையான இரவுகள் என் நினைவிற்கு வருகின்றது, என் கண்கள் நனைகின்றன.


## வெளிவருகிறது!

மட்டக்களப்பின் முற்போக்கு கவிஞன் சுபத்திரனின்

# "சுபத்திரனின் கவிதைகள்"

கவிதைத் தொகுதி நூல் விரைவில் வெளி வருகிறது-

வெளியீடு: ''வயல்''
37, இரண்டாம் குறுக்குத்தெரு,
வேலூர் - கல்லடி,
மட்டக்களப்பு
இலங்கை.

# உறவு அழுதது

—சுபத்திரன்—

தும்பையும் பஞ்சையும் தேடிப் பொறுக்கித்
தூக்கணாங் குருவி கூடொன்று செய்து
முட்டையிட்டு அடை காத்திருந்தது.

தென்றலும் கொண்டாலும் ஊஞ்சல் ஆட்டிய
கூட்டினுள் முட்டைகள் சூட்டில் பழுத்தன
குஞ்சுகள் உலகை வந்து பார்த்தன
காற்றையும் ஒளியையும் தொட்டு நுகர்ந்தன

குருவிக் குஞ்சுகள் தங்கள் மொழியினிலே
மழலை பேசின தாய்மை நிறைந்தது.
சருகில், வாடி மலர்கள் வீழ்ந்திடுஞ்
சத்தங் கேட்பினும் உயிர் நடுங்கிடும்
குஞ்சை சிறகினுட் பொத்திப் பேணிடும்
பாசம் பயந்து பதறி நடுங்கிடும்

குழைந்து வீசிய காற்றுக் கும்மிட
கிளைகள் முறிந்து கூடு விழுந்தது
கூட்டினுள் தொட்டில் ஆடிய குஞ்சுகள்
தரையில் வீழ்ந்து தத்தளித்தன
சிறகு முளைத்திடாப் பருவம்; சிறு சிறு
துண்டு மாமிசம் போலவை ஊர்ந்தன.

கூக்குரல் இட்டது காடே அழுதது
கிளை கிளையாகத் தாவித் தவித்தது
தாய்மையின் வேதனை நெஞ்சை எரித்திட
வானம் துயரிலே வாடி அழுதது.

உறவுகள் சிறகுகள் முளைத்திட மட்டுமே
என்று எண்ணிய பறவையின் நினைவுகள்
சிறகுகள் முளைத்திட முன்னமே உறவுகள்
செத்தன கண்டு உறவு அழுதது.

# தமிழ் இலக்கிய வரலாறும் சங்கமருவிய காலமும்

க. யோகநாதன்

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி. பி. 3 - 6 இடைப்பட்ட நூற்றாண்டுப் பகுதி சங்கமருவிய காலம் என வழங்கப்படுகின்றது தமிழ் இலக்கிய வரலாறு பற்றி கருத்துக் கூற வந்த பலர் இக் காலப்பகுதியை ஓர் இருண்டகாலம் என்றே கூறிவருதல் மரபாக உள்ளது இலக்கிய மாணவர்களும் இதனை அவ்வாறே ஏற்றுக் கற்கும் நிலையும் காணப்படுகின்றது. சங்கமருவிய காலத்தை ஓர் இருண்டகாலம் எனக் கூறத்துணியும் இன்றய தமிழ் அறிஞர்களுக்கு வழிகாட்டி நிற்பவர். பேராசிரியர் கே. நீலகண்ட சாஸ்திரி அவர்களே ஆவார் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி அவர்கள் தென்னிந்திய வரலாறு என்றநூலில் சங்கமருவிய காலம் பற்றி கூறுகையில் பின்வருமாறு கூறுகின்றார்.

'சங்க காலத்திற்குப் பின் தமிழக வரலாற்றில் இருள் கவிழ்ந்தது. அந்த இருள் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் தொடர்ந்திருந்தது. அந்த நீண்ட இரவிற்குப் பின் கி.பி ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழக வரலாற்றில் மீண்டும் ஒளி தோன்றியது. கண்ணைக் கசக்கிக் கொண்டு நமது பார்வையை நம்மைச் சுற்றிலும் ஓட்டும் போது ஒரு கசப்பான உண்மை நமக்குப் புலனாகின்றது. களப்பிரர் என்ற ஒரு மக்கட் கூட்டத்தினர் தமிழகத்தை கைப்பற்றி அங்கே நெடுங்காலமாய் நிலைத்திருந்த அரசியல் அமைப்பை அழித்து விட்டனர் என்றும் யாரென்றே தெரியாத அவர்கள் தமிழ் நாட்டின் நாகரீகத்திற்கும் பண்பாட்டிற்கும் பகைவர்களாய் இருந்தார்கள் என்றும் நாம் அறிகின்றோம். இறுதியில் அவர்களைப் பாண்டியர்களும், பல்லவர்களும், பாதமிச் சாளுக்கியர்களும் எதிர்த்தார்கள். அதனால் ஏற்பட்ட போர்களில் களப்பிரர் தோற்று அழிந்தனர். இதன் பிறகுதான் தமிழகத்தில் மீண்டும் பழைய அரச மரபுகள் தலையெடுத்தன. தமிழ் மக்களின் ஆட்சி மறுமலர்ச்சி பெற்றது.' 1

என்று சங்கமருவியகாலத்தைப் பற்றி பேராசிரியர் நீலகண்ட சாஸ்த்திரி அவர்கள் கூறுகின்றார்.

பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி அவர்களைத் தொடர்ந்துதமிழ் இலக்கிய வரலாறு கூறப் புகுந்த பல தமிழ் அறிஞர்கள் சங்கமருவிய காலத்தை இருண்ட காலம் எனக் கூறுவதை மரபாக்கி விட்டனர் என்றே கூறுதல் வேண்டும்.

தமிழ் இலக்கிய வரலாறு கூற வந்த தமிழ் நாட்டு தமிழ் அறிஞர் கலாநிதி சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் சங்கமருவியகாலம் பற்றி பின் வருமாறு கூறுவார்.

'இக்காலத்தில் ஏற்பட்ட அயலாரின் ஆட்சியிலே தமிழ் மொழி ஆதரிக்கப்படாமல் தாழ்த்தப்பட்டு வளர்ச்சி குன்றிப் போற்றுவாரற்று விளங்கியதால் தமிழ் மொழியில் பெருமளவிலும் சிறப்பான முறையிலும் நூல்கள் தோன்றுவதற்கு இயலாமல் போய் விட்டது எனவே தமிழ் இலக்கிய வரலாற்றிலே இக் காலப்பகுதியினை இருண்டகாலம் என்று குறிப்பர்''2

இவ்வாறு இன்னும் வேறுதமிழ் அறிஞர்கள் சங்கமருவிய காலத்தை இருண்ட காலம் என்றே இன்று வரை கூறி வருகின்றனர். இவ்வாறு இவர்கள் கூறும் கருத்தையும் அதற்கான காரணங்களையும் தொகுத்து நோக்கின் அவறறைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

1) சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமை சீரழிந்த காலம்.
2) அன்நியர் ஆட்சி நிலவிய காலம்.
3) கொடுங் கோன்மை ஆட்சி நிலவிய காலம்.
4) பண்டைத் தமிழர் பண்பாடு சிதைந்த காலம்.
5) அவைதீக மதங்கள் ஆதிக்கம் பெற்று இருந்த காலம்
6) சிறந்த இலக்கியங்கள் தோன்றாத காலம்.

மேலே தரப்பட்டுள்ள காரண நியாயங்களைக் கொண்டே சங்கமருவியகாலம் இருண்ட காலம் எனக் கூறப்படுகின்றது. இந்தக் காரண நியாயங்கள் எவ்வளவு பொருத்தமானவை? இக் காரண நியாயங்களைக் கொண்டு நாம் இன்று சங்கமருவிய கால இலக்கிய உலகை ஓர் இருண்ட காலம் எனக் கூறுதல் தகுமா? என்கின்ற கேள்விக்கு விடைகாண வேண்டியவர்களாக உள்ளோம். எனவே இக்காரண நியாயங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக நோக்குதல் நன்று.

1) சங்க காலத்தில்(கி.பி. 3 நூற்றாண்டிற்கு முன்னர்) முச் சங்கம் இருந்து தமிழ் வளர்த்த கதை வெறும் ஐதீகக் கதை. திட்டவட்டமான சான்றாதரங்கள் எதுவும் அற்ற கதை. மூன்று சங்கம் இருந்து தமிழ் வளர்த்த சங்கதியை விளக்கமாக கூறும் முதல் நூல் ''இறையனார் அகப் பொருள் உரை'' என்ற நூலே ஆகும். இந்த நூல் கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு உரியது என்பது அறிஞர் தம் முடிபு இந் நூலில் மூன்று சங்கங்கள் பற்றி கூறப்படும் கருத்துக்கள் இயற்கை நிகழ்வுகளுக்கு இசைவாக முடியாத கருத்துக்கள் ஆகும். முதற் சங்கத்தில் சிவபெருமான் முருகன் ஆகிய சைவசமயக் கடவுளர்கள் எல்லாம் புலவர்களாய் வீற்று இருந்தனர் என்று கூறப்படுகின்றது. இறையனார் அகப்பொருள் உரையில் கூறப்படும் மூன்று சங்கச் செய்திகள் இந்து மதச்சார்பி உடையனவாக காணப்படுகின்றது. இருக்கு வேதத்தில் கூறப்படும் அகத்தியர் மூன்று சங்கச் செய்திகளோடு தொடர்பு படுத்தப்படுவதும் இதனாலேயே ஆகும்.

மூன்று சங்கச் செய்திகள் சமயப் போட்டியின் விளைவாக எழுந்த வெறும் கற்பனைக்கதை என்று நடுநிலை ஆய்வாளர்கள் இன்று எடுத்துக் கூறுகின்றனர். பேராசிரி

யர் வையாபுரிப்பிள்ளை பேராசிரியர் வேலுப்பிள்ளை போன்ற தமிழ் அறிஞர்கள் இவ்வகையில் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்கள். கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல்சமண.பௌத்த சமயங்களை தமிழ் மக்கள் மத்தியில் இருந்து விரட்டியடிப்பதில் மும்முரமாக தொழிற்பட்ட இந்து மதத்தினரே முச்சங்கம் இருந்து தமிழ் வளர்த்தகட்டுக்கதையை உருவாக்கினர். சங்கமருவிய காலத்தில் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கோடு இருந்த சமண, பௌத்த சமயத்தினர் தம் சமயப்பணியோடு தமிழ்ப்பணியும் புரிந்தனா. தமிழ் மக்களை தம் பக்கம் கவருவதற்கு அவைதீக மதத்தினருக்கு தமிழ் பணியும் ஓர் கருவியாக உதவிற்று உதாரணமாக சங்கமருவிய காலத்தில் தோன்றிய நூல்லாகிய சிலப்பதிகாரத்தில் சமண சமயக் கருத்துக்களும், மணிமேகலையில் பௌத்த சமயக் கருத்துக்களும் பெரிதும் எடுத்துப் பேசப்படுகின்றன.

மேலும் அவைதீக மதத்தினரின் சமய அமைப்பு'சங்கம்' என்றே அழைக்கப்பட்டது. சிறப்பாக பௌத்தர்களின் மத அமைப்பு 'சங்கம்' என்றே அழைக்கப்படும். இச்சமயச் சங்கங்களில் இருந்தே சமண பௌத்த முனிவர்கள் தம் சமயப் பணியோடு தமிழ்ப்பணியையும் புரிந்தனர். இத்தோடு கி. பி 470 ஆம் ஆண்டளவில் இன்றய மதுரைக்கு அருகே 'வச்சிர நந்தி' என்னும் சமண முனிவர் 'திராவிட சங்கம்' என்றோர் சங்கம் அமைத்து தமிழ்ப்பணி புரிந்தார் என்பதற்கான ஆதாரங்கள் இன்று கிடைக்கின்றன.

இவ்வாறு அமைப்பாக இருந்து சமண, பௌத்த முனிவர்கள் புரிந்த தமிழ்பணிக்கு மக்கள் மத்தியில் இருந்த கவர்சியை தம் பக்கமாய் வென்றெடுக்கும் நோக்கிலேயே கி. பி ஆறாம் நூற்றாண்டின் பின் இந்து சமயத்தினர் மூன்று சங்கம் பற்றிய கட்டுக்கதையை உருவாக்கினார். அவைதீக சமயத்தினருக்கு முன்னரேயே இந்து சமயத்தினர் அமைப்பாகக் கூடி தமிழ்ப் பணி புரிந்தனர் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவும், அதன் மூலம் தமிழ் மக்களை தம் மதம் பால் கவரவுமே இந்துசமயத்தினர் மூன்று சங்கங்கள் பற்றிய கற்பிதக் கதையை உருவாக்கினார். தம் சமயக் கடவுளர்களின் பெயர்களை அச் சங்கங்களோடும் தமிழ்ப்பணியோடும் தொடர்பு படுத்தினர்.

எனவே சான்றுகளற்ற கற்பிதமான 'சங்கம்' பற்றிய கருத்தை ஆதாரமாக வைத்து அச்சங்கங்கள் அற்றுப் போன காலம் சங்கமருவிய காலம். அதனால் அக் காலம் இருண்ட காலம் எனக் கூறுதல் பொருத்தமான கூற்று அல்ல.

2) ஒரு குறிப்பிட்ட மொழிபேசும் சமூகத்தினரை குறிப்பிட்ட காலப் பகுதியில் அந்நியர் ஆட்சி புரிந்தனர் என்பதற்காக அக்கால கட்ட இலக்கிய வரலாறு இருண்ட காலமாக இருக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. அந்நியர் ஆட்சிக் காலம் என்பதால் சங்கமருவிய கால இலக்கிய உலகை இருண்ட் காலம் எனக் கூற வேண்டுமானால் தமிழ் இலக்கிய வரலாற்றில் இருண்ட காலங்களே அதிகம். பல்லவர் காலம் (கி. பி. 6 - கி. பி. 9) நாயக்கர் காலம் (கி.பி 13-கி.பி17) ஐரோப்பியர் காலம் (கி.பி18-கி பி. 19) ஆகிய இலக்கிய காலப் பகுதி

களில தமிழ் நாட்டை ஆட்சி புரிந்தவர்கள் தமிழர்கள் அல்லாத அந்நியர்களே. ஆகவே அந்நியர்கள் ஆட்சி செய்தார்கள் என்ற காரணத்திற்காக சங்கமருவிய கால இலக்கிய உலகை இருண்ட காலம் எனக் கூற வேண்டுமாயின் மேற்படிக் காலங்களையும் இருண்டகாலம் என்றே கூறவேண்டி ஏற்படும். ஆகவே அந்நியர்கள் தமிழ்நாட்டை ஆண்ட காலம். எனவே சங்கமருவிய காலம் ஓர் இருண்ட காலம் என்பது பொருந்தாது.

3) களப்பிரர்கள் கொடுங்கோன்மை மிக்கவர்கள் என்பதால் சங்கமருவிய காலஇலக்கியவரலாறு இருண்டதாய் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. மேலும் களப்பிரர்கள் கொடுங்கோன்மை ஆட்சியாளர்கள் என்பதற்கு ஆதாரங்கள் காட்டுதற்கு ஏதும் இல்லை. சங்கமருவிய கால இலக்கிய வரலாற்றைக்கூறும் பொழுது அக்காலகட்டத்தில் தமிழ் நாட்டைஆட்சி புரிந்த களப்பிரர்கள் பற்றி இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர்வி.செல்வ நாயகம் அவர்கள் பின்வருமாறு கூறுவார். 'களப்பிரர் என்னும் ஒரு மக்கட் குழுவினர் தமிழ் நாட்டைக் கைப்பற்றி ஆளத் தொடங்கினர். அவர் யாவர்? அவராட்சி எத்தகையது? என்றெல்லாம் நாம் திட்டமாகக் கூற முடியாத நிலையிலிருப்பதால் தமிழ் நாட்டின் வரலாற்றில் அவராட்சிக் காலம் ஓர் இருள் பரந்த பகுதியாகவே காட்சியளிக்கின்றது' (3) என்ற பேராசிரிய செல்வநாயகம் அவர்களின் கூற்று நமக்கு எடுத்துக் காட்டுவது என்ன? களப்பிரர் ஆட்சி எத்தகையது என்று கூற முடியாது என்பது செல்வநாயகம் அவர்களின் கருத்து. காரணம் அவ்வாறு எதுவும் கூறுவதற்கு வரலாற்று ஆதாரம் எதும் இல்லை. இவ்வாறு வரலாற்று ஆதாரம் ஏதும் அற்ற நிலையில் களப்பிரர்களின் ஆட்சியைத் 'தமிழகத்திற்கு இவர்களால் ஏற்பட்ட குழப்பமும், இழப்பும் அளவிறந்தன. இவர்கள் கொடுங்கோலர்கள். கலியரசர்கள்' என மனம் போன வாக்கில் கே. கே' பிள்ளை போன்ன தமிழ் அறிஞர்கள் கூறும் களப்பிரர்கள் கலியரசர்கள் என்ற கூற்றை எவ்வாறு ஏற்க முடியும்? எனவே களப்பிரர் கொடுங்கோலா. ஆகவே சங்கமருவிய கால இலக்கிய உலகு இருண்டது எனக் கூற முயல்வது பொருத்தம் அற்றது.

4) களப்பிரர்களின் ஆட்சியால் பண்டைத் தமிழ்ர் பண்பாடு சிதைந்தன. இதனால் சங்கமருவிய கால இலக்கிய உலகு ஓர் இருண்ட காலம் எனக் கூறுதல் ஏற்கக் கூடியதன்று. சங்கமருவிய காலத்தில் சங்ககால வாழ்க்கை முறைகளில் மாற்றம் நிகழ்ந்தது என்பது உண்மை. ஆனால் இந்த மாற்றம் சிதைவு அல்ல. பதிலாக வளர்ச்சி என்றே கூறுதல் வேண்டும்.

சங்ககாலத்தில் தமிழர்கள் வாழ்க்கை இயற்கை நெறிப்பட்டதாக இருந்தது. லௌகீக இன்பமே வாழ்வின் இலட்சியமாக ஏற்கப்பட்டு இருந்ததுஇந்தலௌகீக இன்பத்தை அடைதற்காய் எதையும் செய்யலாம் அது வீரம் எனப் போற்றப்பட்டது. இல்லற வாழ்விலும் களவொழுக்கம், பரத்தையர் ஒழுக்

கம் என்ற ஒழுக்க முறைகள் அங்கீகரிக்கப்பட்டன. கொள்ளை யிடுதல் வாழ்க்கை வழி முறைக ளில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப் பட்டு இருந்தது. தனது அதிகா ரத்தை விஸ்தரிப்பதற்காய் எதிரி கள் மீது படையெடுப்பதும், அவர் தம்நாட்டின் வீடு, வீதி, குளம், வயல் என வளங்களையும் ஆண், பெண் குழந்தைகள் என வேறு பாடு இன்றி மனித உயிர்களையும் அழித்தொழிப்பது சங்ககால மன் னர்களுக்கு சாதாரண நிகழ்ச்சிக ளாய், புகழ்ச்சிக்கு உரிய நிகழ்ச் சிகளாய் அமைந்தன. சங்க இலக் கியங்களிலேயே இதற்கான உதா ரணங்களை நாம் காணமுடியும். பின்வரும் புறநானூற்றுப் பாடல் கள் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு.

''பகைவர் நாட்டை குதிரை மேல் ஏறி விரைந்து சென்று அழித் தாய். அவர் தம் பொன் விழை யும் கழனியை கொள்ளையிட்டாய். வீடுகளை இடித்து எரியூட்டினாய். ளங்களை யானையை விட்டுக் சிதைத்தாய். உனது பகைவர் நாடு என்பதற்காய் நல்ல வளமான நாட்டை அழித்தாயே'' 4

என்று ஒரு பாடலில் வழங்க ளின் அழிமதி கூறப்படுகின்றது.

'மதில்களும், கொத்தளங்க ளும் சிதைந்தன. அகழ்களும் நீரின் றிப் போயினமையின் அங்கு எஞ் சிய சேற்றிலே முளைத்த புல்லைக் கன்றுகள் மேய்ந்து திரிகின்றன. முன்னைய போருக்குப் பின் ஊரின் நிலைமை இதுவே'' 5

என ஒரு பாடலில் போரின் பின்னுள்ள ஒரு ஊரின் நிலை கூறப்படுகின்றது.

ஒட்டு மொத்தமாக நோக்கும் பொழுது சங்க இலக்கியங்கள் காட்டும் சங்ககால வாழ்க்கையா கிய அகத்திணை, புறத்திணை வாழ்க்கை என்பது காலப் போக் கில் தமிழர் தம் சமூகப் பொரு ளாதார வளர்ச்சிக்கும், அமைதி க்கும் தடையாக மாறின.

மருத நிலத்தில் விவசாய உற்பத்தியும் அதனை ஒட்டிய உற்பத்திகளும் வளர்ந்தன. நெய் தல் நிலத்தில் உள்நாட்டு வெளி நாட்டு வாணிபத்தின் மூலம் செல் வங்கள் திரட்டப்பட்டன. இந்த பொருளாதார உற்பத்தி வளர்ச் சிகள் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டுமாயின் 'குடும்பம்' என்ற நிறுவனம் பலப்படுத்தப்படல் வேண்டும். நாட்டில் அமைதியும்: ஒழுக்க நெறிகளும் பேணப்படல் வேண்டும், எனவேதான் சங்க காலத்தின் கடைக்கூற்றில் வாழ் ந்த தமிழ்மக்கள் தமது இயற்கை நெறி பண்பாட்டு வாழ்க்கையில் இருந்துவிடுபட விரும்பினர். பிறி தொரு பண்பாட்டு வாழ்க்கை நெறியை அவாவி நின்றனர்.இதன் விளைவே களப்பிரர் ஆட்சிக்காலத் தமிழர் சமுதாயத்தில் காணப் பட்ட பண்பாட்டு வாழ்க்கை நெறி கள் ஆகும். இது ஓர் சமூக வளர் ச்சி நிலை. இதுபோன்ற வரலாற் றுப் படிமுறை வளர்ச்சியை தொன் மையான நாகரீகம் உடைய உல கின் ஏனைய சமுதாயங்களிலும் காணலாம். உதாரணமாக வீர யுகம் என அழைக்கப்படும் சங்க கால தமிழர்களின் வாழ்க்கை முறையை ஒத்த ஓர் வாழ்க்கை

முறையை வாழ்ந்த பண்டைய கிரேக்கத்திலும் வீர யுகத்தை அடுத்து (இயற்கை நெறிக் காலத்தை) தமிழர்களின் சங்கமருவிய கால சமூக வாழ் நிலை போன்று அறநெறிச் சமுதாயமே தோன்றியது.

எனவே சங்கமருவிய காலத்தில் தமிழர் பண்பாடு சிதைந்தது. அதனால் அக்கால இலக்கிய உலகு இருண்டது என்று கூறுவது எல்லாம் பொருத்தம் அற்றதே ஆகும்.

5) குறிப்பிட்ட ஓர் காலத்தில் சமூகத்தில் ஆதிக்கம் பெற்று இருந்த சமயத்தை காரணமாகக் கொண்டு அக்காலத்தின் இலக்கிய வரலாற்றை இருண்ட காலம் எனக் கூறுதல் எவ்வகையிலும் பொருந்தாது. இலக்கியம் இலக்கிய நோக்கிலேயே மதிப்பிடப்படல் வேண்டும் எனவே சமண பௌத்த சமயங்கள் செல்வாக்கோடு இருந்த காலம் என்பதற்காய் சங்கமருவிய காலம் இருண்ட காலம் என்பதை ஏற்க முடியாது. உதாரணமாக சமணர் எழுதினார் என்பதற்காய் சிலப்பதிகாரத்தை இலக்கியம் இல்லை என்று ஒதுக்கி விடத்தான் முடியுமா?

6) சிறந்த இலக்கியங்கள், நூல்கள் தோன்றாத காலம் என்று சங்கமருவிய காலத்தை இன்று கூறமுடியாது. பழம் நூல்கள் பதிப்பிக்கப்படாத காலத்தில் பழம் தமிழ் நூல்களின் கால வரன் முறைகள் அறியப்படாத காலத்தில் சங்க மருவிய கால இலக்கிய உலகு பற்றி ஐயப்பாடுகள் இருந்தது உண்மை. சிலப்பதிகாரம், திருக்குறள் போன்ற சங்கமருவிய கால நூல்கள் சங்ககால நூல்களாய் கருதப்பட்டதும் உண்டு. அப்படியான ஓர் காலத்தில் அறியாமை காரணமாய் சங்கமருவிய காலம் இருண்ட காலம் எனப்பட்டது. ஆயின் இன்று இக்கூற்று பொருந்தாது. ஐம்பெரும் காப்பியங்கள் எனக் கூறப்படும் நூல்களுள் இரண்டான சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய நூல்கள் இக்காலத்திற்கு உரியவை. பலராலும் பெரிதும் போற்றப்படும் திருக்குறள் இக்காலத்திற்கு உரியது, பல்லவர்காலப் பக்தி இயக்கத்திற்கு பாதை காட்டிய காரைக்கால் அம்மையார் பாடல்கள் இக்காலத்திற்கு உரியவை. தமிழ் மொழியின் தொன்மையான இலக்கண நூல் என பெருமை பேசப்படும் தொல்காப்பியம் இக்காலத்திற்கு உரிய நூல்.

இவ்வாறு சாதனைகள் கொண்ட ஓர் இலக்கிய காலத்தை நல்ல இலக்கியங்கள் தோன்றாத காலம். இருண்ட காலம் என்று கூறுதல் பொருந்தாது.

இதுவரைகண்டதற்கு இணங்க எவ்வித காரணம் பற்றியும் இருண்ட காலம் என்று கூறுவதற்கு ஒவ்வாத சங்கமருவிய காலம் இருண்ட காலம் என்று கூறப்படும் மரபு தோன்ற எது உண்மையான காரணமாய் அமைந்து இருக்கலாம்?

உண்மையென்னவெனில் சங்கமருவிய காலத்தில் ஆதிக்கம்பெற்று இருந்த சமண, பௌத்த சமயங்களையும் அவர்களை ஆதரித்து நின்ற களப்பிரர்களையும் எதிர்த்து நின்ற இந்து சமயத்தினரே சங்கமருவிய காலம் இருண்ட காலம்,

கலியரசர்களின் காலம் என்ற கருத்தை விதைத்து வளர்த்து வந்தனர்.

சங்க காலத்திலேயே தமிழ் நாட்டிற்கு வைதீக, அவைதீக சமயத்தார் வந்து விட்டனர். ஆயினும் சங்க கால தமிழ் மக்கள் மத்தியில் இவர்கள் செல்வாக்கைப் பெற முடியவில்லை. ஆயினும் வைதிக சமயத்தினரும் பிராமணர்களும் சங்ககால தமிழ் நாட்டை ஆட்சி செய்த மன்னர்களிடம் செல்வாக்குப் பெற்று இருந்தனர். புறநானூற்றில் இதற்கான ஆதாரங்களை நாம் காண முடியும்.

'நற்பனுவல் நால் வேதத்து
அருஞ் சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம் மலி ஆவுதி பொங்கப், பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி' 6

மேலே உள்ள இப்பாடல் வரிகளில் 'வேதங்கள் கூறும் நியதிப்படி நின்று பெரும் யாகங்களை தலைமையேற்றுச் செய்தவன்' என மன்னன் புலவனால் புகழப்படுகின்றான்.

இவ்வாறு சங்ககால தமிழ்மன்னர்கள் வைதீக சமயத்தினரின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தமைக்கான ஆதாரங்களை நாம் சங்க இலக்கியங்களில் பல படக் காணலாம்.

இவ்வாறு சங்ககாலத்தில் ஆளும் மன்னர்களின் ஆதரவைப் பெற்று நின்ற வைதிக சமயம், சங்கமருவிய காலத்தில் தன் ஆதிக்கத்தை இழக்கின்றது. சங்க மருவிய கால மன்னர்களும் மக்களும் அவைதீக சமயத்தினரின் ஆதரவாளர்கள் ஆகி விடுகின்றனர். சங்ககாலத் தமிழகத்தில் வைதீக சமயம்பெற்று இருந்த அதிகார நிலை ஆட்டம் கண்டு விடுகின்றது.

இதற்கு ஆதாரமாகக் அமைவது தமிழகத்தின் சோழவந்தான் என்று இன்று அழைக்கப்படும் ஊர் பற்றிக் கிடைத்திருக்கும் செப்பேடு ஆகும். இந்தச் செப்பேடு 'வேள்விக் குடிச்செப்பேடு' என வழங்கப் படும்.

சங்ககால மன்னர்களின் ஒருவனே 'பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி'. இவன் வைகை நதிக்கரையில் ஒரு யாகம் செய்வித்தான். அந்த யாகம் முடிந்ததும் அந்த யாகத்தை நடாத்திவைத்த 'நற்கொற்றன்' என்ற பிராமணனுக்கு அவ்வேள்வி நடந்த பிரதேசத்தை இனாமாகக் கொடுத்தான். இதனால் இப்பிரதேசம் 'வேள்விக் குடி' என்று பெயர் பெற்றது. இன்று சோழவந்தான் என அழைக்கப்படும். இந்த வேள்விக்குடி சங்கமருவிய காலத்தில் பிராமணர்களிடம் இருந்துபறிக்கப்பட்டதுஇவ்வாறு களப்பிர மன்னர்களால் பறிக்கப்பட்ட இந்த 'வேள்விக் குடி' கி.பி6ம் நூற்றாண்டின் பின்தமிழ் நாட்டில் வைதீக சமயம் செல்வாக்குப் பெற்ற பின் 'நற்கொற்றன்' என்ற பிராமணன் வழிவந்தோருக்கு மீண்டும் இனாமாக வழங்கப் பட்டது.

இந்த விபரங்கள் வேள்விக் குடிச் செப்பேட்டில் இருந்துபெறக் கூடியதாக உள்ளது. வைதீக சமயத்தினரால் பொறிக்கப்பட்ட இந்தச் செப்பேட்டிலேயே களப்பிரர்கள் 'கலியரசர்கள்' என்று கண்டிக்கப்படுகின்றனர்.

இறுதியாக விடயத்தை நோக்கும் பொழுது பிராமணர்களாலும் அவர் சார்ந்த இந்து சமயத்தினரினாலுமே களப்பிரர்கள் கலியரசர்கள் என பெயர் சூட்டப்பட்டனர். அவர் ஆட்சிக்காலம் இருண்ட காலம் எனப்பட்டது. மேற்போக்காக நோக்கும் பொழுது இது மதப் போட்டியினால் ஏற்பட்ட ஆதார மற்ற குற்றச் சாட்டுப் போல் இருப்பினும் இதன் பின்னால் வர்க்கப் போட்டியும் உண்டு. 'எந்தக் கருத்துக்களின் பின்னாலும் வர்க்கங்கள் இருக்கும்' என்பார் மார்க்கிய அறிஞர்கள். இந்த வரலாற்று உண்மை 'சங்கமருவிய காலம் ஓர் இருண்ட காலம்' என்ற கருத்தின் பின்னாலும் உள்ளது.

இந்தியாவின் ஆரியக்குடியினரின் அதிகாரவர்க்கம் மூன்றுபெரும் பிரிவுகளைக் கொண்டு இருந்தது. இந்து சமயம் இதனை 'வர்ணாச்சிரம தர்மம்' எனக் கூறும் இந்த முப்பிரிவினரும் வருமாறு.

1. பிராமணர்கள்
2. சைத்திரியர்
3. வைசியர்

பிராமணர்கள் ஓதுதலையும், ஓதுவித்தலையும் தொழிலாய்க் கொண்டவர்கள். சைத்திரியர் ஆளுதலை அதாவது படைக்கலங்கள் ஏந்துதலை தொழிலாய்க் கொண்டவர். வைசியர் வணிகத்தைத் தொழிலாய்க் கொண்டவர்கள்.

கட்சிமுறையில்லாதபண்டைய இந்தியாவில் இந்த மூன்று அதிகாரப் பிரிவினர்களுக்கும் இடையில் ஏற்பட்ட போட்டியே சமய முறைக்குஊடாக வெளிப்பட்டது நான்கு வேதங்களையும் மூலநூலக வைத்து வைதீக சமயத்தின் ஊடாகதமது சமூக அதிகாரத்தை நிறுத்திநின்ற பிராமணர்களுக்கு எதிராகவே சைத்திரியர்களும்,வைசியர்களும் வேதங்களை நிராகரித்து பௌத்த, சமண சமயங்களை தோற்றுவித்தனர். வேதவாக்கிற்கு மாறான இச் சமயங்கள் அவைதீக சமயங்கள் எனப்பட்டன. இந்த அவைதீக சமயங்கள் சிறப்பாக சமண சமயம் கி. பி. 3 - 6 நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் செல்வாக்குப் பெற்றது. இதன் மூலம் இக் காலப்பகுதி தமிழ் நாட்டுச் சமுதாயத்தில் வைசியரின் (வணிகக் குடியனர்) ஆதிக்கம் நிலை நாட்டப்பட்டது. இந்த வணிகவர்க்கத்தினருக்கு எதிராக பிரமண வர்க்கத்தார் தலைமை தாங்கி தொடுத்த போராட்டமே கி.பி. 6 ம் நூற்றாண்டின் பின் தமிழகத்தில் எழுச்சி பெற்ற இந்து சமய பக்தி இயக்கம் எனலாம். ஆக கி. பி. 6 ஆம் நூற்றாண்டின் பிற்பட்ட தமிழக வரலாறு என்பது பிராமண வர்க்கத்தாரின் வெற்றியைக் கூறும் வரலாறு எனலாம். 'இதுநாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் (ஆதி பொதுவுடமை சமுதாயம் நீங்கலாக) வர்க்கப் போராட்டங்களது வரலாறே ஆகும்' 7 என்ற கார்ல் மார்க்சின் கூற்றையே சங்கமருவிய காலத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த பல்லவர் காலத்திலும் தமிழ் நாட்டில் நிகழ்ந்த சமயப் போட்டிகள் எடுத்துக் காட்டுகின்றன எனலாம்.

இறுதியாக சங்கமருவிய கால இலக்கிய உலகு இருண்டது என்பது வர்க்கப் போராட்டத்தின் வழிவந்த கற்பிதக் கதை. தமிழ் இலக்கிய உலகு இதனை கிளிப்பிள்ளை போல் இனியும் ஒப்புவிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

உசாத்துணை நூல்கள்

1) தென்னிந்திய வரலாறு - K. A. நீலகண்டசாஸ்திரி
2) தமிழ் இலக்கிய வரலாறு - கலாநிதி கி. பாலசுப்பிரமணியம்
3) தமிழ் இலக்கிய வரலாறு - பேராசிரியர் வி. செல்வநாயகம்
4) புற நானூறு பாடல் 16
5) புற நானூறு பாடல் 355
6) புற நானூறு பாடல் 15
7) கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை - காரல் மார்க்ஸ், பிடரிக் ஏங்கல்ஸ்

***


## வெளிநாட்டு வாசகர்களுக்கு!!

'வயல்' உங்களிடம் இருந்து விலையை எதிர் பார்க்கவில்லை அன்பளிப்புக்களை எதிர்பாக்கின்றது அனுப்பும் முகவரி.

**MRS. R. YOGANATAN.**

**AC No 14715**
**BANK OF CELON.**
**BATTICALOA BRANCE**
**BATTICALOA**
**Red; OF; SRI LANKA.**

அமெரிக்க சிறுகதை ஆங்கில மூலம்:
லாங்ஸ்பன் ஷ்யூக்ஸ்

# இருட்டுக்கு நிழல் இல்லை

அவன் பனியைப் பற்றி கவலைப் படாதவனாக இருந்தான். காற்றழுத்தம் குறைவாக இருந்த ஒருநாள் மாலை. சரக்குக் கப்பலிலிருந்து சார்ஜென்ட் இறங்கிய போது பனியைக் கொஞ்சம் கூடக் கவனிக்கவில்லை. ஆனால் அது அவனது கழுத்தில் ஈரமாக விழுவதையும், செருப்புகளால் உறிஞ்சப் படுவதையும் உணர்ந்துதான் இருக்க வேண்டும். ஆனால் நீங்கள் அவனிடம் இதுபற்றி கேட்டால் பனிபெய்கிறது என்பது அவனுக்கு தெரிந்திராதுதான்.

வெள்ளைத் துகள்களாக பனி விழுந்து கொண்டிருப்பதைப் பாதையோரத்து விளக்குகளின் வெளிச்சத்தில் கூட அவன் கவனிக்கவில்லை. அதிக பசியுடனும், அதிக உறக்கத்துடனும், அதிக களைப்பாகவும் இருந்தான்.

டார்செட் பாதிரியார் தனது தலைவாயில் விளக்கை அணைப்பதற்காகக் கதவைத் திறந்த போது வெளியே பனி விழுவதைப் பார்த்தார். அத்துடன் ஒரு பெரிய கருப்பு மனிதன் தனக்கு முன்னால் நிற்பதையும் கண்டார். இரவின் ஒரு பகுதியைப் போல, அந்தக் கருப்பன் தன்முகத்தில் பனியுடன் நின்றிருந்தான். அவன் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருப்பவன் என்று வெளிப்படையாகத் தெரிந்தது.

'மன்னிக்கவும், இங்கே இடமில்லை. வலப்பக்கமாகப் போய் நான்கு கட்டிடங்கள் தாண்டி, இடப்புறமாகத் திரும்பி ஏழு கட்டிடங்களைக் கடந்தால், அங்கே சத்திரம் ஒன்று இருக்கிறது; மன்னிக்கவும். இங்கே இடமில்லை'. பாதிரியார் தனது வாயைத் திறந்து விட்டார் என்பதை சார்ஜென்ட் புரிந்து கொள்ளும் முன்னரே அவர் கூறி முடித்து கதவை மூடிவிட்டார்

பாதிரியாரிடம் சார்ஜென்ட் பல செய்திகளைச் சொல்ல வேண்டுமென்று நினைத்திருந்தான். முன்னரே தான் எண்ணற்ற சத்திரங்களில் இருந்ததையும் அங்கு எபபோதுமே படுக்கைகள் நிறைந்துவிட்டு இருந்ததையும், இரவு உணவு தீர்ந்து விட்டு இருந்ததையும், நிறவேற்றுமை அங்கே நிறைந்து இருந்ததையும் இன்னும் பல செய்திகளையும் சொல்ல நினைத்திருந்தான் ஆனால் அவரோ இல்லை என்று சொல்லி கதவை மூடி விட்டார்.

அவற்றைப் பற்றி எல்லாம் கேட்பதற்கு அவர் தயாராக இல்லை. அதோடு கூட மூடுவதற்கென்று அவரிடம் ஒரு கதவு இருக்கிறது.

அந்தப் பெரிய கருப்பு மனிதன் திரும்பினான்; இன்னும்கூட அவன் பனியைக் கவனிக்கவில்லை. அதிலேயே நடந்து போனான். பனி

ஈரமாக, குளிருடன் அவன் தாடையில் குத்துவதையும், கருப்புக் கைகளை ஈரப்படுத்துவதையும், செருப்புக் காலினுள் ஊறுவதையும் அவன் கவனித்து இருந்தாலும் இருக்கலாம். அவன் பசி, குளிர், உறக்கம் முதலியவற்றுடன் நடை பாதையில் நின்று மேலும் கீழும் பார்த்தான்.

சரியாகக் கவனித்ததில், பிறகு அவனுக்குத் தெரிந்தது. அவன் ஒரு சர்ச்சின் முன்னால் நின்று கொண்டிருக்கிறான். ஆம்! ஒரு தேவாலயம் தான். பாதிரி மாளிகைக்குப் பிறகு ஒரு தேவாலயம்.

அதற்கு இரண்டு கதவுகள் இருந்தன. வெள்ளை வெளேரன்ற பனி இரவில் அதன் படிகள் வெண்மையாகவும், விசாலமாகவும் இருந்தன. மெலிந்த இரண்டு தூண்களிடையே இரண்டு உயரமான கதவுகள். அதற்கு மேலே ஒரு சன்னலில் கல்லில் செய்த ஒரு சிலுவை. சிலுவையில் இயேசுநாதர் - அவரும் கல்லில்தான். இவை அனைத்தும் தெரு விளக்கு வெளிச்சத்தில் வெளிறிக் காணப்பட்டன. பனியில் திட்பமாக, ஆனால் வெளிறிப் போய் காணப்பட்டன. சார்ஜென்ட் தன் கண்களை சிமிட்டினான். மேலே பார்த்த போது அவனது கண்ணில் பனி விழுந்தது அந்த இரவிலேயே இப்பொழுது தான் முதன் முதலாக பனியை உணர்ந்தான்.

தன் தலையை உதறினான். மேற்சட்டை கையிலிருந்த பனியை உதறினான். பசியாக உணர்ந்தான். எதையோ இழந்து விட்டதாக உணர்ந்தான்; இழக்கப் போவதாகவும் உணர்ந்தான்.

தேவாலய படிகளில் ஏறினான் கதவைத் தட்டினான். பதில் இல்லை.

கைப்பிடி மூலமாக முயன்றான் அது பூட்டிக் கிடந்தது. அவனது நீண்ட கருப்பு உடலை கதவின் மீது சாய்த்து தேவாலய கதவை தோளால் இடித்தான்.

ஒரே சீரான உரத்த உறுமல்களுடன் கதவை முட்டினான். 'நான் களைத்திருக்கிறேன். ஹீம்... பசியுடன் .. ஹீம்... தூக்கத்துடன்... நான் எங்கேயாவது தூங்கியாக வேண்டும். இது தேவாலயம் தானே. சரி, நல்லது'.

அவன் கதவை முட்டித் தள்ளினான். திடீரென்று அளவுக்கதிகமான ஓசையுடன் அந்தக் கதவு உயரமான, உக்கிரமான அந்தக் கருப்பனுக்கு இடம் கொடுத்தது.

இதற்குள்ளாக இரண்டு, மூன்று வெள்ளையர்கள் அங்கு கூடிவிட்டனர். அவனை நோக்கி கொடூரமாக கூச்சல் போட்டுக் கொண்டிருந்த அவர்களை அவன் சட்டை செய்யவில்லை. ஊளையிட்டுக் கொண்டே இன்னும் இரண்டு, மூன்று வெள்ளையர்கள் அவனை நோக்கி ஓடிவந்தனர்.

'ஏய்', அவர்கள் கத்தினார்கள். 'ஏய்', 'உம்', பதில் கொடுத்தான் நீக்ரோ. 'இது வெள்ளையர்களுக்கான தேவாலயம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் எங்கேயாவது படுத்துத் தூங்கியாக வேண்டும்,

அவன் கதவின் மீது மற்று மொருமுறை பாய்ந்தான். 'ஹீம்... கதவு உடைந்து வீழ்ந்தது.

கதவு இடம் கொடுத்த அதே நேரத்தில். இரண்டு வெள்ளை காவல் அதிகாரிகள் ஒரு காரில் வந்து இறங்கினர். படிகளின் மீது கைத் தடிகளுடன் ஓடிவந்தனர்; சார்ஜென்டை பிடித்துக் கொண் டனர்.

ஆனால் சார்ஜென்டுக் கோ கதவிலிருந்து இழுக்கப்படவோ, தள்ளப்படவோ மனமில்லை. அவன் கதவுக்கு பக்கத்திலிருந்த இரண்டு உயரமான கல் தூண்க ளில் ஒன்றைப் பற்றிக் கொண் டான். காவலர்கள் அவனை இழுக் கவே அவன் தூணை இழுத்தான். தெருவிலிருந்தவர்களில் பெரும் பாலோர் அவனை இழுப்பதில் காவலர்களுக்கு உதவி செய்தனர்.

வேலை வெட்டியில்லாத ஒரு கருப்பு நீக்ரோ தங்கள் தேவால யத்தைக் கைப்பற்றி விட்டதாக அந்த மக்கள் நினைத்தனர். என்ன அற்புதமான எண்ணம்!

அவன் தலையில் காவலர்கள் அடிக்கத் தொடங்கினர், அதை யாரும் எதிர்பார்க்கவில்லை.

சார்ஜென்ட் இன்னமும் கல் தூணை விடவில்லை. பிறகு அந்த தேவாலயமே இடிந்து விழுந்தது.

தேவாலயத்தின் பெரிய பாறை ஒன்றும் பிறகு, சுவர்களும், பிறகு உத்தரங்களும், சிலுவையும், சிலு வையில் இருந்த இயேசுவுமாக அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக விழுந்தன.

செங்கற்களும், பாறைகளும், குப்பைகளும் காவலர்கள் மீதும் மற்றவர்கள் மீதும் விழுந்து அவர் களை மூடின. அந்தத் தேவால யமே பனியில் இடிந்து விழுந்தது.

சார்ஜென்ட் அவற்றின் அடி யிலிருந்து எழுந்தான். கையோடு வந்து விட்ட கல்தூணை தோள் மீது வைத்துக் கொண்டு நடக்க லானான். அவன் தனக்கு இடம ளிக்காத பாதிரியையும், அவரது புனித இல்லத்தையும் ஒரு சேர புதைத்து விட்டது போன்ற நிம்ம தியில் இருந்தான். கையிலிருந்த கல்தூணை ஏழு கட்டங்களுக்கு அப்பால் வீசி எறிந்தான். தெரு வில் நடக்கலானான். முதலில் தான் தனியாக நடப்பதாகத்தான் சார்ஜென்ட் நினைத்திருந்தான் பிறகுதான் சரக்சரக் எனும் தன் காலடி ஓசையும் தவிர இரட்டிப் பாகிற மற்றொரு ஓசையையும் அவன் கேட்டான்.

அவன் சுற்று முற்றும் பார்த்தான்

அவனுக்குப் பின்னால் இயேசு நாதர் நடந்து வந்து கொண்டிருந் தார்.

தேவாலயச் சிலுவையில் இரு ந்த இயேசுநாதர் சொரசெரப்பான அதே கல்போன்ற உருவத்துடன் வந்து கொண்டிருந்தார்.

'அடடே, நாம் நிச்சயமாகப் பின் தொடரப்படுவோம்' என்று சொல்லிக் கொண்டான்.

'இதோ, இங்கே, நான் முதன் முதலாக உங்களை சிலுவையிலி ருந்து விடுவித்து இருக்கிறேன்.'

'ஆம்' யேசுநாதர் பனியில் தன் காலடிகளை உரசி ஒலியெழுப்பிக் கொண்டே சொன்னார்.

'என்னைச் சிலுவையிலிருந்து விடுவிப்பதற்காக நீ தேவாலயத்தையே நொருக்க வேண்டியிருக்கிறது.'

'இதற்காக நீங்கள் மகிழ்ச்சி அடைகிறீர்களா?' சார்ஜென்ட் கேட்டான்.

'நிச்சயமாக நான் மகிழ்கின்றேன்' இயேசு நாதர் சொன்னார்

இருவரும் சேர்ந்து சிரித்தனர்.

'தேவாலயத்தை இடித்து விட்டநான் மிகவும் கெட்டவன் இல்லையா?

'நீ மிக நல்ல வேலை செய்து இருக்கிறாய்?'

இயேசுநாதர் சொன்னார்.

'அவர்கள் என்னை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக சிலுவையிலேயே அறைந்து வைத்திருக்கிறார்கள்.

'அப்படியா! 'சார்ஜென்ட் சொன்னான். 'எனக்குத் தெரியும் உங்கள் விடுதலை பற்றி நீங்கள் மகிழ்வீர்கள் என்று'.

'நிச்சயமாக நான் மகிழ்கிறேன்' இயேசு சொன்னார். அவர்கள் இருவரும் பனியிலேயே நடந்தனர். சார்ஜென்ட் தன்னுடன் வந்த கல் மனிதனைப் பார்த்துச் சொன்னான்:

'இரண்டாயிரம் ஆண்டுகளாகவா நீங்கள் அங்கே இருக்கிறீர்கள்'?

'ஆமாம் சந்தேகமேயில்லை'

என்னிடம் கொஞ்சம் பணமிருந்தால் நான் உங்களுக்கு ஊரைச் சுற்றி காண்பித்திருப்பேன்.

'நான் முன்னரே அதுபோல சுற்றியிருக்கிறேன்.'

'ஆமாம், அது மிக நீண்ட நாட்களுக்கு முன்னர்.

அவர்கள் ஒரு ரயில்பாதையை அடைகிறவரையிலும் நடந்தார்கள்.

சார்ஜென்ட் வியர்வையுடன் மிகவும் களைத்துட்போய் இருந்தான்.

தண்டவாளத்தின் அருகே அவன் கேட்டான். நீங்கள் எங்கே போகிறீர்கள்?'

'அது கடவுளுக்குத்தான் வெளிச்சம். ஆனால் நான் உன்னிடம் இங்கே விடைபெற்றுக் கொள்கிறேன்' என்று சொன்னார் இயேசு இரவின் பனி பாதிமறைந்த நிலையில் தொலை தூரத்தில் சிவப்பும், பச்சையுமாக ரயில் விளக்குகளை அவர்கள் பார்த்தனர். 'நான் அங்கே சென்று தூங்க முடியும்' சார்ஜென்ட் சொன்னான்.

'உன்னால், முடியுமா?'

'நிச்சயமாகஏனென்றால்,இந்த இடத்திற்கு கதவுகள் கிடையாது.

நகரத்திற்கு வெளியே, ரயில் பாதைகளுக்கு அப்பால் மொட்டை மரங்களும், புதர்களும் பனி இருட்டில் தெரிந்தன. மரப்புதர்களுக்கு இடையே அடிக்கடி இடமாற்ற வசதியாக பழைய பெட்டிகள்,

தகரம், மரத்துண்டு, துணிகள் ஆகியவற்றால் ஆன வீடுகள் இருந் தன.

இருட்டில் அவற்றைக் காண முடியாது. நீங்கள் எப்போதாவது பசித்த, வீடற்றவர்களுடன் வாழ்ந் திருப்பீர்களானால் அவை அங்கிருப் பதை அறிந்து இருப்பீர்கள்.

'நான் இப்படிப் பிரிந்து போகி றேன். மிகவும் களைப்பாக இருக்கி றது' அவன் சொன்னான்,

'நான் கான்சாஸ் நகரத்துக்குச் செல்கிறேன்' என்றார் இயேசு.

'அவ்வளவு தொலைவா?' அவ ன் வியந்தான். அவன் நாடோடிகள் இருக்குமிடத்திற்குச் சென்று படு க்க ஓர் இடம் தேடிக் கொண் டான்.

அதன் பிறகு அவன் இயேசு வைப் பார்க்க வேயில்லை.

காலை ஆறு மணிக்கு ஒரு சர க்கு வண்டி வந்தது. அந்த ரயி லைப் பிடிப்பதற்காக சார்ஜென்ட் ஓடினான்,

அது இருட்டாகவும் குளிராக வும் இருந்த காலை நேரம்.

'இயேசுநாதர் இப்போது எங் கே இருப்பார்?' எண்ணமிட்டான் அவன்,

'அவர் நடந்து போய்க் கொண் டிருப்பார், இங்கு அவர் தூங்க வில்லை,

சார்ஜென்ட் ஓடிக் கொண்டி ருக்கும் நிலக்கரி ஏற்றியரயில் வண் டியைப்பற்றி தாவி ஏறினான்.

எதிர்பாராத வகையாக வண் டிமுழுவதும் காவலர்கள். அவன் அருகிகில் இருந்த காவலன் அவன் கருப்புக் கையை மடக்கி அவனை மேலே தூக்கினான். சார்ஜென்ட் நெகிழ வில்லை, குரலின் உச்சத் தில் கத்தினான்.

'மடையர்களே, என்னை வண் டியில் இருக்க விடுங்களேன்'.

'வாயை மூடு' ஒருவன் நாய் போல் குரைத்தான்.

'உதவாக்கரை நாயே என்று சொல்லி வயிற்றில் குத்தி, விரல் முட்டியை முறுக்கினான்...

'நீ காட்டில் இல்லை, இது ரயிலும் அல்ல நீ சிறையில் இருக் கிறாய்'

'ஐயோ' அவன் கருப்பு விரல் களுக்கிடையில் சிறைக் கம்பிகள். அவன் திடீரென்று உணர்ந்தான். அவன் உண்மையிலேயே சிறையில் இருக்கிறான். அவன் ரயிலிலும் இருந்திருக்கவில்லை' முன்னாள் இரவின் இரத்தம் முகத்தில் காய் ந்து இருந்தது. அதிகமாகச் சிறைக் கம்பிகளைப் பிடித்து உலுக்குவதற் காக அவன் முட்டியில் தட்டினான் ஒரு சிறைக் காவலாளி.

அந்தத் தேவாலயக் கதவை உடைத்தற்காக என்னை நேற்று இரவே இங்கு கொண்டுவந்திருக்க வேண்டும் என்று உணர்ந்தான். குளிரில் அந்தக் கல் சுவருக்கு எதி ரேஇருந்த மரப்பலகையில் சென்று உட்காந்தான்;

அவன் துணிகள் குளிரூட்டும் அளவுக்கு ஈரமாக இருந்தன. செருப்

புகள் பனியில் ஊறிப் போய் இருந்தன, அப்போதுதான் விடியத் தொடங்கி இருந்தது.

அவன்தன் காயம் பட்ட விரல்களை தேற்றிக் கொண்டு சிறையில் பூட்டப்பட்டுக்கிடந்தான்.

காயம் பட்டதெல்லாம் அவன் விரல்கள் தானே அன்றி அவனை அடித்த தடிகள் அல்ல.

'இரு, இரு, நான் இந்தக் கதவையும் உடைத்தெறிகிறேன்:

'வாயை மூடு, இல்லாவிட்டால் உதைகிடைக்கும்' காவலாளி கத்தினான்'

பிறகு அவன்தனக்குத் தானே பேசிக் கொண்டிருந்திருக்க வேண்டும், அவன் சொன்னான்:

'எனக்கு வியப்பாக இருக்கிறது

இப்பொழுது இயேசுநாதர்

எங்கே போயிருப்பார்'

★

நன்றி: 'சுவர்'

நவம்பர் / டிசம்பர் *1983*

## மானிட சக்தி

வானில் வில்லை வளைத்து வைத்தவன்
அம்பை இன்னும் ஏன் பொருத்த வில்லையே
வாநீ தோழனே வானிருந்து
வளியும் நீர்க் கொடி பிடித்து ஏறியே
வான வில்லிலோர் சரத்தினைப் பூட்டி நாம்
வளைந்து வரும்அப் பரிதையைக் கொய்வோம்
மானிட சக்தியால் அண்டமே
மானிடத்தின் காலடி வீழ்த்துவோம்

- சுபத்திரன்.

# சுபத்திரன் என்றதொரு சிம்மாசனம்

— சாருமதி —

இருபது வருடங்களுக்கு மேல் இருக்கும். அன்று ஞாயிற்றுக் கிழமை. சாய்ப்புச் சட்டம் கடுமையாக அமுல் படுத்தப்பட்ட காலம். வெலிங்டன் கடையின் முன்புறம் எல்லாம் இழுத்துச் சார்த்தி இருந்தான். இருப்பினும் உள் அரவம் உள்ளே தொழில் நடந்து கொண்டுதான் இருக்கிறது என்பதை கட்டியம் கூறிநின்றது.

நானும் அரவிந்தனும் சாகுலின் கடைக்கும் வெலிங்டனின் சலூனுக்கும் இடையே அமைந்த ஒடைக்குள் விழுந்து பின்புறக் கதவால் வெலிங்டனின் சலூனுக்குள் நுழைகின்றோம். கதிரையில் இஞ்ஜினியருக்குப் படிக்கும் மனோகரதாஸ். அவர் தலையில் வெலிங்டனின் கை வண்ணம் நிகழ்ந்து கொண்டு இருந்தது. கண்ணாடிக்குள்ளாக எனது பிம்பத்தைக் கண்ட மனோகரதாசின் முகத்தில் முழுமையும் விரியாத ஒரு சிரிப்பு. எனக்கு பாடசாலையில் சிரேட்ட மாணவராக இருந்தவர் என்ற அந்தஸ்து அவர் சிரிப்பில்.

வெலிங்டனுக்கு நான் சின்ன பொடியன்தான். காக்கி காற்சட்டையும் வெள்ளை அரைக் கை சட்டையும். நான் கதிரையில் அமர்கின்றேன். அரவிந்தன் சாரத்தோடு.

'' ஆ... யோக்கர் நாதன்...'' பகிடிகள் விடுவதில் எனக்கொரு பிரியம். என்னோடு பகிடி விடுவதில் வெலிங்டனுக்கு ஒரு பிரியம்.

மனோகரதாசிற்கு காரியம் முடிகின்றது. சில்லறைகளை எண்ணிக் கொடுத்து அவர் தன் வழியால் வெளியேறுகின்றார். அடுத்தவர் கதிரையில் ஏறுகிறார்.

சேட்டின் கொலரை பிடரியில் இருந்து தூர விலத்தி துணியை உதறிப் போர்த்து பிடரியைச் சேர்த்து அதன் இரண்டு தலைப்புக்களையும் முடிந்து செருகி.. தொடரும் தொழில். இதற்கு அடுத்ததாய்த்தான் நானோ அரவிந்தனோ அந்தக் கதிரைக்கு உரியதாக முடியும். வெலிங்டனும் தன் தீரத்தை எங்கள் தலையில் காட்ட முடியும்.

'' வெஸ்ட் இன்டிஸ்'' கிரிக்கட் குழுவின் சுழல் பந்து வீச்சாளர் சோபசின் பந்து வீச்சுத் திறனை வெலிங்டன் விபரிக்கத் தொடங்குகிறான் கைகளின் தொழில் நுணுக்கத்தை தவற விடாமல். இப்படியாகத் தொடங்கிய உரையாடல் எப்படி பிரித்தானியாவிடம் வந்து சேர்ந்தது என்பது இப்போது ஞாபகமாக இல்லை.

அன்றைக்கும் நான் இன்று போல் தான். கருத்து மோதல் முரண்பாடு என்று வந்துவிட்டால் வார்த்தைகளை நசித்து, அமுக்கி, கழுவி பேசத் தெரியாதவன் சொற்களை பிறந்த மேனியாக முழு வேகத்தோடு எறிவேன். விவாதம் கடும் சூடான நிலையில்.

வெள்ளைக்காரன் தான் இந்த நாட்டை நல்லபடியாக்கினான் என்பது அரவிந்தனின் பக்கம்.

வெள்ளைக்காரன் ஒரு கொள்ளைக்காரன். இது என்பக்கம். வெலிங்டன் எனக்கு முண்டு.

கதிரையில் இருந்தவரும் இறங்கிப் போய் விட்டார். நானோ அரவிந்தனோ கதிரையில் ஏறவில்லை கடும் விவாதம். அரிவரியில் இருந்து ஒன்றாக கற்ற இணைபிரியா நண்பர்கள் என்ற உறவு முக முறிவைத் தடுத்தாலும் என்னுடைய விடாப்பிடித்தனம் விவாதத்தை முடிப்பதையும் தடுத்தது. ஒரு மணித்தியாலயத்தையும் தாண்டிற்று அந்தப் போராக் கோழிச் சமர்' அட்பொழுது தான் முழங்காலுக்கு மேல் மடித்துக்கட்டிய வேட்டி. வெள்ளை நிறச் சேர்ட். வெலிங் டனின் கடைக்குள் ஒரு புது மனிதர். தீட்சண்யமிக்க பார்வை மூக்குக் கண்ணாடிக்கு ஊடாக என்னையும், அரவிந்ததனயும் துருவித் துலாவுகின்றது. அவர் கையில் சிகரட் புகைத்தபடி. அவர் அமரவே இல்லை. நின்றபடியே எம்மை நோக்குகின்றார். என்னுள் இனம் தெரியாத ஒரு ஒடுக்கம். வார்த்தைகள் இறுகிப் போயின. வாய் மௌனமாயிற்று. விசாலமான அந்த மனிதரின் நெற்றி புத்தரின் ஞானோதய வட்டத்தை விடப் பிரகாசமானதாய் எனக்குத் தெரிகின்றது. இந்த உலகம் அதன் பொருட்கள் எல்லாம் எனக்கு மறைந்து விடுகிறது. நெற்றி... விசாலமான நெற்றி...... அதுவே என் பார்வையின் ஒரே பொருளாயிற்று.

''என்னடா வாத்தி வந்த நீ விறைச்சுப்போய் நிக்கிறாய்... இரண்டா...'' வெலிங்டன் அமைதியைக் குலைத்தான்.

சிகரட்டின் நீண்டு நின்ற சாம்பலைத் தட்டி வாயில் வைத்து அதை ஒரு இழு இழுத்து காலில் போட்டு சிகரட்டை கசக்கி விட்டு புகையை ஊதியபடி கதிரையில் நிமிர்ந்து அமர்கின்றார் அந்த மனிதர்.

வெலிங்டன் அறிமுகங்களை ஆக்கி வைக்கிறான். மனிதரின் முகத்தில் சிரிப்பு. கதையை ஆரம்பிக்கின்றார்.

எங்கள் வாதத்தை அவரும் வெளியே நின்று கேட்டுக் கொண்டிருந்தாராம். அவர் பேசப் பேச நான் தாழ்ந்து தாழ்ந்து போவதாய் ஒரு உணர்வு. அவரின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவர் மீது எனக்குப் பிடிப்பை பெருக்கியபடி சென்றது. ஒரு கெட்டிக்கார பட்டி மன்றத்து நடுவர் போல் எந்தப் பக்கமும் நோகாமல் பிரித்

தானியாவையும் அவர்கள் இலங்கையை ஆட்சி செய்ததையும் பறறி விளக்கமாக பேசுகின்றார். அரவிந்தனுக்கு சகலதும் சரணாகதி என்ற நிலை. அவனும் அந்த மனிதரால் கவரப்பட்டு இருந்தான்.

வெலிங்டன் எனக்கும் அரவிந்தனுக்கும் தன் தொழில் நேர்த்தியை நிகழ்த்தினான். விடைபெறும் நேரம் வந்தது. அவர் விடவில்லை. சாகுலின் கடையில் எல்லோருக்கும் பிளேன்ரி வரவழைக்கப்பட்டது அவரால். என்னுடையதும் அரவிந்தனதும் இருப்பிடங்களை விசாரித்துக் கொள்கிறார். நானும் அரவிந்தனும் வீடு சென்றோம் அவரைப்பற்றி பேசியபடி. எங்கள் விவாதம் முடித்து வைத்த ஒன்றாயிற்று. இரண்டு நாள் சென்று இருக்கும். வீட்டின் வாசலில் சைக்களின் மணியோசை. தலையை நீட்டி வெளியே பார்க்கின்றேன். அதே மனிதர்... வெலிங்டனின் சலூனில் கண்ட அதே அவர். இப்படித்தான் ஆரம்பித்தது சுபத்திரனுடனான எனது ஸ்நேகிதம். அதற்குப் பிறகு...

பாரமான நினைவுகள். பன்னிரண்டு வருடத்து வாழ்க்கை. அதை எப்படி ஒப்புவிக்க முடியும்?

உலகில் சிறந்த ஓவியத்தை, சிற்பத்தை, நாவலை சுவைத்துப் பெற முடியாத அழகுமிக்க அநுபவங்கள்.

எப்படித்தான் இப்படியொரு மனிதன் இந்த உலகில் ஜனிக்க முடிந்தது? இந்த அசாத்தியம் நிகழ்ந்துதானே இருந்துள்ளது.

தன்னைக் கரைத்து, தேய்த்து மற்றவர்களின் வளர்ச்சியில் அவன் கொண்ட அக்கறை... அர்ப்பணம்... சுபத்திரன் அபாரமான மனிதர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் மேடையில் ஏறிப்பேசி விட்டேன் என்பதில் அப்பாவிற்கு அடக்க முடியாத ஆத்திரம் தொழிலில் இருந்து திரும்பிய அன்றைய இரவு அப்பா பிரயோகித்த அந்த வார்த்தைகள் .... அவை எழுதப்பட முடியாதவை. அன்று இரவு நான் சாப்பிடவில்லை. சாப்பிட முடியவில்லை. என்ன செய்யலாம்? எதையாவது செய்து விடவேண்டும். என்ற ஆவேசம். அன்று விடிந்ததும் வீட்டில் நான் இல்லை. என்னைத்தான் எவ்வளவு ஆசுவாசப்படுத்தினான் சுபத்திரன். மரமண்டை அப்பா கூட அவனுடைய வார்த்தைகளால் மழையில் பட்ட களிமண் உருண்டைபோல் எவ்வளவு லேசாக கரைந்து போனார். அதன் பிறகு சுபத்திரன் என்றால் அப்பாவிற்கு மானசீகமான பற்று. எனக்கு ஏதாவது விடயமென்றால் ''போடா போய் தங்கவடிவேல் மாஸ்டரிட்டக் கேட்டுட்டு வாடா'' என்பார் அப்பா. எந்தப் பிரச்சனைக்கும் சரியான ஆலோசனையை வழங்கக் கூடிய உயர்ந்த மனிதன் சுபத்திரன் என்பது அப்பாவின் தீர்மானம்.

யாழ்ப்பாணத்தில் வைத்து அப்பாவிடம் சுபத்திரனின் மரணச் செய்தியை தெரிவித்த பொழுது அதிர்ந்து போய் தலையில் கையை வைத்து அவர் திண்ணையில் அமர்ந்த காட்சி இப்பொழுதும் என் கண் முன்னால் நிற்கிறது. எவ்வளவு பெரிய ஆகர்ஷனம். சுபத்தி ரனின் ஆளுமைச் சிறப்பே அதுதான்.

நாலு நாளாய் வேலை நிறுத்தம் தொடர்கிறது. நகரமே நாறத் தொடங்கி விட்டது. எந்த விதமான அச்சுறுத்தலுக்கோ, பசப்பு வார்த்தைகளுக்கோ நகர சுத்தித் தொழிலாளர்கள் மசிவதாய் இல்லை. மேயருக்கு வேலை நிறுத்தம் ஒரு மானப் பிரச்சனை ஆகி விட்டது.

மேயரின் காரை மாநகரசபை வளவிற்குள் நுழைய விடாமல் மறியல் போராட்டம் செய்வது. வேலை நிறுத்தக் காரர்கள் தீர்மா னம் எடுத்தனர். திட்டமும் தயாரிப்பும் சுபத்திரனுடையது.

சட்டத்தின் காவலர்கள் குண்டாந் தடிகளோடு குதித்தனர் களத்தில். களோபரம் ஆயிற்று. அன்று இரவு தொழிலாளர்களின் குடியிருப்பு பகுதியில் கூட்டம் ஒன்று ஒழுங்காயிற்று. சுபத்திரன் அடுத்த கட்ட நடவடிக்கைகளை விரிவாக விளக்கிக் கொண்டு இருக் கின்றான். அரைக் காற்சட்டைச் சிறுவனாய் அருகில் நான். அய லில் மேயரின் விசுவாசியின் வீடு. மேயரின் முக்கிய தூண்களில் அவரும் ஒருவர் அவர் சுபத்திரனுக்கும் நண்பர், செய்தி பறக்கின் றது காவலருக்கு கலவரத்தை தூண்டி விட்டார் என்று சுபத்திர னைக் கைது செய்யும் திட்டம். தொழிலாளர்களின் குடியிருப்பு சுற்றி வளைக்கப்பட்டது. நல்ல இருட்டு, கையில் டோர்ச் லைட்டுக் களுடன் காவலரின் சுறுசுறுப்பான இயக்கம் இருட்டைத் தனது பலமாக்கிக் கொண்டு என்னையும் கையில் பிடித்து இழுத்தபடி வியூகத்தில் இருந்து வெளியேறுகிறான் சுபத்திரன். எங்கு செல்வது? எவரிடம் அடைக்கலம் தேடுவது? எனக்கு விளங்கவில்லை. தெளிவு டனும், அமைதியுடனும் எந்தப் பதட்டமும் இல்லாமல் சுபத்திரன் நடக்கிறான், மேயரின் விசுவாசி வீட்டை நோக்கி உரிமையோடு அந்த வீட்டிற்குள் செல்கின்றான். வீட்டு மண்டப வாசலில் நின்ற விசுவாசி கெழுத்தி மீனை விழுங்கின பாம்பு போல வில்லங்கப்படு கின்றார். எதுவும் நடக்காதது போல் அவரின் முதுகில் தட்டி சுகம் விசாரிக்கின்றான் சுபத்திரன். பின் கதிரையில் அமர்ந்தபடி இரண்டு தேனீர் கொண்டு வருமாறு வீட்டுக்காரரிடம் கூறுகின்றான். தேநீர் வருகிறது, தேநீரைக் குடித்து விட்டு வீட்டுக்காரரிடமே சிகரட் ஒன்றும் வாங்கி பற்ற வைத்துக் கொள்கின்றான் பேச்சு நகரசுத்தித் தொழிலாளர்களின் போராட்டம் பற்றி ஆரம்பிக்கின்றது.

'ஏன் மாஸ்டர் நீங்க இந்த சக்கிலியனுகளுக்காக உங்கட பேர' ... வீட்டுக்காறன் சொல்கிறார். சுபத்திரன் சிரித்தபடி முதலாம் வகுப்

புச் சிறுவன் ஒருவனுக்கு பெரிய விடயம் ஒன்றை விளக்குவதுபோல் தொழிலாளர்களின் போராட்டத்தைப்பற்றி வீட்டுக்காரருக்கு விளக்குகின்றான். ஒன்றரை மணித்தியாலம் சென்று விடுகின்றது, வியூகம் குலைந்து காவலர் வாகனம் ஏறிச் சென்று விடுகின்றனர்.

சுபத்திரன் புறப்பட்டான். வீட்டுக்காரர் வெளிவாசல் வரை பின்னால் வருகின்றார், வந்தவர் நானும் சுபத்திரனும் வாசலைத் தாண்டும் பொழுது 'மாஸ்டர் என்னைப் பிழையாக நினைக்கப் படா' என்கின்றார். சுபத்திரன் 'நீ இப்ப என்ன பிழை செய்த. உன்னைப் பிழையாக நினைக்க, ரெண்டு தேத்தண்ணி தந்தனி. அதில என்ன பிழையிருக்கு?' என்று சிம்பிளாய் கூறிவிட்டு தெருவில் இறங்கி நடக்கின்றான், நான் அவன் பின்னால்.

இப்படி எத்தனை சம்பவங்கள், எவ்வளவு நினைவுகள், மட்டக்களப்பில் முற்போக்கு அறிவுஜீவித்தனத்திற்கு அத்திவாரமே சுபத்திரன் தான். அந்தச் சிம்மாசனம் இன்று இல்லை. ஆனால் அவன் வாழ்ந்த தடம் இருக்கின்றது, அது தொடரப்பட வேண்டியது சுபத்திரனுக்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம் அதுதான்.

—✶—✶—

---

## பிச்சை

சூரிய னிடம்
பிச்சை வாங்கும்
நிலவிடம்
பூமி பிச்சை வாங்குகின்றது.
சூரியனிடம் வாங்கிய
இரவல் புடவையில்
ஒரு துண்டைக் கிழித்து
உலகுக்கு கொடுத்தது
நிலவு!

— சுபத்திரன் —

---

# தெம்மத்தன் கிணற்றடி அமுது

க. மகேஸ்வரலிங்கம்

தமிழினத்தின் பாரம்பரிய விருந்தோம்பல் பண்பினை மட்டக் களப்பு மக்கள் தொடர்ந்து பேணி வருகின்றனர் என்பது உலக றிந்த உண்மை. மட்டக்களப்பில் மற்றவர்க்கு உணவூட்டுவதை அவ் வவற்றின் தன்மைக்கேற்ப விருந்து, அமுது, பரத்தை, செலவு என் றெல்லாம் வகைப்படுத்திக் கூறுவர். மற்றைய இடங்களில் அன்ன தானம் என்று கூறுவதை இங்கு அமுது என்று குறிப்பிடுவது வழக் கம். இவ் அமுது கொடுக்கும் நிகழ்ச்சி கோயில்களிலும், வீடுகளி லும் வேறு பொது இடங்களிலும் காலத்திற்குக் காலம் நடை பெறும். தெம்மத்தன் கிணற்றடி என்னும் ஒரு பொது இடத்தில் கொடுக்கப்பட்ட அமுது தெம்மத்தன் கிணற்றடி அமுது என அழைக் கப்பட்டு வந்தது. தரும அன்னதான கிணற்றடி என்பது மருவியும் குறுகியும், தெம்மத்தன் கிணற்றடி' என வழங்கலாயிற்று. மட்டக் களப்பு மாவட்டத்தில் படுவான்கரையின் மத்தியில் மண்முனைத் துறையை அடுத்துள்ள மகிழடித்தீவு, முதலைக்குடா, ஆகிய கிராமங் களுக்கிடையே இத்தெம்மத்தன் கிணற்றடி அமைந்துள்ளது. இவ் இடத்தில் அன்னதானத்திற்காக அமைக்கப்பட்டிருந்த பழமையான கிணறு அழிந்து மறைந்து விட்டது. எனினும் இதனது அடிப்பா கத்தை இவ் இடத்தில் உள்ள மெதடிஸ்த தேவாலய வளவில் இன் றும் அகழ்ந்தால் கண்டு கொள்ளலாம்.

தெம்மத்தன் கிணற்றடி அமுது பெரும்போக அறுவடையை அடுத்து குறிப்பிட்ட ஒரு நாளில் பெரிய அளவில் கொடுக்கப்பட்டு வந்தது. பொரியலுடன் தொடங்கி தயிர், கூழ், பழம், பலகாரம், சர்க்கரை ஆகியன கலந்த கலவையுடன் நிறைவுறும் இவ் அமுது மட்டக்களப்பு மாநிலத்தின் உணவுப் பழக்கத்திற்கே ஒரு எடுத்துக் காட்டாக விளங்கியது. கி. பி 10ம் நூற்றாண்டளவில் தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் மூன்றாவது தசாப்தம் வரை இடையி டையே தடைப்பட்டாலுப் தொடர்ந்து இவ் அமுது கொடுக்கப் பட்டு வந்ததென அறிய முடிகின்றது. மண்முனை மன்னர்களதும் கண்டிய மன்னர்களதும் நன்மதிப்பைப் பெற்று நிலமைகளும், போடி களும், வன்னிமைகளும் இந்நிகழ்ச்சியை முன்னின்று நடத்தி வந்தனர். மானிய கால சமுதாய அமைப்பில் ஒவ்வொரு சாதியத்தவரும் இவ்

அழுதுக்கு செய்ய வேண்டிய பங்களிப்பு வகுக்கப்பட்டிருந்தது. இந் நிகழ்ச்சியின் ஆரம்பமும் வரலாறும் மட்டக்களப்பு மாநிலத்தின் வரலாற்றை ஓரளவு அறிந்து கொள்ள உதவுவதால் மரபு வழியான செய்திகளை வைத்து இதனை சற்று ஆராய்வோம்.

**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு மான்மியத்தின்படி கூத்திகன் என்னும் மன்ன னால் மட்டக்களப்பு வாவியின் தெற்கு எல்லையில் வீரமுனைக்கு அருகாமையில் மட்டக்களப்பு நகரம் உருவாக்கப்பட்டது. இது நிகழ்ந் தது கி. பி நான்காம் நூற்றாண்டென்றால் ஓரளவு பொருந்தும். இந்நகரத்தை மையமாகக் கொண்டு மட்டக்களப்பு இராச்சியம் தோன்றியது. இவ் இராட்சியத்தில் காளி தேசத்தவர், கலிங்கர், வங்கர், சிங்கர், படையாட்சி குலத்தவர் என டல வகுப்பினர் காலத் திற்குக் காலம் வந்து குடியேறினர். இங்கு கலிங்கரும், படையாட்சி குலத்தவரும் செங்கோலோச்சி வந்தனர். இது இவ்வாறு இருந்த போதும் மட்டக்களப்பு மாநிலத்தில் படிப்படியான மாறுதல்கள் அன்றி புரட்சிகரமான சமூக அரசியல் மாறுதல் எதுவும் ஏற்பட்ட தாக தெரியவில்லை. எனவே இம்மாநிலத்தில் உட்பகுதிகளில் ஆதிக் குடிகளாகிய வேடர் மட்டக்களப்பு இராட்சிய காலத்திலும் அதற்கு முன்னும், பின்னும் செறிந்து வாழ்ந்து வந்தனர் எனலாம்.

**வேடர்**

இலங்கையின் ஏனைய பாகங்களில் வரலாற்று மாறுதல் ஏற்படும் போதெல்லாம் அங்கு வாழ்ந்த வேடர் தாம் சுதந்திரமாக வாழ்வ தற்கு கிழக்கிலங்கை பொருத்தமானதென தெரிந்து எடுத்துக் கொண்டனர். இதனால் அண்மைக் காலம் வரையும் மட்டக்களப் பின் உட்பகுதிகளில் வேடர்கள் குடியிருந்து வந்தனர். இவ் வேடர் கள் இயக்கரா? நாகரா? என ஆராய்வது அர்த்தமற்றதொன்று. எனினும் இவர்கள் தன்மையை நோக்கும் போது ஆதி திராவிடர் களாகவும், சிவலிங்கம், நாகம் ஆகியவற்றை வழிபடுபவர்களாகவும் காணப்பட்டனர். இங்கு திருக்கோயில், மண்டூர், போரதீவு, கொக் கொட்டிச்சோலை, வெருகல் ஆகிய இடங்களில் அமைந்திருந்த சைவ ஆலயங்களில் வழிபாட்டை ஆரம்பித்து வைத்தவர்களும் இவ்வேடர் களேயாவர். இத்தோடு மட்டக்களப்பில் குடியேறிய எல்லா சாகிய த்தாரோடும் இவ்வேடர்கள் இரண்டறக் கலந்துள்ளனர் என்பது இச்சாதிகளின் உட்பிரிவுப் பெயர்களில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

மண்முனையை அடுத்துள்ள முனைக்காடு, கொக்கொட்டிச் சோலை கிராமங்களை உள்ளடக்கியதாக பரந்த வெண்மணற் பரப்பு காணப்படுகிறது இம்மணல் செறிந்த காட்டுப் பகுதியில் வாழ்ந்து

வந்த வேடர் 'மணற்காட்டு வேடர்' என அழைக்கப்பட்டனர். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் கொத்துப் பந்தலிட்டு வழிபாட்டை ஆரம்பித்து வைத்தவர்களும் இவர்களே யாவர் இம் மணற்காட்டு வேடர் வீரம் மிக்கவர்களாகவும், தேன் இறைச்சி, ஆகியவற்றோடு ஆக்காண்டி முதலிய பறவை முட்டைகளில் மிக்க விருப்பம் உடையவர்களாகவும் இருந்தனர் என்பது மரபு வழியான கதைகளில் இருந்து அறிய முடிகின்றது.

#### கலிங்கர்

வேடர்கள் செறிந்து வாழ்ந்த மட்டக்களப்பில் வெளியில் இருந்து வந்து குடியேறியவர்களுள் முக்கியமானவர்கள் கலிங்கர். இவர்கள் கலிங்க தேசத்தில் இருந்து வந்தவர்கள். கலிங்க தேசம் எது? என்பது இலங்கை வரலாற்று ஆசிரியரிடையே கருத்து வேறுபாடு இருந்தாலும் இந்தியாவில் கிழக்குக் கரையில் உள்ள ஒரிசா மாநிலமே அது என மட்டக்களப்பு மான்மியம் அறுதியிட்டுக் கூறுகின்றது. இக் கலிங்கத்திற்கும், இலங்கைக்கும் இடையோன தொடர்பு விஜயனது காலம் முதல் இருந்து வருவதாக இலங்கை வரலாற்றால் அறிந்து கொள்ளலாம். கி. பி 2ம் நூற்றாண்டில் இருந்தே புத்தரின் புனித தந்தம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. 4ம் மகிந்தன், 1ம் விஜயபாகு முதலிய இலங்கை மன்னாகள் கலிங்கத்துடன் மணவினை தொடர்பு கொண்டிருந்தனர். பொலநறுவை இராட்சியத்தின் இறுதிக் காலத்தில் நிசங்க மல்லன், மாகோன் முதலிய கலிங்க மன்னர்கள் அரை நூற்றாண்டு காலம் இங்கு ஆட்சி செய்தனர். இவற்றை விட உறுகுணை, மட்டக்களப்பு இராட்சியங்களில் கலிங்கர் செல்வாக்கு எப்படியிருந்ததென்பது இலங்கை வரலாற்றில் தெளிவாகக் கூறப்படவில்லை. எனினும் இலங்கையில் வேறு எந்த இடத்திலும் இல்லாத அளவு மட்டகளப்பு மானிலத்தில் கலிங்கர் செல்வாக்கு இருந்ததென கொள்ள இடமுண்டு.

மட்டக்களப்பு இராட்சியத்தின் தென்பகுதிகளில் கலிங்கர் பண்டைக் காலத்திலேயே குடியேறி இருந்தனர். ஆனால் இன்றைய மட்டக்களப்பு மாவட்டத்துள் கலிங்கர் கி.பி 9ம் நூற்றாண்டளவில் மண்முனையிலே முதன் முதலில் குடியேறினர். இதற்கு முன் படுவான்கரையில் போரதீவு, அம்பிளாந்துறை, பங்குடாவெளி ஆகிய இடங்களில் மற்றவர்களின் சிறுசிறு குடியேற்றங்கள் இருந்ததாக அறிய முடிகின்றது. இம் மண்முனைக் கலிங்கர் குடியேற்றத்தின் தாபகரும், முதல் அரசியும் உலகநாச்சி என்பாள் ஆகும். இக் குடியேற்றம் நிகழ்ந்த போது விஜயதூபீவத்தை மேகவண்ணனும், மட்டக்களப்பை குணசிங்கனும் ஆட்சி செய்து கொண்டிருந்தனர் என மட்டக்களப்பு மான்மியத்தால் அறியலாம்.

மண்முனையில் கலிங்கரால் தோற்றுவிக்கப்பட்ட நகரம் இன்றைய தாளங்குடா, மண்முனை, ஒல்லிக்குளம், செண்பக வன்னித்

தோட்டம், கோயில்குளம், சிகரம் ஆகிய இடங்களை உட்படுத்தியதாக இருந்தது. இந் நகரில் இருந்த சிகரமும், தீர்த்தக்குளமும் கொண்ட சிவாலயத்தின் அழிபாட்டினை கோயில் குளத்தில் இன்றும் காணலாம். இவ்வாலயத்தில் இருந்த சிவலிங்கமும், வேறுசில பொருட்களும், கட்டடத்திற்கு பயன்படுத்திய வகைவகையான செங்கட்டிகளும் அங்கு சிலர் பாதுகாப்பாக வைத்திருப்பதை காண முடிந்தது. இந்நகரில் இருந்த மக்கள் பாவித்த மரக்கொட்டு கிணறுகளின் அடிப்பபாகங்கள் பல இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தோடு மண்முனை அரசமாளிகை இருந்த இடத்தை ''மாளிகையடி'' என்றும், வேடர்கள் புறம்பாக குடியிருந்த இடத்தை ''வேடர்குடியிருப்பு'' என்றும் அழைத்து வருகின்றனர். இவ்விடங்கள் இன்றைய தாளங்குடாவில் உள்ளன.

கலிங்கர் - வேடர் பகைமை

மண்முனையில் கலிங்கர் குடியேறிய காலத்தில் அங்கு வாழ்ந்த ஆதிக் குடிகளாகிய வேடருக்கும் கலிங்கருக்கும் ஏதும் முரண்பாடுகள் தோன்றியதாகத் தெரியவில்லை. மண்முனை நகரில் ஒரு பகுதியில் வேடர்களும் தொடர்ந்து குடியிருந்து வந்தனர். இத்தோடு உலகநாச்சி கொக்கட்டிச்சோலைதான்தோன்றீச்சரத்தைகற்கோயிலாக அமைப்பதற்கு வேடர்கள் சிறந்த ஒத்துழைப்பு நல்கியுள்ளனர் என்பது மட்டக்களப்பு மான்மியத்தால் அறிய முடிகின்றது. எனினும் இங்கு கலிங்கர்களுக்கும், வேடர்களுக்குமிடையே காலப்போக்கில் முரண்பாடுகள் தோன்றத் தொடங்கின.

மண்முனையில் குடியேறிய கலிங்கர் வேளாண்மை செய்வதையும், மந்தை வளப்பதையும் தங்கள் தொழிலாகக் கொண்டனர். வேளாண்மை செய்வதற்கு மண்முனையில் உள்ள வாரியா வெளி என்னும் பகுதியினையும், மண்முனை ஆற்றின் மத்தியில் உள்ள பெரியதீவு, சிறுத்தீவு ஆகியவற்றையும் ஆரம்பத்தில் பயன்படுத்தினர். மந்தை வளர்ப்பதற்கு மண்முனையில் போதிய புல்தரையும் வசதிகளும் இல்லாததால் படுவான் கரைக்கு செல்ல நேர்ந்தது. ஆரம்பத்தில் கலிங்கர் மாடு வளர்ப்பதற்காக பயன்படுத்திய இடங்கள் பட்டியடிக்குடா, காலவாசல், என்னும் பெயருடன் மகிழடித்தீவில் இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. மண்முனையில் இருந்த கலிங்கச் சிறுவர்கள் மாடு மேய்ப்பதற்காக படுவான்கரைப் பக்கம் பகல் பொழுதில் செல்வது வழக்கம். அவ்வேளைகளில் வேடர்கள் உணவுக்காக கண்டு வைக்கும் ஆக்காண்டி முதலிய பறவைகளின் முட்டைகளை இச் சிறுவர்கள் தொடர்ந்து எடுத்து தொல்லை கொடுத்து வந்தனர். இதனாலும், வேறு காரணங்களாலும் வெறுப்புற்ற வேடர் காலையில் அடைக்கப்பட்டிருந்த கலிங்கர்களின் பசுக் கன்றுகளை முற்றாக கொன்று மரங்களில் தூக்கி விட்டனர். இது

நிகழ்ந்த இடம் மகிழடித்தீவுக்கு கிழக்கில் உள்ளது. இந்த இடம் ''கனறு தூக்கி முனை'' என இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது. இதனால் கலிங்கருக்கும், வேடருக்கும் இடையே பகைமை மிக வலுப் பெறறது

இத்தோடு கலிங்கர் தங்கள் வேளாண்மைச் செய்கையை மண் முனைக்கு படுவான்கரைப் பக்கமாக உள்ள உச்சமுனை எனும் பகுதிக்கும் விஸ்தரித்தனர். படுவான்கரைப் பக்கம் வேளாண்மை செய்வதில் வேடர்களின் தொல்லை கலிங்கர்களுக்கு பெரும் சவாலாக இருந்தது. இதனால் வேடரை அழிக்க வேண்டும் அல்லது கலிங்கர் குடிபெயர வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. இந் நிலையில் வேடர்களின் தலைவர்களையும், நாட்டாண்மைக் காரர்களையும் அழித்து விடுவதற்கு கலிங்கரால் திட்டம் தீட்டப்பட்டது. இத்திட்டத்தில் உருவாகியதே தெம்மத்தின் கிணற்றடி யமுது.

அமுதின் ஆரம்பம்

பரந்து வாழ்ந்த வேடர்களை அழித்தொழிப்பதற்கு ஓரிடத்தில் அவர்களை ஒன்றாகச் சேர்க்க கலிங்கர் எண்ணினர் பெரும்போக அறுவடையை அடுத்து பெரியதொரு விருந்துக்கு வருமாறு வேடர்களுக்குப் பரவலாக அழைப்பு கொடுக்கப்பட்டது; தெம்மத்தன் கிணற்றடியில் சூத்திரமான ஒரு பந்தல் போடப்பட்டது. பந்தலின் மேற்பரப்பில் பாரமான பெரிய மரங்கள் பரப்பப்பட்டிருந்தன. ஒரு பொறியை எடுத்து விட்டால் பந்தல் கால்கள் எல்லாம் சாய்ந்து விழும்படி அப்பந்தல் போடப்பட்டிருந்தது. வேடர்கள் இப் பந்தலில் இருந்து விருந்துண்டு முடிவடையும் தறுவாயில் பந்தற் பொறி எடுத்து விடப்படவே பந்தலின் மேற்பகுதி விழுந்து விருந்தாளிகளை அமத்தியது. இப்பந்தலுள் அகப்பட்டவர்களும், இதில் இருந்து விடுபட்டு ஓட முயன்றவாகளுமான வேடர்கள் அனைவரும் பல வழிகளிலும் கொலை செய்யப்பட்டனர். இதனால் வேடர்களின் எதிர்ப்பு கலிங்கரால் முறியடிக்கப்பட்டது. தெம்மத்தன் கிணற்றடி அமுதின் ஆரம்பம் இவ்வாறு அக்கிருமமும், சதியும், கொலையும், நம்பிக்கை மோசடியும், அதிகார வெறியும் கொண்ட அருவருப்பான நிகழ்ச்சியாக அமைந்தது.

இவ் அக்கிருமச் செயலுக்கு பிராயச்சித்தம் தேடும் வகையில் கலிங்கர்கள் இவ் அன்னதானத்தைத் தர்ம வழியில் செய்துவர ஆரம்பித்தனர். குறித்த அக்கிருமம் நடந்த இடத்தில் அன்னதானம் கொடுப்பதற்காக பெரியதொரு மரக் கொட்டுக் கிணறு ஒன்று அமைக்கப்பட்டது. பெரும்போக அறுவடையின் பின் ஒருநாள் நெல் உற்பத்தியாளர் எல்லோரும் சேர்ந்து அறுசுவையுடன் பல ஆயிரம் மக்களுக்கு உணவளித்தனர். பல மைல்கள் தூரத்தில் உள்ளவர்களும் இவ் அன்னதானத்தை நாடி வரத் தொடங்கினர். மண்முனை இராச்சியத்தின்

கலிங்கர் ஆட்சி நிலவிய சுமார் நான்கு நூற்றாண்டுகள் இவ்வமுது தவறாது சிறப்பாக அரச ஆதரவோடு கொடுக்கப்பட்டு வந்தது.

இதையடுத்து கலிங்கர் மண்முனையில் வீழ்ச்சியுற்றனர். இவ் வீழ்ச்சிக்கும், மண்முனை சிவாலய அழிவுக்கும் தென் இந்தியாவை பாதித்த முஸ்லிம்களின் படையெடுப்பின் ஒரு குழுவினரே காரணமாக இருந்திருக்கும் எனக் கருத இடமுண்டு. இத்தோடு பொலநறுவையில் கலிங்கர் ஆட்சி வீட்சியுற்றதும், வேறு இயற்கைக் காரணிகளும் மேலும் காரணமாக இருந்திருக்கலாம். இதையடுத்து மண்முனையில் இருந்த கலிங்கர் கன்னங்குடா, சோதையன்கட்டு, முதலைக்குடா ஆகிய கிராமங்களில் சென்று குடியேறினர். இவர்களே பிற்காலத்தில் உலக நாச்சிக்குடியார் அல்லது உலையப்போடி குடியார் எனக் கூறப் படுபவர்கள். கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரத்தின் முன்னோடி முகனையாக உள்ளவர்களும் இவர்களே. இதன்பின் 13ம் நூற்றாண்டில் பொலநறுவை ராச்சிய வீழ்ச்சியை அடுத்து கலிங்கர் குடியேற்றம் ஏறாவூர், சத்துருக் கொண்டான் ஆகிய இடங்களில் மேலும் ஏற்பட்டதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**படையாட்சி குல ஆதிக்கர் காலம்**

மண்முனைப் பிரதேசத்தில் கி.பி. 13ம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இருந்து இரண்டு நூற்றாண்டுகள் படையாட்சி குலத்தவரின் செல்வாக்கு அதிகரித்திருந்தது. மட்டக்களப்பு இராச்சியத்தின் தெற்குப்பக்கங்களில் இருந்த இவர்கள் மண்முனை, கிரான்குளம், புதுக் குடியிருப்பு, படையாண்ட வெளி ஆகிய கிராமங்களில் வந்து குடியேறினர் இத்தோடு படையாண்டவெளி, படையாண்டகுளம் முதலான பலநூறு ஏக்கர் பரப்புள்ள காணிகளை வேளாண்மை செய்கை பண்ணவும் தொடங்கினர். பிற்பட்ட காலத்தில் தெம்மத்தின் கிணற்றடிக்கு அருகாலுள்ள சேவகப்பற்று என்னும் நெற்காணிப்பரப்பு படையாட்கி குலத்தவர்க்கு கண்டி மன்னனால் மானியமாக கொடுக்கப்பட்டது. இக் காலத்தில் மட்டக்களப்பு இராச்சியம் எங்கணும் வாழ்ந்தகலிங்கர் பணிக்கர், படையாட்சி குலத்தவர் ஆகிய முப்பிரிவினரும் இணைந்து தங்களை முக்குலத்தவர் என அழைத்துக் கொண்டனர். எனவே பொருளாதாரப் பெருக்கமும், சமுக ஒற்றுமையும் நிலவிய இக் கால கட்டத்தில் தெம்மத்தின் கிணற்றடி அமுது பெருமளவில் வெகு கிறப்பாகவே நடைபெற்றது எனலாம். 15ம் நூற்றாண்டில் மட்டக்களப்பு வாவியில் திமிலர்களின் செல்வாக்கு அதிகரித்தாலும் அது விவசாயத்தையோ. தெம்மத்தன் கிணற்றடி அமுதையோ பாதித்தது என்பதற்கில்லை.

**கண்டி இராச்சிய ஆதிக்கர் காலம்**

கி. பி. 8ம் நூற்றாண்டில் இருந்து அரேபியர் ஆகிய பட்டாணிகளும், மலபாரிகளாகிய முக்குகரும் இலங்கையின் மேற்குக் கரை

யில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தனர். இவர்கள் 14ம், 15ம் நூற்றாண்டுகளில் இலங்கையில் கிழக்குக் கரையோரத்தோடும் தொடர்பு பட்டனர். மலைநாட்டில் கறுவாப்பட்டை பெறுவத்றகாக மட்டக்களப்பினூடாக இவர்கள் பயணம் செய்து வந்தனர். 16ம் நூற்றாண்டு போர்த்துக் கேயர் கோட்டை இராச்சியத்தை கைப்பற்றியதும் அங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டு இருந்த முக்குகரும் பட்டாணிகளும் சீதவாக்கையில் இருந்து கண்டி இராச்சியத்தினூடாக மட்டக்களப்பில் பெருமளவில் வந்து குடியேறினர். இவ்வாறு வந்த முக்குகரும், இங்கு வாழ்ந்த மூக்குலத்தவரும் இரண்டறக் கலந்து 'மட்டக்களப்பு முக்குகர்' என்னும் தனித்துவமான சாதி உருவானது.

இக் காலத்தில் கண்டி இராச்சியத்தின் ஆதரவின் கீழ் முக்குகத் தலைவர்கள் மட்டக்களப்பை ஆட்சி செய்து வந்தனர். இப்பகுதிகளில் உள்ள ஆயிரக் கணக்கான ஏக்கர் காணிகள் இவர்களால் நெல் வயலாக்கப்பட்டன. இக்காலப் பகுதியில் தெம்மத்தின் கிணற்றடி அமுது வெகு சிறப்புப் பெற்றது. கண்டி மன்னனின் ஆணையின் கீழ் மானிய கால சமுதாய அமைப்பு முறையில் ஒவ்வொரு சாதிகளும் தெம்மத்தன் கிணற்றடி அமுதுக்கு செய்ய வேண்டிய பங்களிப்பு வகுக்கப்பட்டு இருந்தது சோனகர் விறகு கொடுத்தல், கோவிலார் சோறு, கறி, சமைத்தல். வண்ணார் வெள்ளை கட்டுதல், நாவிதர் காகம் துரத்துதல் என கடமைகள் வகுக்கப்பட்டு இருந்ததாக மரபு வழிச் செய்திகள் கூறுகின்றன. காகம் துரத்திய நாவிதருக்கு மானியமாகக் கொடுத்த நெற்காணி 'அம்பட்டன் கீத்து' என்று இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. இவ்வகைகளில் தெம்மத்தன் கிணற்றடி அமுதின் அதியுயர்ந்த காலம் இக்காலம் எனலாம்.

டச்சுக் காரர் காலம்

டச்சுக் காரர் மட்டக்களப்பில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டமுற்பட்ட போது முக்குகத் தலைவர்களை பேர் எதிரிகளாகக் கருதினர். முக்குகரது பாரம்பரிய ஆவணங்கள் பறிக்கப்பட்டதோடு புதுக்குடியிருப்பு 'ஏத்துப்பட்ட நோஞ்சிப் போடி' முதலான முக்குகம் போடிமார் படுகொலை செய்யப்பட்டனர். இதனால் இச்சாதித் தலைவர்கள் ஒழித்தோட வேண்டியதாயிற்று. இத்தோடு தெம்மத்தன் கிணற்றடி அமுதுக்கு பேருதவியாக இருந்த உச்சமுனை, பெரியதீவு, சிறுத்தீவு, ஆகிய நெல் வயல்கள் உப்புக் கரச்சைகளாக மாறின. சேவகப்பற்று நெல்வயல் செய்கை பண்ணாது விடப்பட்டது. இவற்றாலெல்லாம் தெம்மத்தன் கிணற்றடி அமுது 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 18ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. அல்லது கைவிடப்பட்டது என்று கூறலாம்.

டச்சுக் காரர் அவர்கள் ஆட்சியின் நடுப்பகுதியில் மட்டக்களப்பின் பாரம்பரிய வரலாற்றை அறிந்து கொண்டதோடு முக்குகரின் உண்மை நிலையையும் உணர்ந்து கொண்டனர். மட்டக்களப்பின் நிர்வாகம் முக்குகரின் கையில் மீண்டும் கொடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாநிலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கந்தப்போடியும், அறு

மக்குட்டிப் போடியும் போடி நிலமைகளாகநியமனஞ் செய்யப்பட்டனர். இங்கு சிவில் வழக்குகள் அனைத்தும் முக்குகச் சட்டத்தின் கீழ் தீர்க்கப்பட்டன. காணி நீதிமன்றங்களின் நடுவர்களாக முக்குகப் போடிமார் நியமனம் செய்யப்பட்டனர். இத்தகைய அரசியல் சூழ்நிலையில் செய்கை பண்ணாது விடப்பட்டு இருந்த சேவகப்பற்று நெல் வயற்பரப்பை முதலைக்குடா, மகிழடித்தீவு, மக்கள் தங்களுக்குள் பகிர்ந்து வேளாண்மை செய்யத் தொடங்கினர். இபின்பின் தெம்மத்தன் கிணற்றடி அமுது சேவகப்பற்று போடிமார் மாத்திரம் நடத்தும் அமுதாக மீண்டும் புத்துயிர்ப்பு பெற்று நடைபெற்று வந்தது.

பிற்பட்ட காலம்

19ம் நூற்றாண்டில் சேவகப் பற்று நெல் வயல் விளைவற்றுப் போன காலம் தவிர எல்லா ஆண்டுகளிலும் தெம்மத்தன் கிணற்றடி அமுது சிறப்பாக நடைபெற்று வந்தது. இதில் முக்கிய அம்சம் இக்காலப் பகுதியில் தான்தோன்றீச்சரத்திற்கும், இந் நிகழ்ச்சிக்கும் இருந்த மிக நெருக்கமான உறவாகும். பெரும்போக அறுபடை முடிவடைந்ததும் சேவகப் பற்று போடிமார் எல்லோரும் ஒருங்கிணைந்து தான்தோன்றீச்சரத்தில் அபிஷேக பூசை நடாத்தி அதைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை போல தெம்மத்தன் கிணற்றடி அமுதை நடாத்தி வந்தனர். வேளாண்மைக்கு மழை வேண்டும் போது தான்தோன்றீஸ்வரரை வழிபட்டு தெம்மத்தன் கிணற்றடியில் கட்டை ஒன்றினை புதிதாக வெட்டி நேர்த்தி வைத்தனர். அதன் அர்த்தம் அக்கட்டை உருண்டு போகும் அளவிற்கு பெரு மழை பெய்ய வேண்டும் என்பதேயாகும். இவ்வாறு மழை பெய்து விளைந்த பின் சிறப்பாக அபிஷேக பூசை நடாத்தி தெம்மத்தன் கிணற்றடி அமுது கொடுத்து வந்தனர். இன்னுமொரு முக்கிய நிகழ்ச்சி தெம்மத்தன் கிணற்றடியில் இருந்து தான்தோன்றீச்சரத்திற்கு புதிர் கோட்டை காவிச் செல்லும் நிகழ்ச்சியாகும். நூற்றுக்கும் மேற்பட்ட சேவகப் பற்று விவசாயிகள் அலங்கரிக்கப்பட்ட புதிர் கோட்டைகளை காதடியில் கொட்டு முழக்கம், குரவைச் சத்தத்தோடு வரிசையாக காவிச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

20ம் நூற்றாண்டின் ஆரம்பக் காலங்களில் சேவகப்பற்று போடிமார் மத்தியில் ஊர்ப் பிரிவினை தோன்றியது. இதனால் தெம்மத்தன் கிணற்றடி அமுது இடையிடையே பாதிக்கப்பட்டு இறுதியாக 1920 ஆண்டை அடுத்த சில ஆண்டுகளில் அறவே மறைந்து விட்டது. அதன்பின் சில தடவைகளில் இவ்வமுதைச் செய்ய முயற்சித்தும் அம்முயற்சி உயிர் பெறவில்லை. இவ்விடத்தில் இருந்த மேற்பகுதி கல்லினாலும், கீழ்ப்பகுதி மரத்தினாலும் ஆன தர்ம அன்னதான கிணறும் இடிந்து ஆழிந்து பூமியில் அடங்கி விட்டது.

தெம்மத்தன் கிணற்றடி அமுது மறைந்து போனாலும் இது பற்றிய செய்திகளும், கதைகளும், உவமைகளும் இப்பிரதேச மக்களால் தொடர்ந்து மரபு வழியாக காப்பாற்றப்பட்டு வருகின்றன. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றினைக் கொண்ட இந் நிகழ்ச்சியை ஆராய்வதன் மூலம் குறிப்பாக மண்முனைப் பிரதேசத்தின் வரலாற்றினையும் பொதுவாக மட்டக்களப்பின் வரலாற்றினையும் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

# "சுனி" ஒரு கலகக்காரி

—சாருமதி

சீதையைப் பாயச் சொன்னான்
தீயுக்குள் இராமன்
தனக்கும் அந்த
நியாயத்தை பிரயோகிக்காமல்

இந்திரனுக்கு ஏமாந்தவள்
அகலிகை மட்டும் தானா?
இல்லையே!
தபோமுனியும்
தவறிழைத்தான் தானே?
ஆனால்
தண்டிக்கப் பட அகலிகை
தண்டிக்க கௌதமன்
இது என்ன நியாயம்?

மாதவியும்
மனிதப் பிறவி தானே!
கானல் வரி பாடி
அவளை
வேசை யென்று சொல்லி
விட்டு விலகிப் போன
கோவலன் மட்டு மென்ன
கற்புக்கு அரசனா?

பண்டைய இந்தியாவின்
பல கதைகள் இப்படித்தான்
பண்டைய இந்தியா என்ன
இன்றய இந்தியாவிலும்
இவைதான் கதைகள்
''சுனி கொத்தால்''
அந்தக் கதைகளின்
இன்றைய நாயகி

இந்தியாவின்
இந்து சனாதனம்
அசிங்கங்களின் குப்பைத் தொட்டி
சுனி
அதையே கண்டனம் செய்தாள்
தன்னைத் தானே
கொன்று போட்டதால்

தற் கொலைகள்
அப்படி யொன்றும்
முட்டாள் தனமானது மல்ல
கோழைத் தனமானது மல்ல
அது ஒரு கலகம்
அநீதிகளுக்கு எதிரான
கண்டனப் பிரகடனம்

சுனி
கலகக்காரி
கலகம் செய்வது
நியாயம் ஆனது
அதையே
அவள் செய்தாள்.

சுனி
அவளுக்காக
செய்ய வேண்டிய தெல்லாம்
அஞ்சலிகள் அல்ல
ஆத்திரம் உறலே.

✱ சுனில் கொத்தால் ''லோகபா'' பழங்குடியைச் சேர்ந்தவள் அந்த பழங்குடியின் முதற் பட்டதாரி. மேற்கு வங்காள பல்கலைக் கழக மொன்றில் M.A. கற்கைநெறி மாணவி பல்கலைக்கழகத்தில் சாதி ரீதியாக அவளுக்கு இழைக்கப்பட அநியாயங்களுக்கு எதிராக அவள் தற் கொலை செய்து கொண்டாள்.

# சமாதானம்

—சுபத்திரன்—

ஓ! அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போர்ச் சுறாக்களே!

இந்து சமுத்திரத்தின் அலைகளில் உலாவும் நெத்தலி மீன்கள்

உனது போரொத்திகை கண்டு திகிலடைந்து ஒழித்து விடவில்லை

அவை உமது கொடுமையை எதிர்த்து திமிங்கிலங்களாக வளருகின்றன.

இந்து சமுத்திரத்தின் சமாதானத் தோணிகள்

உனது போர்க் கப்பலை மூழ்கடிக்கும்

ஐ. நா. வின் பேச்சு மேடையில்

சமாதானம் நம்பிக்கை வைக்கவில்லை

உனது அழிவுக் காலப் போர்முனையில்

சமாதானம் நம்பிக்கை வைத்துள்ளது.

22 கரட் நம்பிக்கையான நகைகளைப் பெற
இன்றே நாடுங்கள்.

## உதயா நகை மாளிகை

நாணயம் நேர்மை எங்கள் நாளாந்த சேவை
அழகிய கலை நுணுக்க ஆபரணங்களுக்கு
பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

**உதயா நகை மாளிகை**

39, பிரதான வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி - 065 — 2619

உங்கள் பாவனைக்குத் தேவையான
விளையாட்டுப் பொருட்கள் - பரிசுப் பொருட்கள்
கைக்கடிகாரங்கள் அலுமனியம் - இனாமல் மட்பாண்டங்கள்
மாதர்களின் அழகு சாதனப் பொருட்கள்
இன்னும் பலவற்றைப் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்.
மங்கையரின் கனவுலகம்... குழந்தைகளின்
மகிழ்வுலகம்

## பFவு லீஸ்

58 பிரதான வீதி மட்டக்களப்பு.
தொலைபேசி - 065 - 2215

அழகிய சிறந்த பவுண் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

# ரூபா

குறித்த தினத்தில் உத்தரவாதத்துடன் ஓடர் நகைகள் செய்து தரப்படும்.

அடவு வைத்த நகைகள் மீட்டு நியாய விலைக்கு வாங்கப்படும்.

நாகரீக உலகு நாடும் நவீன டிசைன்களுக்கு நாட வேண்டிய இடம்

## ரூபா ஜுவல்லரி மாட்

இல. 69, பிரதான வீதி, மட்டக்களப்பு.

---

★ தமிழ் ஆங்கில ஹிந்தி திரைப்படங்களை வாடகைக்கு பெற சிறந்த முறையில் பதிவு செய்ய

★ பழைய, புதிய திரைப்பட பாடல்கள், திரைப்படக் கதை வசனம், பக்திப்பாடல்கள் கந்தஷஷ்டி கவஷம் போன்றவற்றை பதிவு செய்ய

மட்டக்களப்பில் சிறந்த ஸ்தாபனம்

## நீயூ ஈஸ்ரன் வீடியோ ஓடியோ சென்ரர்

இல. 89, பிரதான வீதி,
மட்டக்களப்பு.

சிறந்த சுகாதார முறையில்

★ பேக்கரி பொருட்கள்

★ சிற்றுண்டி வகைகள்

நாடவேண்டிய இடம்

**நியூ பேக்கரி**

ஓடர்களும் ஏற்றுக்
கொள்ளப்படும்.

இல. 2, இரண்டாம் குறுக்
குத் தெரு,
மட்டக்களப்பு.

---

சுவையில் தரத்தில் சிறந்த

❀ தரமான பாண்

❀ பால் பாண்

❀ கேக் வகைகள்

❀ குளிர் பானவகைகள்

நாட வேண்டிய இடம்

**நியூ எம்பயர்**
**பேக்கரி**

இல. 58, திருமலை வீதி
மட்டக்களப்பு.

---

அழகிய நாகரீக மோஸ்தர்களில்
அசல் பவுண் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**அம்பாள்ஸ்**

ஆபரண மாளிகை

இல. 36, பிரதான வீதி,
மட்டக்களப்பு.

---

● அழகிய பட்டு, பருத்தி,
றெடிமேட் ஆடைகள்

● பல் வகையான துணிகள்

நியாய விலையில் பெற

**நியூ மர்ழியாஸ்**

இன்றே விஜயம் செய்யுங்கள்.

44, பிரதான வீதி,
மட்டக்களப்பு.

☎ 065 - 2900

தரமான சகலவித பாவனைப் பொருட்களையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில்
பெற்றுக்கொள்ள மட்டுமாநகரில்

அன்றும் இன்றும் என்றும்

தலை சிறந்ததோர் ஸ்தாபனம்

# வேல் முருகன் ஸ்ரோஸ்

இல. 19. யூ. டி. ஏ. கட்டிடம்
பொதுச் சந்தை, மட்டக்களப்பு.

தொலைபேசி - 065 – 2532.

## THE FOUR - WAY TEST

of the things we think, say, or do

1. Is it the TRUTH?
2. Is it FAIR ot all concerned?
3. Will it build GOODWILL and BETTER FRIENDSHIPS?
4. Will it be BENEFICIAL to all concerned?

THE ROTARY CLUB OF
BATTICALOA.

தரமான புதிய பழைய
பட வீடியோ பிரதிகளுக்கு
நகரில் ஒரே ஸ்தாபனம்

# வீடியோஸ்பதி

22, பார் வீதி,
மட்டக்களப்பு.
(E T I முன்பாக)

115, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
(செல்வநாயகம் பெற்றோல் நிலையம் முன்பாக)

# VIDEOSPATHY

(ONE AND ONLY)


இச்சஞ்சிகை மட்டக்களப்பு புனித செபத்தியார் அச்சகத்தில் அச்சிட்டு வயல் ஆசிரியர் குழுவினால் 08.01-93ல் வெளியிடப்பட்டது.